உலகைக் காட்டும் பலகணி

யுனெஸ்கோ

கூரியர்

பிப்ரவரி 1970 ஆண்டுச் சந்தா ரூ. 10·50 தனிப்பிரதி ரூ. 1·00



1970

கல்வியில் நெருக்கடியான கட்டம்

கலைக்களஞ்சிய எழுத்தர்

உலகக் கலைக் கருவூலங்கள்

40

மூல நூலைப் பார்த்து எழுதும் எழுத்தரைக் காட்டும் இந்த பாக்தாத் (ஈராக்) நுண்ணோவியம் முகமதிய ஊழியின் (கி. பி. 1287) 686ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இது கி. பி. 10ஆம் நூற்றுண்டில் ஈராக்கிலுள்ள பஸ்ராவில் வாழ்ந்த தத்துவ, விஞ்ஞான கூட்டத்தினராகிய தூய குழுவினர் எழுதிய "முடங்கல்"களின் கையெழுத்துப்படியில் மிளிர்ந்தது. இவ்வறிஞர்களின் முடங்கல்கள் கணிதம், அளவியல், அறிவியல், உளவியல், அடிப்படைத் தத்துவம் ஆகியவை பற்றிய 52 ஆய்வுக் கட்டுரைகளடங்கிய கலைக் களஞ்சியமாக விளங்கியது. அதன் கருத்துக்கள் பல இஸ்லாமிய மரபுக் கோட்பாடுகளுக்கு முரணாக இருந்தன. கி. பி. 12ஆம் நூற்றுண்டில் "குழு"வினரின் நூல்கள் பல எரிக்கப்பட்டன.

Photo © Robert Laffont Archives—Suleymaniye Library, Istanbul (Turkey)

யுனெஸ்கோ கூரியர்

பிப்ரவரி 1970

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினுல் வெளியிடப்படுகிறது.

யுனெஸ்கோவினுல் பதின்மூன்று பதிப்புகளாக வெளியிடப்படுகிறது.

ஆங்கிலம்	ஜப்பானிஸ்
ஃபிரெஞ்சு	இத்தாலியன்
ஸ்பானிஷ்	ஹிந்தி
ரஷ்யன்	தமிழ்
ஜெர்மன்	ஹீப்ரு
அராபிக்	பெர்சியன்
அமெரிக்க ஐக்கிய நாடு	

விற்பனை, வினியோக அலுவலகம்:
458, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10.
ஆண்டுச் சந்தா ரூ. 10.50

யுனெஸ்கோ கூரியர், செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. செப்டம்பர்—அக்டோபரில் ஒரே இதழாக வெளிவரும் (ஆண்டுக்கு 11 இதழ்கள்) பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும், கட்டுரைகளையும் யுனெஸ்கோ கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டு வெளியிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்பட வேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெற வேண்டும். பதிப்புரிமை அல்லாத புகைப் படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெருத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோவின் அல்லது **யுனெஸ்கோ கூரியர்** ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளேஸ் த ஃபான்டினுய்
பாரிஸ்-7. ஃபிரான்ஸ்.
பிரதம ஆசிரியர்:
ஸாண்டி காஃப்ளர்
உதவிப் பிரதம ஆசிரியர்:
ரெனி காலோஸ்
பிரதம ஆசிரியருக்கு உதவியாளர்:
லூஸியோ அட்டினெல்லி
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலப் பதிப்பு: ரொனல்ட் ஃபென்டன் (பாரிஸ்)
ஃபிரெஞ்சுப் பதிப்பு: ஜேன் ஆல்பர்ட் ஹெஸ்ஸே (பாரிஸ்)
ஸ்பானிஷ் பதிப்பு: அர்ட்டுரோ டெஸ்பூயே (பாரிஸ்)
ரஷ்யன் பதிப்பு: விக்டர் கோலியச்காவ் (பாரிஸ்)
ஜெர்மன் பதிப்பு: ஹான்ஸ் ரீபன் (பெர்ன்)
அராபிக் பதிப்பு: அப்தல் மோனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ் பதிப்பு: ஷின்-இச்சி ஹஸகாவா (டோக்கியோ)
இத்தாலியப் பதிப்பு: மரியா ரெமிட்டி (ரோம்)
ஹிந்திப் பதிப்பு: ஏ. சந்திரஹாஸன் (டில்லி)
ஹீப்ரு: அலெக்ஸாண்டர் பெலி (ஜெருசலம்)
பெர்சியப் பதிப்பு: ஃபெரெதூன் ஆர்தலன் (டெஹ்ரான்)
தமிழ்ப் பதிப்பு: தெ. பொ. மீனுட்சிசுந்தரன் (சென்னை)
தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியருக்குத் துணைவர்கள்:
எஸ். கே. தம்பா, மீ. முகம்மது முஸ்தபா
ஆராய்ச்சி: ஓல்கா ரோடல்
அமைப்பு, சித்திரம்: ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியர் விலாசத்துக்கே எழுதப்பட வேண்டும்.

The UNESCO Courier

Febrauary, 1970 No. 31 - 32

பக்கம்

4 1970 பன்னுட்டுக் கல்வி ஆண்டு
—லியோ ஃபேர்னிக்

6 கல்வி ... யாருக்கு? ... எப்படி?
—பியர் ராண்டியர்

11 கல்விக்கும் அழிவுக்குமிடையே போட்டி
—ஹோவார்டு ப்ராபின்

13 உலகப் படைக்கலச் செலவு
—அடுத்த பத்தாண்டுகளில் 4,000,000,000,000 டாலர்

16 புதிய உலக எல்லையை எதிர்நோக்கும் வருங்கால மாணவன்
—ரெனே ஹபாஹி

21 தேவைக்கு மிகுதியான ஆசிரியர்களா?
—ஜான் செஸ்வாஸ்

24 சோவியத் பள்ளிகளின் புதிய நோக்கு
—இயோசிஃப் நெக்காம்கின்

27 கல்வி பற்றிய கேள்வி
—பால் லெங்கிராண்டு

34 யுனெஸ்கோ செய்தியறை

2 உலகக் கலைக் கருவூலங்கள்
—கலைக் களஞ்சிய எழுத்தர் (ஈராக்)

No. 11 - 1970 MC 69-1-231 F

அட்டைப் படம்

ஒவ்வொரு நாட்டிலும் அரசாங்கத்தையும் ஆசிரியர்களையும் பெற்றோரையும் இளைஞரையும் பாதித்து வரும் இன்றைய கல்வி நெருக்கடியை உலகிற்கு வலியுறுத்தி உணர்த்துவதற்காக 1970 ஆம் ஆண்டு பன்னுட்டுக் கல்வி ஆண்டாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உலகக் கல்வியில் நெருக்கடியை ஏற்படுத்தி அதன் நோக்கங்களையும் குறைகளையும் திரும்ப ஆயச் செய்யும் சிக்கலான பிரச்னைகள் சிலவற்றை இவ்விதழ் ஆய்கின்றது. பிற இயல்புகள் பன்னுட்டுக் கல்வி ஆண்டில் வரும் இதழ்களில் ஆயப் பெறும்.

1970 பன்னாட்டுக் கல்வி ஆண்டு

லியோ ஃபெர்னிக்

லியோ ஃபெர்னிக் ஜனவரி 1, 1970இல் ஜெனிவாவிலுள்ள பன்னாட்டுக் கல்விக் கழக இயக்குநராகப் பதவியேற்றார். முன்னால் அவர் யுனெஸ்கோவில் கல்வி வளர்ச்சித் துறை இயக்குநராக இருந்தார். 20 ஆண்டுகளாக யுனெஸ்கோவின் கல்வித் திட்டங்களை விரிவாக்கி செயல்படுத்தும் பணியில் பெரிதும் ஈடுபட்டிருந்தார்.

1970ஆம் ஆண்டு பன்னாட்டுக் கல்வி ஆண்டாகும். 1968இன் இறுதியில் ஐ.நா.வின் பொதுப் பேரவை ஒரே மனதாக இத்தீர்மானத்தை நிறைவேற்றியது. இஃது உலக சமுதாயம் பன்னாட்டுக் கல்வி ஆண்டின் தேவையையும் பயனையும் உணர்ந்துள்ளதைக் காட்டுகிறது. இதைப் பன்னாட்டு அளவில் செயல்படுத்தும் பொறுப்பு யுனெஸ்கோவிற்கு விடப்பட்டது.

கல்வி பேரளவில் நடைபெற்று வருகின்றது. ஆசிரியர்கள் தாம் உலகிலே மிகுதியான எண்ணிக்கையுள்ள துறையைச் சேர்ந்தவர்கள். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பிற கல்வி நிலையங்களிலும் எல்லாம் இடையறாது கல்வி வழங்கப்பெறுகின்றது. உலக மக்களில் பலர் அதில் ஈடுபட்டுள்ளனர். ஏன் அதற்கெனத் தனி ஆண்டை, பன்னாட்டு ஆண்டெனக் கொண்டாட வேண்டும்? இதற்குரிய எந்த விடையும் கல்வியைப் பொறுத்தவரையில் 1970 எந்த வகையில் 1969 அல்லது 1971லிருந்து வேறுபட்டுள்ளது என்பதை விளக்க வேண்டும்.

அளவிலும் இயல்பிலும் வளர்ந்து வரும் சிக்கல்கள் கல்வித்துறையில் உலகெங்கும் காணப்படுகின்றன. அக்டோபர், 1967இல் வெர்ஜீனியாவிலுள்ள வில்லியம்ஸ்பர்கில் ''கல்வியில் உலக நெருக்கடி'' என்பது பற்றி நிகழ்ந்த மாநாட்டில் கல்வி முறைகள் பலவற்றில் காணப்படும் குறைபாடுகளினால் விரைவில் நெருக்கடி விளையுமென்பது தெளிவாயிற்று. அம்மாநாட்டில்தான் பன்னாட்டுக் கல்வி ஆண்டு எனும் கருத்தும் தோன்றியது.

பொருளாதார வளர்ச்சிபெற்றுவரும் நாடுகளில் இச்சிக்கல்களை அவற்றுடன் தொடர்புடையவர்கள் நன்குணர்கின்றனர். கல்விக்கென அரசுகள் பெருந்தொகை செலவிட்டும், அதில் ஈடுபட்டுள்ளோர் அரும் முயற்சிகள் செய்தும் குறிக்கோளுக்கும் சாதனைக்குமுள்ள இடைவெளி இன்னும் விரிந்து கொண்டே செல்கிறது.

சுருங்கச் சொல்ல வேண்டுமெனில், புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் தமது குடிகளுக்கு ஓரளவு கல்வி வழங்க முயன்று வருகின்றன. ஏனெனில் இஃது மனிதனின் அடிப்படை உரிமையாகும். நாட்டு வளர்ச்சியை விரைவுபடுத்த நடுநிலையிலும் உயர்நிலையிலும் பயிற்சி பெற்றவர்கள் தேவைப்படுகின்றனராகையால், அவை தொடக்க நிலைக்குப் பிறகும் கல்வி வழங்குகின்றன. எனினும், மனிதநல, பொருளாதார குறிக்கோள்கள் பத்தாண்டுகளுக்கு முன்னிருந்ததுபோலவே தொலைவில் இருக்கின்றன.

மக்கள் தொகை பெருகி விட்டதாலும் பொருளாதார அமைப்புகள் விரைவில் பெருகாமையினாலும், கல்வி வளர்ச்சிக்கான முதலீடு பொருளாதார முதலீடாகும் எனும் எண்ணம் குறைந்து, இன்றைய கல்வி முறையினால் மெதுவான, குறைந்த பயனே விளைகிறதென்ற கருத்து வளர்ந்து வருகின்றது. இப்போது பள்ளிக்கூடங்களை நிறுவுவதால் விளையும் பொருளாதாரப் பயன்கள் அடுத்த ஆண்டில் அல்லது மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் புதிய பள்ளிகளைத் தொடங்கப் போதிய காலத்தில் வாய்ப்பதில்லை.

சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் நிலவிய படிப்பு முறைகள், பாடத் தொகுதிகள், பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றைத் தழுவிய கல்வி முறையினால் பெரிதும் பயன் விளையாமை வியப்பிற்குரியதாகும். பல மாணவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னே படிப்பை நிறுத்திவிடுகின்றனர்; அல்லது தேர்ச்சி பெறாமல் அதே வகுப்பில் பல ஆண்டுகளைக் கழிக்கின்றனர்.

அரசாங்கச் செலவைப் பொறுத்தவரையில், பொருளாதார வளர்ச்சி பெற்று வரும் நாடுகள் பலவற்றில் ஒரு மாணவனுக்குத் தொடக்கப் பள்ளிப் படிப்பு வழங்குவதற்கு, ஒவ்வோர் ஆண்டும் ஒரு வகுப்பைப் படித்து முடிக்க எவ்வளவு செலவு ஏற்படுமோ அதைப்போல்

---

(1) பிலிப் எச். கூம்ப் எழுதிய 1968இல் ஆக்ஸ்ஃபோர்டு யுனிவர்சிட்டி பிரஸ் வெளியிடான ''உலகக் கல்விப் பிரச்னைகள்: ஒரு வழிமுறை ஆய்வு" என்ற நூலைப் பார்க்கவும்.

இரண்டு முதல் நான்கு மடங்கு செலவு ஏற்படுகின்றது.

வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளில் பொருளாதார நிலை உயர்ந்ததாக இருக்கலாம். ஆயினும் அங்கும் கல்வி நெருக்கடியின் கடுமை குறைந்திருப்பதாகத் தெரியவில்லை. அங்கே நிலவும் அமைப்புகளுக்கு எதிர்ப்புகள் இருக்கின்றன. சிலவேளை மாணவர்களே, சிறப்பாக பல்கலைக் கழக மாணவர்கள் அவற்றை எதிர்க்கின்றனர். அவர்கள் நிறுவன அமைப்புகளிலும் கற்பிக்கும் முறையிலும் வாழ்க்கைத் தொழிலுக்கேற்ற பயிற்சியளிப்பதிலும் குறைகளிருப்பதாகக் கருதுகின்றனர். சிலவேளை முதலாளிகள், தொழில்துறை தொகுதிகள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்தும் எதிர்ப்பு எழுகின்றது.

தொழில் வளர்ச்சி பெறும் சமூகங்களில் வாழ்க்கை சிக்கல் மலிந்து காணப்படுவதால் இளைஞருக்கு இன்று அளிக்கப்பெறும் கல்வியும் பயிற்சியும் சரியானவையா என்ற கேள்வி எழுகின்றது. வழக்கமான முறையைப் பயன்படுத்துதல், அதிக மாணவர்களுக்குக் கல்வி வழங்குதல், நீண்டகாலக் கல்வி ஆகியவைபற்றி ஐயம் எழுகின்றது. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது கூட இவை எல்லாம் வளர்ச்சி பெற்றுவரும் நாடுகளில் ஏற்கெனவே ஏற்பட்டுள்ளது போன்ற பெரும் செலவையே உண்டுபண்ணும் எனத் தெரிகின்றது.

ஆகவே, தொடர்ந்து நடைபெறும் இப்பரந்த துறையாகிய கல்வியில் நாம் என்ன செய்கிறோம், எவ்வளவு விரைவாகச் செல்கிறோம், எங்கே செல்ல விழைகிறோம் என்பவை பற்றி சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டுமென உலகமெங்கும் மக்கள் கருதுகின்றனர்.

அத்தகைய சிந்தனையின்போது, நாம் 18, 19ஆம் நூற்றாண்டுகளின் நிறுவனங்களையும் முறைகளையும் வைத்துக் கொண்டு 20 அல்லது 21ஆம் நூற்றாண்டில் செயலாற்ற முயல்கிறோம் என்பதைக் காணக்கூடும். மாற்றம் தேவை என்பதை நாம் உணர்வதுடன், மாற்றத்தின் இயல்பையும் ஒன்று சேர்த்து அறிந்து அதை அடைய திட்டமிடக்கூடும். இதுவே பன்னாட்டுக் கல்வி ஆண்டின் பொது நோக்கம் எனலாம்.

பன்னாட்டுக் கல்வி ஆண்டு என்றால் என்ன? இது, கல்வி பிரச்னைகளைத் தீர்க்க தனி முயற்சிகள் எடுத்து, (ஐ.நா. பொதுப் பேரவையில் இத்திட்டத்தை முன்மொழிந்தவர் கூறியதுபோல்) ''கல்வியிலும் பயிற்சியிலும் ஆற்றலை வளர்த்து, தொடக்க முயற்சிகளை ஊக்குவிக்க'' உலக நாடுகள் அனைத்தும் ஒன்றித்துச் செயல்படுவதாகும்.

இஃது உண்மையில் ஒவ்வொரு நாடும் செய்ய வேண்டிய தனி முயற்சியாகும். கல்வியை அல்லது தேசியக் கல்வியின் ஓரியல்பைப் பற்றி ஆய்தல், முக்கிய பிரச்னைகளை அறிந்துணர்தல், அவற்றைத் தீர்க்கும் வழிகளை ஆய்தல், கல்வி பிரச்னைகளை ஆய்வதில் மக்களையும் பங்கு பெறச் செய்தல், இவற்றின் பயனாக கல்வித் திட்டங்களை மாற்றுதல் ஆகியவற்றுள் ஏதாவது ஒன்று அல்லது எல்லாம் இயல்பாகச் செய்யக் கூடிய செயல்களாகும்.

இவற்றுள் பெரும்பாலானவை நாட்டினுள்ளே கல்வியை வளர்க்கும் முயற்சிகள். ஆயினும் நாட்டுக்குப் புறம்பான முயற்சிகளும் உண்டு. ஒவ்வொரு நாட்டிற்கும், தான் பிற நாடுகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், பிற நாடுகளுக்குத் தான் அறிந்ததை வழங்க வேண்டுமென்றும் நன்கு தெரியும். இதனால் சிலவேளை, வளர்ச்சியடைந்த நாடுகள் வளர்ச்சியடையும் நாடுகளுக்குக் கல்வி உதவி அளிக்கின்றன.

இது மிகச் சுருக்கமான விளக்கமாகும். பன்னாட்டுக் கல்வி ஆண்டில் செய்யப்படும் முயற்சிகளின் முக்கிய பண்பு என்னவென்றால், அவை தனிச் சிறப்புள்ளவையாக, புறத்தூண்டுதலின்றி நிகழ்பவையாக, மாற்றத்தின் தேவையை உணர்ந்து மாற்றத்தை விரும்பும் செயல்களாக விளங்கவேண்டும்.



Photo © Francisco Hidalgo, Paris

கல்வி ...

பன்னாட்டுக் கல்வி ஆண்டு திட்டங்களைத் தீட்டுமாறு ஐ.நா. நிறைவேற்றிய தீர்மானங்கள், யுனெஸ்கோ விடுத்த வேண்டுகோள்கள் இவற்றின் விளைவாக பல நாடுகள் புதிய திட்டங்களை வகுத்துள்ளன. ஒரு சில எடுத்துக் காட்டுகளை இங்குக் கூறுவோம்.

பிரான்ஸில் ஆறு முக்கிய கல்வி ஏடுகள் பன்னாட்டுக் கல்வி ஆண்டைப் பற்றி சிறப்பிதழ்கள் வெளியிடும். கல்வி கற்கும் முறைபற்றி ஒரு கருத்தரங்கு நடைபெறும். 1970இன் இறுதியில் யுனெஸ்கோ பிரெஞ்சு தேசியக் குழு எழுத்தறிவு திட்டங்கள் பற்றி ஆய்வு மாநாடு நடத்தவிருக்கிறது.

ஜப்பான் பெருந் திட்டம் தீட்டியுள்ளது. அதில் (பன்னாட்டுக் கல்வி ஆண்டிற்கெனத் தனி அஞ்சல் தலை வெளியிடுதல் உட்பட) பல நிகழ்ச்சிகள், புதிய நிறுவனங்கள் (ஒரு பல்கலைக் கழகமும் பணி புரியும் ஆசிரியருக்கான பயிற்சி நிலையமும்) நிறுவுதல், ஜப்பானிய ஆசிரியர்களுக்கும் பிறநாட்டு ஆசிரியர்களுக்குமிடையே தொடர்பை வளர்த்தல் போன்றவை இடம் பெறும். வளர்ச்சியுறும் நாடுகளுக்கு உதவியளித்தல் இதில் சிறப்பிடம் பெறுகின்றது.

டான்ஸானியா இவ்வாண்டில் உயர்தரக் கல்வியில் புதிய துறைகளை நிறுவி, சிறப்பாக கல்வியில் புதிய முறைகளையும் சீர்திருத்தங்களையும் புகுத்த திட்டமிட்டுள்ளது.

பன்னாட்டுக் கல்வி ஆண்டு என்றால் நாடுகளின் பல திட்டங்களைக் கொண்டது என்ற கருத்தை எளிதில் ஏற்றுவிடலாம். ஆனால் அத்திட்டங்கள் மத்திய அரசின் சில அலுவலருக்கு மட்டும் உரியவை எனக் கருதிவிடக்கூடாது. ஆண்டின் நோக்கங்களைப் போதிய அளவு நிறைவேற்றவும் கல்வி மாற்றத்தைப் பற்றி மக்களது கவனத்தை ஈர்க்கவும் சமுதாயத்தின் பல பகுதியினரும் ஒத்துழைக்கவேண்டும்.

நகராட்சி, தனிப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் திட்டங்களிலும் கூட சமுதாய ஒத்துழைப்பு தேவை. அவற்றில் ஆசிரியரும் மாணவரும் பெற வேண்டிய பங்கு வெளிப்படை. ஏனெனில் அவர்கள் தாம் கல்வியுடன் நேராகத் தொடர்பு கொண்டுள்ளவர்கள். பெற்றோர், முதலாளிகள், சமய நிறுவனங்கள், தொழில்துறை சங்கங்கள் போன்ற பிற தொகுதியினரும் நிறுவனங்களும் கொள்கை மாற்றங்களின் திட்டங்களிலும், ஆய்வுகளிலும், விவாதங்களிலும் கலந்து கொள்ள வேண்டும்.

நாடு முழுவதுமுள்ள சமுதாயங்கள், சங்கங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றைப் பன்னாட்டுக் கல்வி ஆண்டின் முயற்சிகளில் ஈடுபடுத்தும் அல்லது அந்த ஈடுபாட்டிலிருந்து தோன்றும் திட்டங்களே வெற்றிபெறும் எனலாம்.

ஆயினும் இது ''பன்னாட்டு'' கல்வி ஆண்டு என்பதை நினைவிலிருத்த வேண்டும். இது தனி நாடுகளின் திட்டத் தொகுப்புதானா எனக் கேட்க கூடும். பன்னாட்டு நிறுவனங்கள் இவற்றில் முக்கிய பங்கு பெற வேண்டும். அவை தாம் நாடுகளிடையே தொடர்பை ஏற்படுத்தி, செயல் திட்டங்களை வகுத்து, ஒவ்வொரு நாட்டிலும் நடைபெறும் செயல்களைப் பன்னாட்டுச் செயல்களாக மாற்றுகின்றன.

அரசாங்கத் தொடர்பற்ற, அரசாங்கத் தொடர்புடைய பன்னாட்டு நிறுவனங்கள் பல இப் பன்னாட்டுக் கல்வி ஆண்டின் முயற்சிகளில் பங்கு பெற முன் வந்துள்ளன. ஆயினும் பெரும் பொறுப்பு ஐ.நா. சங்கத்தையும், கல்வியுடனும் பயிற்சியுடனும் நேர் தொடர்பு கொண்டுள்ள தனிச் செயல் நிறுவனங்களான யுனெஸ்கோவையும் பன்னாட்டுத் தொழில் நிறுவனத்தையும் சாரும்.

மறு பயிற்சி அளிப்பதே இவ்வாண்டின் திட்டம். ஏற்கெனவே பணியாற்றும் அலுவலரையும், நிகழ்ந்து வரும் திட்டங்களையும் பயன்படுத்தி அதனால் யுனெஸ்கோ நாடுகளிடையே தொடர்பை ஏற்படுத்தி, அவற்றிற்கு வேண்டிய தகவல்களையும் ஊக்கத்தையும் அளிக்கமுடியும்.

Photo © Michel Hetier

யாருக்கு? ... எப்படி?

பியர் ராண்டியர்

இந்நூற்றாண்டு முடிவடையும்போது வளர்ச்சி பெறும் நாடுகள் தமக்கும் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்குமுள்ள பிளவை எவ்வளவு விரைவில் மூட முடியும் என்ற பிரச்னையில் ஈடுபட்டுள்ளன.

அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் வளர்ப்பதே இதற்குச் சிறந்த வழியெனத் தோன்றுகிறது. திட்டமிட்டு, நிறுவனங்களை அமைத்து புதிய முறைகளைக் காணும் மனிதனே இப்பெரும் மாற்றத்திற்கு முக்கிய கருவியாக இருப்பான்.

இஃது எக்காலத்திற்கும் எந்நாட்டிற்கும் பொருந்தும் முதலீட்டைவிட மக்களுக்குக் கல்வியும் பயிற்சியும் அளித்ததே அமெரிக்கா 1925லிருந்து வளர்ச்சி யுற்றதற்கு முக்கிய காரணமென வாஷிங்டனில் நிகழ்ந்த ஆய்வுகள் எண்பிக்கின்றன.

ஆனால் வளர்ச்சியுறும் மூன்றாவது உலகைப் பொறுத்தவரையில் பல பிரச்னைகளை நாம் தீர்க்க வேண்டியிருக்கிறது. அவை தனித்தனியாக தோன்றினும் உண்மையில் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன. ''வெறி அல்லது உணர்ச்சி மிகுந்த சூழ்நிலையில் வளர்ந்த குழந்தையோ, மாயவித்தை அல்லது பிற தவறான கொள்கைகளில் நம்பிக்கையுள்ள சூழ்நிலையில் வளர்ந்த குழந்தையோ அறிவியலின் ஆய்வு முறைகளையும் அதைப் பயன்படுத்தும் வகைகளையும் கண்டறிவது அரிது'' என்று பிரெஞ்சு சமூகவியல் அறிஞரான ஜீன்ஃ போராஸ்டி கூறுகிறார்.

''போதுமான கல்வியறிவு இன்மையால் அறிவானது தூண்டுதல் பெறாமலிருக்குமானால் அதன் வளர்ச்சி தடைபடும். தக்க பருவத்தில் கல்வி பயிலவில்லையெனில், மன வளர்ச்சி தடை படுவதைத் தடுக்க முடியாது'' என்று யுனெஸ்கோ பொது இயக்குநர் ரெனே மேகு அண்மையில் கூறினார்.

''வளர்ச்சியுறும் நாடுகள் பலவற்றில் கல்வி முறையானது தற்கால அறிவியல், தொழில் நுட்பம் நன்கு வளரும் அளவுக்கு முன்னேறவில்லையெனில், இந்நாடுகளில் அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் நன்கு பயன்படுத்த வழியில்லை'' என்று அறிவியலைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் ஐ. நா. அறிவுரைக் குழு அறிவித்துள்ளது.

இதிலிருந்து மூன்று முடிவுகள் தெளிவாகின்றன; சுருக்கு வழிகளின்றி வளர்ச்சியுறும் நாடுகள் முன்னேறா; அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தினாலன்றி சுருக்கு வழிகளைக் காண இயலாது; கல்வியின்றி அறிவியலையும் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்த முடியாது. ஆகவே கல்வியின்றிச் சுருக்கு வழிகளைக் காண இயலாது.

ஆனால் சிக்கல் இத்துடன் தீர்ந்துவிடவில்லை. கல்வி, யாருக்கு, எவ்வாறு என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

கடந்த 20 ஆண்டுகளாக மூன்றாவது உலகின் நாடுகள் (அரசாங்கங்களும் மக்களும்) எழுத்தறிவின்மையை ஒழித்து கல்வித் தரத்தை உயர்த்த முனைந்து வந்துள்ளன. மூன்று முழுக் கண்டங்கள் இவ்வலுவலில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளன.

1960இல் ஆசிய அரசாங்கங்கள் புகழ்மிகு ''கராச்சித் திட்டத்தை'' ஏற்றன. அது 1980க்குள்ளாக ஏழாண்டுக் கட்டாய ஆரம்பக் கல்வியை வலியுறுத்தியது.

1961இல் ஆப்பிரிக்க கல்வியமைச்சர்கள் ஒரு பெருந் திட்டத்தை ஏற்க இசைந்தனர். அதன் மூன்று முக்கிய குறிக்கோள்களாவன: 1980க்குள் ஆப்பிரிக்க குழந்தைகளுக்கெல்லாம் 6 ஆண்டு கட்டாயக் கல்வி; ஆரம்பப் பள்ளி மாணவருள் 20சத விகிதம் உயர்நிலைப்பள்ளி செல்வது; 3,00,000 மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் சேர்வது.

1962இல் இலத்தின் அமெரிக்க நாடுகள் இதைப் பின்பற்றி 1970க்குள் கண்டத்தின் குழந்தைகளுக்கெல்லாம் 6 ஆண்டு ஆரம்பக் கல்வி அளிக்கத் திட்டம் வகுத்தன.

இவ்வாறாக மூன்றாவது உலகின் கல்விச் செலவு மிகவும் உயர்ந்துவிட்டது. 1960இலிருந்து அஃது இருமடங்கானது, அதாவது நாட்டு வருமானத்தைப் போல் அதிகரித்தது.

செல்வம் குறைந்த நாடுகளும் அரிய முயற்சிகள் எடுத்து வருகின்றன. தமது வறுமையிலும்கூட



Photo © Elizabeth Wilcox, New York

மூன்றாவது உலகின் பல நாடுகளில் மக்கள் பெருக்கத்திற்கேற்ப கல்வி வளர்ச்சிக்கான முயற்சிகள் நடைபெறுவதில்லை. எடுத்துக்காட்டாக மாலியில் 1961இல் 68,000குழந்தைகள் தொடக்கப் பள்ளியில் படித்தனர். 3 ஆண்டுகளுக்குப் பின் இத்தொகை இருமடங்காக - 1,13,000 ஆக உயர்ந்தும், 1961இல் இருந்தது போலவே பள்ளிக்குச் செல்லும் வயதுள்ளவரில் 10 சத விகிதமாகவே இருந்தது. பல நாடுகளில் பள்ளி அறைகளில் இடமில்லாத குழந்தைகளின் தொகை வளர்ந்து கொண்டே வருகிறது.

பிரெஞ்சு எழுத்தாளரும் பத்திரிகையாளருமான பியர் ராண்டியர் எழுதிய "ரெண்டஸ்-வவுஸ் 1980 லா சயின்ஸ் தெ லா டெக்னிக் ஆப் செக்கோர்ஸ் டு டையர்ஸ் மொண்டே" (மூன்றாவது உலகுக்கு விஞ்ஞான, தொழில் நுட்ப உதவி) எனும் நூலை பாரிஸில் உள்ள பையட் பதிப்பகம், ஐ. நா. உதவியுடன் 1968இல் வெளியிட்டது.

Photo Documentation Francaise

விரைவாகப் பரவும் 'திறந்த' கல்வி

அவை வளர்ச்சியுற்ற நாடுகளைவிட அதிகமான விகிதத்தைத் தமது நாட்டு வருமானத்திலிருந்து கல்விக்கென செலவிடுகின்றன. அவ்விகிதம் 25 சதவிகிதமாகும். சில வேளை அதிகமாக இருக்கிறது. இதை, எடுத்துக் காட்டாக பிரான்ஸின் பதினேழு சதவிகிதத்துடன் ஒப்பிடலாம்.

இந்நாடுகளில் எல்லாம் கல்விச் செலவு பிற செலவுகளை விட விரைவாக உயர்ந்து விட்டது. நாட்டின் பிற தேவைகளை விட கல்விக்கென செலவழிக்கும் பொருள் விரைவாக அதிகரித்துக் கொண்டே சென்றால், பிற துறைகளில் அரசாங்கம் தனது குறிக்கோள்களை அடைய முடியாது என்று சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

இங்கு கீழ்கண்ட இரண்டில் ஒன்றை தெரிந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதிக பள்ளிகளையும் குறைந்த மருத்துவ மனைகளையும் ஆலைகளையும், உரங்களையும், சாலைகளையும், அணைக்கட்டுகளையும் கட்டுவதா? அல்லது திட்டமிட்டதைவிட குறைந்த பள்ளிகளையும் அதிக மருத்துவ மனைகளையும், ஆலைகளையும், உரங்களையும், சாலைகளையும், அணைக்கட்டுகளையும் எழுத்தறிவற்றவர்களையும் உருவாக்குவதா?

கல்வி வேண்டும். ஆனால் யாருக்கு?

மூன்று ''பசிவாட்டமுற்ற'' கண்டங்களின்'' அரசாங்கங்களும் கல்வி ஆர்வத்தினால் உந்தப் பெற்றும் முன்னேற்றத்திற்கு கல்வி தேவையென்பதை உணர்ந்தும் பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. அவற்றை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதல் தொகுதி நாடுகளில், முக்கியமாக ஆப்பிரிக்க நாடுகளில் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி அளிக்கப் படுகின்றது. இப்பணிக்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதிய அளவில் இல்லாமையால், நடுநிலைப் பள்ளி நுழைவுத் தேர்வில் தோல்வியடைந்த மாணவர்கள் அல்லது ஆரம்பக் கல்வி முடித்த ''மேற்பார்வையாளர்கள்'' நியமிக்கப்டுகின்றனர்.

எடுத்துக் காட்டாக, ஐவரிகோஸ்டில் 7,500 ஆரம்பப்பள்ளி ஆசிரியருள் 600 பேரே சான்றிதழ் பெற்றவராவர். ஆப்பிரிக்காவில் பிரெஞ்சு பேசப்படும் பிற பகுதிகளில் ஆரம்பப் பள்ளியில் ''மேற்பார்வையாளர் 70 முதல் 80 சதவிகிதமும், சாடில் 90 சதவிகிதமும் இருக்கின்றனர்.

இதன் விளைவாக சில நாடுகளில் ஆரம்பக் கல்விக்கு ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, எழுத்தறிவு பெற்றவர்களெனப்படும் இவ்விளைஞர்கள் திரும்பவும் எழுத்தறிவற்றவர்களாகின்றனர்.

கீழ்க்கண்டவாறு கல்வி முறை நடைபெறுகின்றது. ''மேற்பார்வையாளர்'' நடத்தும் வகுப்பிலுள்ள 50, 60, 80, சில வேளை 100 குழந்தைகளும் ஒருங்கே பாட நூலை வாசிக்கின்றனர். நூலிள்ள பாடங்கள் அவர்களுக்குப் புரிவதில்லை. உயர் வகுப்புக்குச் செல்லும் தேர்வில் தேறாத மாணவர்கள் கீழ்வகுப்பிலே 2, 3 சில வேளை 4 ஆண்டுகளும் இருந்து, இறுதியில் படிப்பை விட்டு விடுகின்றனர்.

வல்லுநர்கள் இவர்களைத் 'தடை' என்று கூறுவர். இவர்கள் ஏற்கெனவே நலிந்த கல்வி முறையை குலைக்கின்றனர். மாணவர்கள் தினமும் பாடங்களை வாசிக்கும்போது, இத் ''தடை'' பல்லவி பாடி, புதிதாக சேர்ந்தவர்களில், திறமையுள்ளவர்களையும் வாயடைத்து விடுகின்றனர். 100 குழந்தைகள் இருக்கும் வகுப்புகளில் ஏறக்குறைய 10 அல்லது 20 சதவிகிதமே அதே வகுப்பில் மறு ஆண்டும் இராமல் அடுத்த வ்குப்புக்குச் செல்கிறனர்.

இதனால் கல்வியில் மிகுதியான பயனழிவு ஏற்படுகிறது. ''ஆரம்பப் பள்ளியில் நுழையும் 10,000 குழந்தைகளுள் 3,900 பேர் அடுத்த வகுப்புக்குச் செல்கின்றனர். இவர்களுள் பாதிப்பேர் கீழ்வகுப்பில் 2 அல்லது 3 ஆண்டுகள் இருக்கின்றனர்'' என்று ஐவரி கோஸ்டின் கல்வி அமைச்சர் திரு. ஆமன் டானோ குறிப்பிட்டுள்ளார்.

முதல் தொகுதியில் 30 சதவிகிதம் இடைநிலை வகுப்புகளில் முதலாண்டையும், 20 சதவிகிதம் இரண்டாவது ஆண்டையும் அடைகின்றன்ர். இவர்களில் பலர் 7, 8 அல்லது 10 ஆண்டு பள்ளியில் இருந்த பிறகே அந்நிலையை அடைகின்றனர். ஆரம்பப் பள்ளியில் நுழைந்த 10,000 பேரில் 1,585 பேர்—ஆறில் ஒரு பகுதியே ஆரம்பப் பள்ளி தேர்வு சான்றிதழ் பெறுகின்றனர்.

இந்த ஏழை நாடுகள் ஏராளமாக பணம் செலவழித்த போதிலும்,அதன் பயன் மிகக் குறைவேயாகும்.

விட்டு விடுவோரும் திரும்பப் படிப்போரும்

வளர்ச்சியுறும் நாடுகள் தமது கல்வி முறையை விரிவாக்கி மாற்றியமைப்பதால் விளையும் குறைபாடுகளை இப்போது காண்கிறோம். தக்க ஆசிரியர்கள் இல்லாததினால் கல்வியில் பயனழிவு ஏற்படுவதுடன் பல மாணவர்கள் ஒரே வகுப்பில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் இருக்க நேரிடுகிறது. ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் தொடக்கப் பள்ளியில் சேரும் குழந்தைகளில் ஆறில் ஒரு பகுதியினரே அப்படிப்பை முடிக்கின்றனர். பல்கலைக் கழகம் செல்லக் கூடிய மாணவரின் தொகை 6 அல்லது 7 ஆண்டுகளுக்கொருமுறை இரு மடங்காகும். தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளில் கல்வியில் பயனழிவு ஏற்பட்டபோதிலும் அது பெரும் பிரச்னையாக இருப்பதில்லை. நிழற் படங்களும் இப் பிரச்னையின் இரு இயல்புகளையும் குறிப்பிடுகின்றன.



Photo University of Rochester, N.Y., U.S.A

2-வது தொகுதி நாடுகள், சில விதி விலக்குகள் தவிர, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா, மத்தியகிழக்கு, நாடுகளைச் சேர்ந்தவை. இங்கு கல்வி முறை வேறு வகையாக அமைந்துள்ளது. ஆரம்பப் பள்ளியில் பல குழந்தைகள் சேர்க்கப்படுவதில்லை. ஆனால் சேர்க்கப்படுவோரில் பெரும்பான்மையோர் உயர்நிலைத் தேர்வுச் சான்றிதழ் பெற்று தேறுகின்றனர்.

இவ்வுரிமை பெற்ற குழந்தைகள் 6 வயதில் கல்வியை தொடங்கி 18இல் முடிக்கின்றனர். இவர்கள் எளிதாக மேல் வகுப்புகளுக்குச் செல்கின்றனர். பள்ளிப் படிப்பின் இறுதியில் சான்றிதழும் தாராளமாகவே வழங்கப்படுகிறது.

இந்த 2-வது தொகுதி நாடுகளில் உயர்நிலைக் கல்வி வளர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. மெக்ஸிகோவில் 1955லிருந்து ஆரம்பக் கல்வி 50 சதவிகிதமும், உயர்நிலைக் கல்வி 300 சதவிகிதமும் உயர்ந்துள்ளன. இதே போக்கைப் பல ஆசிய நாடுகளிலும் காணலாம். கல்வி அறிஞர்கள் இத்தகைய கல்வி முறையை ''துணையுடைய'' அல்லது ''திறந்த'' கல்வி முறை என்று கூறுவர். இதைப்பற்றி டெஹ்ரான் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: ''கல்வியின் தரம் மிகக் குறைந்துள்ளது. உயர்நிலைப் பள்ளிகளில் இடைத்தர மாணவரும் சேர்க்கப்படுகின்றனர். வகுப்புகளில் 70 அல்லது அதற்கு மேலுள்ள மாணவர்கள் இருப்பதால் ஊக்கமிழந்த ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் படித்துக் கொடுப்பதில்லை. பல்கலைக் கழகத்தில் நுழைபவர்களின் கல்வித் தரம் எவ்வளவு கீழாக இருக்கிறதென்றால் மாணவர்கள் ஆங்கிலப் பாடங்களை அராபிய எழுத்திலே எழுவதைப் பார்த்திருக்கிறேன். அத்தகைய திறந்த கல்வி முறையினால் அறிவில் சிறந்தவர்களை உருவாக்க முடியாது.''

முடிவுகள் எவ்வளவு கடுமையாக இருப்பினும் அவற்றை மறைப்பது தவறு. கல்வியின் ''பயனழிவினாலும் கல்வி முறை ''துளை பட்டிருப்பதாலும்'', நாளை தமது தாய் நாட்டின் வளர்ச்சிக்காக உழைக்கக்கூடிய ஒரு சில இளைஞரையும் அறிவியல் தொழில் நுட்பம் அளிக்கும் வாய்ப்புகளை முழுவதும் பயன்படுத்தக்கூடிய மிகச் சிலரையுமே மூன்றும் உலகின் கல்வி முறை இன்று உருவாக்குகின்றது.

கல்வி வேண்டும், ஆனால் எவ்வாறு? இந்நிலை எவ்வாறு ஏற்பட்டுள்ளது? முதலில் மக்கள் தொகை பெருகியுள்ளது. இதன் விளைவுகள் சரியாக கணிக்கப் பெறவில்லை அல்லது முற்றிலும் கணிக்கப் பெறவேயில்லை எனலாம். மக்கள் தொகை பெருக்கத்தினால் பள்ளியில் சேர்வோர் தொகையும் பெருகியது. எடுத்துக் காட்டாக மாலியில் 6க்கும் 14க்கும் உட்பட்ட குழந்தைகளில் 10 சதவிகிதம்—68,000 பேர் 1961இல் பள்ளி சென்றனர். 1964இல் சதவிகிதம் 10ஆகவே இருந்த போதிலும், எண்ணிக்கை 1,13,000, அதாவது இரு மடங்காக உயர்ந்தது.

1962இல் அல்ஜீரியா விடுதலை, பெற்றதிலிருந்து ஆரம்பப் பள்ளிக்ளில் மாணவர் தொகை 6,00,000-லிருந்து 1,40,0000 ஆக அதாவது, இரு மடங்காகவும் நடுநிலைப் பள்ளிகளில் 35,000-லிருந்து 1,10,000 ஆகவும் அதாவது, மூன்று மடங்காகவும், உயர்நிலைப் பள்ளிகளில் 6,000-லிருந்து 7,000ஆக, அதாவது 10 ம்டங்காகவும் உயர்ந்தது. இத்தகைய வளர்ச்சிக்கும் அதற்கு வேண்டிய ஆசிரியப் பயிற்சிக்கும் நாடுகள் எவ்வாறு பணம் செலவிட முடியும்?

இரண்டாவது, கடந்த காலத்தில் கல்வி வழங்கப்பட்ட முறை இப்போது மாறியுள்ளது. இது வரை ஐரோப்பா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளிலெல்லாம் மக்கள் தொகை குறைந்த காலத்திலும் கல்வி வளர்ச்சிக்குமுன் தொழில் வளர்ச்சியே நடைபெற்றது.

இன்றைய வளர்ச்சியுற்ற நாடுகளில் நீண்ட காலமாக பள்ளிகளை விட ஆலைகளே மிகுதியாக அமைக்கப்பட்டன. தேவையான தகுதிபெற்ற தொழிலாளரை உருவாக்கும் கல்விக்கு தொழில் துறையே பண உதவி அளித்தது. ஆயினும் ஐரோப்பாவில் எல்லா குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி அளிக்க ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகியது.

ஆனால் வளர்ச்சியுறும் நாடுகளில், மக்கள் தொகை பெருகியும், மனித அறிவு, சிறப்பாக அறிவியல், தொழில் நுட்ப துறைகளில் 20,50 அல்லது 100 மடங்கு வளர்ந்து

1980இல் 15,00,000 தொழில் நுட்ப வல்லுநரும் பொறியமைப்பாளரும் தேவை

வரும் இந்நாளில் ஆலைகளை விட பள்ளிகளே மிகுதியாக அமைக்கப்படுகின்றன. 20 ஆண்டுகளில் அனைவருக்கும் கல்வி வழங்கும் ஆவல் மிகு திட்டங்கள் தீட்டப்படும் இந்நாளில் இன்னல்கள் பல எழத்தான் செய்யும்.

இன்னல்கள் எழுவதால் திட்டத்தை கைவிட்டு, அதன் சாதனைகளைப்பற்றிய நம்பிக்கைகளையெல்லாம் இழந்து விடலாமா? விடக்கூடாது. வளர்ச்சியுறும் நாடுகள் ஐரோப்பிய முறையைப் பின்பற்றி, மூன்று கண்ட குழந்தைகளும் பள்ளிக்குச் செல்வதற்காக 100 ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமா? பிற நாடுகளைப் பின்பற்றுவது பிரச்னையைத் தீர்க்காது. கல்வி இன்றைய அடிப்படைத் தேவையாக இருக்கின்றது. ஆனால் அண்மைக்கால அனுபவம் ''எதற்காக, யாருக்காக, எவ்வாறு'' என்ற கேள்விகளுக்கு ஒரு புதிய விளக்கத்தை அளிக்கின்றது.

இதற்கு விடை காண கல்வியின் பெருக்கத்தையும் தரத்தையும் இணைத்து, கல்வி முறையினுள்ளே விரைவான வழிகளையும் வகுக்க வேண்டும்.

வளர்ச்சியுறும் நாடுகள் தமது தொடக்க ஆர்வத்தினால் விளைந்த தவறுகளை இப்போது உணருகின்றன. ஆனால் அவை நம்பிக்கை இழந்து விடவில்லை. சிக்கலை நோக்கி வீறுநடையுடன் செல்கின்றன.

பல நாடுகள் 8 ஆண்டு கட்டாயக் கல்வித்திட்டத்தை ஏற்கெனவே விட்டு விட்டன. லாவோஸ் அதை மூன்று ஆண்டுகளாக்கி விட்டது. டாஹோமி சில ஆண்டுகளுக்கு தொடக்கப் பள்ளிகளில் மாணவரின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடாதெனத் தீர்மானித்துள்ளது.

டான்ஸானியா 1964லிருந்தது போலவே பள்ளி மாணவரின் தொகையை 49 சதவிகிதமாகக் கட்டுப்படுத்த எண்ணியுள்ளது. ''இது மிகக் கடினமான அரசியல் தீர்மானமாகும். ஏனெனில் இதனால் எழுத்தறிவற்றவரின் தொகை பெருகும். ஏற்கெனவே 15 வயதிற்கு மேற்பட்டவருள் 85 சதவிகித ஆண்களும் 96 சதவிகித பெண்களும் எழுத்தறிவற்றவர்கள்'' என ரஷ்யப் பொருளாதார வல்லுநரும், கல்வித் திட்ட பன்னாட்டு நிலைய முன்னாள் வல்லுநருமான ஜார்ஜ் ஸ்கோராவ் கூறுகிறார்.

மொராக்கோ புதிய வழியைப் பயன்படுத்துகிறது. அதன்படி 6 வயது குழந்தைகள் பலரைப் பள்ளியில் சேர்த்து அவர்களுள் திறமையற்றவர்களைப் படிப்படியாக ஒதுக்கி விடுகிறது. அல்ஜீரியாவில் நடுநிலைப் பள்ளி நுழைவுக்கு 13 வயதைக் குறிப்பிட்டு, ஆரம்பப் பள்ளியின் இறுதி வகுப்பில் 2 அல்லது 3 ஆண்டு தங்குவோரை களைந்து விடுகின்றனர். நைஜீரியாவில் நடுநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக ஆரம்பக் கல்வி முடித்தவருள் 15 சதவிகிதத்தையே நடுநிலைப் பள்ளிக்கு அனுப்புகின்றனர். சென்ற ஆண்டு 3000 பேரில் 1000 பேரே அனுமதிக்கப்பட்டனர். அல்ஜீரியாவில் முந்திய ஆண்டுகளில் 70 சதவிகிதமும் இப்போது 22 சதவிகிதமுமே அனுமதிக்கப்பட்டனர். இத்தொகை பிரான்ஸில் 1939இல் குழந்தைகளுள் 20 சதவிகிதம் நடுநிலைப் பள்ளிகளுக்குச் சென்ற நிலையைக் காட்டுகிறது.

இறுதியாக ஆசிரியரின் தகுதியை உயர்த்த பெரும் முயற்சி தொடங்கியுள்ளது. அல்ஜீரியா, ஐவரி கோஸ்ட், டாஹோமி 'மேற்பார்வையாளர்களை' நியமிப்பதை நிறுத்தி விட்டன. இன்று இங்கெல்லாம் சான்றிதழ் பெற்றோரை ஆசிரியராக்குகின்றனர். இதே முறையையே 19ஆம் நூற்றாண்டில் பிரான்ஸும் ஆரம்பக் கல்வியில் பயன்படுத்தியது.

''கல்வி, யாருக்கு?'' என்ற கேள்விக்கு ஏற்கெனவே பதிலளிக்கத் தொடங்கி விட்டனர்.

பல நாடுகளின் விருப்பத்திற்கு இணங்க யுனெஸ்கோ ஆசிரியர்களின் நிலையையும் தகுதியையும் உயர்த்தும் பணியில் ஈடுபட்டு ''கல்வி, எவ்வாறு'' என்ற கேள்விக்கு விடையளித்து விட்டது.

இலத்தீன் அமெரிக்காவில் யுனெஸ்கோ ஸா பாவ்லோ ''பிரேசில், சாண்டியாகோ (சிலி) பல்கலைக் கழகங்களின் துணையுடன் கல்வி நிருவாகத்திலும், கல்வி, வாழ்க்கைத் தொழில் பயிற்சியிலும் 400 பேருக்குப் பயிற்சியளித்துள்ளது. மேலும் அது பம்ப்லோனா (கொலம்பியா), சான் பாப்லோ டெல் லாகோ (ஈக்வடார்), ஜீனோடெப், சான் மார்க்கோஸ் (நிக்காராகுவா) டெகுசிகல்பா (ஹாண்டுராஸ்) ஆகிய 5 பெரிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு வல்லுநர்களை அனுப்பியுள்ளது. 2 ஆண்டுகளில் 1,600 ஆசிரியப் பயிற்சி மாணவர்கள் புதிய முறைகளைப் பயன்படுத்தும் கல்லூரிகளில் ஆய்வுப் பயிற்சி பெற்றனர். வருங்காலத்தில் இம்முறை நாடு முழுவதும் பயன்படுத்தப் பெறும்.

பொலிவியா, கொலம்பியா ஈக்வடார், சால்வடோர், குவாட்டமாலா, ஹாய்ட்டி, நிகாரகுவா, பெரு ஆகிய நாடுகளில் கற்பிக்கும் தரத்தை உயர்த்தி ஆசிரியர்களை அமர்த்தவும், பணியிலிருப்போருக்குப் பயிற்சி அளிக்கவும் யுனெஸ்கோ 40 ஆய்வு வகுப்புகளையும் ஆய்வு மாநாடுகளையும் நடத்தியது. வெனிஸுவலாவிலுள்ள அமெரிக்க நிலையத்தில் கிராமக் கல்வி சார்ந்த பிரச்னைகள் யுனெஸ்கோவின் துணையுடன் ஆயப் பெற்றுள்ளன.

ஆப்பிரிக்காவில் மாலி, நைஜீரியா, ஐவரி கோஸ்ட், காங்கோ ஆகிய நாடுகளில் யுனெஸ்கோவும் ஐ.நா. வளர்ச்சித் திட்டமும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளை நிறுவத் துணை செய்துள்ளன. 30 ஆப்பிரிக்க நாடுகள் யுனெஸ்கோ வல்லுநரின் அறிவுரைகளால் பயன்பெறுகின்றன.

அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் ஐ.நா. அறிவுரைக் குழு கல்வி முறையினுள் சுருக்கு வழிகளை காண்பதை ஆய்ந்து வருகின்றது. வளர்ச்சியுறும் நாடுகளும் இதில் ஈடுபட்டுள்ளன. யுனெஸ்கோ இதில் கவனம் செலுத்தி வருகின்றது.

ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் தாமஸ் பாலோக் குறிப்பிடுவதுபோல், தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளின் முறைகளை அப்படியே பின்பற்றுவது தவறும் இடர் தருவதுமாகும்.

இலத்தீன் அமெரிக்காவின் தேவைகளுக்கேற்ப பௌதிகம் கற்பிக்கும் புதிய முறைகளை ஆயும் திட்டப்படி யுனெஸ்கோ 8 இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பல்கலைக் கழகங்களிலும் ஆசிரியப் பயிற்சி நிலையங்களிலும் உள்ள 26 ஆசிரியர்களை ஓராண்டுக்கு ஒன்றாகக் கூட்டியது. இவ்வல்லுநர்கள் 5 புதிய முறை பாட நூல்கள், 8 செலவு குறைந்த ஆய்வுக்கூட கருவிகள், 12 பேசாத திரைப்படங்கள், ''ஒளியியல்'' எனும் பாடத்திற்கேற்ற அரை மணி நேர பேசும்படம் ஆகியவற்றைத் தயாரித்தனர்.

ஆசியாவில் வேதியியல் கற்பிக்க இது போன்ற ஒரு தொடக்க திட்டத்தை யுனெஸ்கோ தொடங்கியுள்ளது. இது போலவே ஆப்பிரிக்காவில் உயிரியலுக்கும் அராபிய நாடுகளில் கணக்கியலுக்கும் திட்டங்கள் வகுக்கப்பெற்றுள்ளன.

ஐ.நாவின் பிற தனிச் செயல் நிறுவனங்களான உணவு, பயிர்த் தொழில் நிறுவனம், உலக வானிலை நிறுவனம், உலக சுகாதார நிறுவனம், பன்னாட்டுத் தொழில் நிறுவனம் போன்றவற்றின் பணியும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவை எளிய நாடுகளில் கல்வித் தரத்தை உயர்த்த பயிர்த் தொழில், வானிலை ஆய்வு, மருத்துவம், ஆசிரியப் பயிற்சி போன்ற துறைகளிலெல்லாம் பற்பல பணியாற்றி வருகின்றன.

இத்தகைய கூட்டுறவு முயற்சிகளும் நாடுகளுக்கிடையே நிலவும் உதவித் திட்டங்களும்கூட இன்றைய தேவைகளில் பாதியைக்கூட தீர்ப்பதில்லை.

1980இல் மூன்றாவது உலகின் இன்றைய மாணவர் தொகை 40 கோடியிலிருந்து 60 கோடியாக உயர்ந்திருக்கும். இந்நாடுகள் பொருளாதார ''எழுச்சி'' பெற, 900,000 அரைத் தேர்ச்சி பெற்ற தொழில் நுட்பப் பணியாளரும் (இன்றுள்ளதுபோல் 4 மடங்கு) 600,000 பொறி அமைப்பாளரும், விஞ்ஞான வல்லுநரும், (150,000 பேர் இன்றுள்ளனர்), பிற கிராமப் பொருளாதார வல்லுநரும் நிருவாகிகளும், கணக்கர்களும், மருத்துவர்களும் தேவைப்படுவரென கணக்கிடப்பெற்றுள்ளது.

ஆசிரியருக்குப் பயிற்சி அளித்து மாணவருக்குக் கல்வி அளித்து பள்ளிகளையும் பல்கலைக் கழகங்களையும் கட்டுவதற்குத் தேவையான பணத்தை எங்கிருந்து பெறுவது? தொழில் வளர்ச்சி

(தொடர்ச்சி 32ஆம் பக்கம் பார்க்க)

Photo © Michel Hetier

கல்விக்கும் அழிவுக்குமிடையே போட்டி

ஹோவார்டு ப்ராபின்

"மனித வரலாறு வரவர கல்விக்கும் அழிவுக்குமிடையே நிகழும் போட்டியாக மாறி வருகிறது'' என்று எச். ஜி. வெல்ஸ் தமது ''வரலாற்றின் எல்லைக் கோடுகள்'' என்ற நூலில் 50 ஆண்டுகளுக்கு முன் எழுதினர். 1920இல் அவரது இக்கருத்தைப் பலர் வெறும் கற்பனை என்று கருதியபோதிலும், இன்று அதை அடிப்படை உண்மையென ஏற்றுக் கொள்கின்றனர்.

இருபதாம் நூற்றுண்டில், குறிப்பாக இரண்டாவது உலகப் போருக்கும் பிறகு மனிதனின் உற்பத்தி திறனில் ஏற்பட்ட மாபெரும் வளர்ச்சி அறியாமையையும் வறுமையையும் பிணியையும் நாம் ஒழித்துவிடமுடியும் என்பதை எடுத்துவிட்டது.' இன்று உலகில் வாழும் 363 கோடி மக்களில் வசதியற்ற நிலையில் அடிமட்டத்தில் வாழும் மூன்றில் இரண்டு பங்கினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றனர்.

ஆகவே, நாட்டுக்குத் தேவைப்படும் சிறப்புத் தகுதிபெற்ற மக்களையும் அறிவாற்றல் மிக்க குடிகளையும் உருவாக்கும் கருவியாகக் கல்வியைக் கருதும் விழிப்புற்ற ஒரு சில அறிவுடையோர் மட்டுமல்லாமல் பாமர மக்கள் பலரும் கல்வி வாய்ப்பைப் பெற முனைகின்றனர்.

''உலகில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் கல்விபெற உரிமையுண்டு'' என்று ஹொரெஸ் மான் கூறினர். இவ்வுரிமையைப் பெற உலக மக்கள் விழைகின்றனர். வேண்டுமென்றே அதற்கான முயற்சியின் அளவையும் தேவையையும் உணராமலோ இவ்வுரிமையை

ஹோவார்டு ப்ராபின் விஞ்ஞானம், கல்வி சார்ந்த பொருள்களை மக்களுக்கு விளக்குவதில் சிறந்த ஆங்கிலேய எழுத்தாளரும் பத்திரிகையாளரும் ஆவார்.

வழங்க மறுப்போமென்ருல் எச். ஜி. வெல்ஸ் குறிப்பிட்ட ''அழிவு'' ஏற்படும்.

கல்வி பற்றிய ஒப்பீட்டு ஆய்வுகள் கல்வியின் அமைப்பு, உட்பொருள், முறை ஆகியவற்றின் வேறுபாடுகளேயே பெரிதும் ஆய்கின்றன. அத்தகைய ஆய்வுகள் நமக்குப் பலவற்றை அறிவித்த போதிலும், நடைபெற்று வரும் கல்வி முயற்சி பற்றி அவை ஒன்றும் தெரிவிப்பதில்லே. அதன் தன்மை பற்றி மட்டும் ஓரளவு தெரிவிக்கின்றன.

ஆனுல் சில நாடுகள் 1950லிருந்து 1965 வரை கல்விக்காக செலவழித்த விவரங்களே யுனெஸ்கோவின் புள்ளி விவர அலுவலகம் திரட்டியுள்ளது(1). இத்தகைய புள்ளி விவரங்களே விளக்கும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டுமெனினும், அவை கல்விக்காக பணம் எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதைப் பொதுவாகக் காட்டுகின்றன..

கல்விக்காக செலவிடப்படும் தொகையும் நாட்டின் மொத்தச் செலவில் அதன் விகிதமும் வளர்ந்து வருகின்றன என்பது யுனெஸ்கோ திரட்டிய விவர ஆய்விலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. 1960லிருந்து 1965 வரை இவ் வளர்ச்சி மிகுதியாக இருந்தது. 1960இல் 90 நாடுகளின் வருமானத்தில் கல்விக்காக 3.6 சதவிகிதமும் 1965 இல் 4.5 சதவிகிதமும் செலவிடப்பட்டது.

மனித முன்னேற்றத்தைப் பொறுத்த வரையில் இதை ஒரு பெரிய சாதனே எனலாம். 1960-61 பள்ளி ஆண்டில் உலகில் (அண்மையில் விவரங்கள் கிடைக்காத சீஞ, வட கொரியா, வட வியட்நாம் தவிர) 32.4 கோடி மாணவர் தொடக்க, நடுநிலே, உயர்தரக் கல்வி நிலேயங்களில் சேர்ந்தனர். 1966-67இல் 42.8 கோடி சேர்ந்தனர்; அதாவது 6 ஆண்டுகளில் 10.4 கோடி அல்லது 32 சதவிகிதம் அதிகரித்தது.

உலகின் மக்கள் தொகை ஆண்டுக்கு 1.9 சதவிகிதம் அதிகரிக்க, பள்ளியில் சேரும் மாணவரின் எண்ணிக்கை ஆண்டுக்கு 4.8 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இது வளர்ச்சியுறும் நாடுகளில் தொடக்கக் கல்வி பொதுவாகப் பரவுவதைக் காட்டுகிறது. ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் மொத்த மக்கள் தொகையில் சிறு தொகையினரே கல்வி பயின்ற போதிலும், இவ்விரு கண்டங்களிலுமே மேலே குறிப்பிட்ட காலத்தில் ஆண்டு தோறும் பள்ளியில் சேர்ந்தோரின் தொகை மிகுதியாக இருந்தது.

பல நூற்ருண்டுகளாக பெண்களுக்கு மறுக்கப்பட்டு வந்த கல்வி உரிமைகளே வழங்குவதில் இப்போது பெரும் முன்னேற்றம் காணப்படுகின்றது. பண்டைய சீஞவில் ''திறமையற்ற பெண்ணேப் பொதுவாக எங்கும் காணலாம்'', ரூஸோவின் 'எமிலி'யில் வரும் பாத்திரமான சோஃபிக்கு அறிவுக் கல்வியின்றி அறக் கல்வி அளிக்கப்பட்டது, 1807இல் இக்

(1) ''கல்வித்துறை செலவின் பன்ஞட்டு வளர்ச்சி: 1950 — 1965'' ஃப்ரெடெரிக் எட்டிங்கும் டை யெட்டர் பெர்ஸ்டெக்கரும் 1969இல் எழுதியது. (யுனெஸ்கோ புள்ளி விவர அறிக்கையும் ஆய்வும்.)

கூவனில் நெப்போலியன் சிந்திக்கும் பெண்களுக்குப் பதிலாக நம்பும் பெண்களே உருவாக்கும் பள்ளியை நிறுவிஞர் என்பவை போன்ற செய்திகளே இப்போது நம்மால் நம்பமுடியவில்லே.

இத்தடைகள் எல்லாம் அண்மையில் ஒழிந்துபோயின. மூன்று கல்வி நிலேகளிலும் பள்ளியில் சேரும் பெண்களின் தொகை 1960–61இல் 14 கோடியிலிருந்து 1966-67இல் 18.6 கோடியாக, அதாவது 33 சதவிகிதம் உயர்ந்தது. பள்ளியில் சேர்வோரின் மொத்த தொகையில் பெண்களின் தொகை 1960–61இல் இருந்ததுபோலவே 1966–67லும் 43 சதவிகிதமாக இருந்தது. ஆனுல் ஆப்பிரிக்காவில் பள்ளியில் சேரும் பெண்கள் சதவிகிதம் 1960-61இல் 35 ஆகவும் 1966-67இல் 38 ஆகவும், ஆசியாவில் முறையே 37, 38 ஆகவும் உயர்ந்தது.

''செயலாற்றக் கூடியவர் செயலாற்றுவர்; கூடாதவர் கற்றுக் கொடுப்பர்'' என்று ஜார்ஜ் பெர்ஞர்டு ஷா இழித்துக் கூறியபோதிலும், கல்வி பெற விஜ்ழவோருக்கு கல்வி அளிப்பதும் அளிக்கும் கல்வியின் தன்மையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையையும் அவர்களுக்கும் மாணவருக்குமுள்ள விகிதத்தையும் பொறுத்துள்ளது. கற்பிக்கும் பொறிகள், தொலேக்காட்சி, பிற ஒலிப்பட சாதனங்கள் இன்னும் மிகுதியாகப் பயன்படவில்லே.

1966–67இல் தொடக்க, நடுநிலே, உயர்நிலேப் பள்ளிகளில் பயின்ற 42.8 கோடி மாணவருக்கு 1.7 கோடி ஆசிரியர் இருந்தனரெனவும் 1960-61 லிருந்து உலகில் ஆசிரியரின் தொகை ஆண்டு தோறும் 3.9 சதவிகிதம் அதிகரித்துள்ளது எனவும் கணக்கிட்டுள்ளது.

ஆயினும் ஆசிரியரின் தொகையை விட பள்ளியில் சேரும் மாணவரின் தொகை மிகுதியாக அதிகரித்துள்ளது. இதஞல் ஆசிரியர் மாணவர் விகிதம் சிறிது அதிகரித்திருக்கின்றது. 1960-61இல் தொடக்கப் பள்ளியில் 30 மாணவருக்கு ஓர் ஆசிரியராக இருந்த விகிதம் 1966–67இல் 31க்கு ஒன்ருகஉயர்ந்தது. நடுநிலேப் பள்ளியில் 1960–61இல் 16 மாணவருக்கு ஓர் ஆசிரியாக இருந்த விகிதம் 1966-67இல் 19க்கு ஒன்ருக உயர்ந்தது.

தொடக்க நிலேக் கல்வியை முக்கியமாகக் கருதும் நாடுகளில் கூட கல்வி வாய்ப்பளிக்கும் முயற்சியிஞல் உயர் நிலேக் கல்வி பெற விழைவோரின், தொகை பெருகுவதைக் காண்கிருேம். உலகில் 1966–67இல் பள்ளியில் சேர்ந்தோரில் 73 சதவிகிதம் தொடக்கப் பள்ளிகளிலும் 23 சதவிகிதம் நடுநிலேப் பள்ளிகளிலும் 4 சதவிகிதம் உயர்நிலேப் பள்ளிகளிலும் சேர்ந்தனர்.

பிற கண்டங்களேவிட ஆப்பிரிக்காவில்தான் பள்ளியில் சேர்வோரின் தொகை மிகுதி. மூன்று நிலேப் பள்ளிகளிலும் முறையே 41, 84, 74 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

அது போலவே ஆசியாவில் உயர்தரக் கல்வியில்,. சிறப்பாக பெண் கல்வியில் வளர்ச்சி காணப்படுகின்றது. இங்குதான் பிற கண்டங்களே விட மிகுதியாக வளர்ச்சியைக் காண்கிருேம்.

1967இல் 10 ஆண்டுகளில்

உலகில் கல்விக்காக செலவிடப்படும் தொகை* அதிகரிப்பதை ஆயும்போது கிடைக்கும் புள்ளி விவரங்கள் அதற்கான மூன்று முக்கிய காரணங்களேக் காட்டுகின்றன. அவையாவன: நாட்டு வருமானம், பல்வேறு கல்வி நிலேகளில் சேரும் மாணவரின் தொகை, தொழில் புரியும் மக்களில் சிறப்புத் தகுதி பெற்ருேரின் எண்ணிக்கை.

பல நாடுகளில் இவை வருங்கால கல்வி செலவை மிகுதியாகப் பாதிக்கின்றன. பிற காரணங்களும், குறிப்பாக கல்வி வாய்ப்பைப் பெறும் ஆர்வமும் கல்வியின் தரத்தை உயர்த்தும் முயற்சியும் கல்விச் செலவை அதிகரிக்கச் செய்யும்.

கல்விச் செலவைப்பற்றி முன்னறிவிப்புகள் பல தவருன எண்ணங்களிலிருந்து பெறப்பட்டவை. எல்லா நாடுகளும் ஒரு குறிப்பிட்ட முறையில் வளர்ச்சி பெற வேண்டுமென்ற எண்ணம் நிலவுகின்றது. நாடுகளின் செலவை ஒப்பிட்டுப் பார்க்கும்

உலகப் படைக்கலச் செலவு

182,000,000,000 டாலர்

4,000,000,000,000 டாலர்

உலகின் படைத்துறைச் செலவு இப்போது புதிய உச்ச எல்லையை அடைந்துள்ளது. அமெரிக்கப் படைக்கலக் கட்டுப்பாடு, படைக்கலக் குறைப்பு நிறுவனம் பிற அமெரிக்க அரசாங்க நிறுவனங்களுடனும் யுனெஸ்கோ, உலக சுகாதார நிறுவனம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுடனும் இணைந்து 120 நாடுகளில் அண்மையில் ஆய்வு நடத்தியது. அதன் விவரங்களடங்கிய ''உலக படைத்துறைச் செலவு 1966-1967'' எனும் அறிக்கையின்படி 1967இல் உலகின் மொத்த படைத்துறைச் செலவு 18,200 கோடி டாலராகும்.

1962இல் உலகின் படைக்கலச் செலவு 12,000 கோடி டாலரென ஐ. நா. மதிப்பிட்டது. இப்போது அது 50 சதவீதம் உயர்ந்து விட்டது. இவ்வாறே உயருமானால் அடுத்த 10 ஆண்டுகளில் அச்செலவு 4 இலட்சம் கோடி 4,000,000,000,000 டாலராக உயரும்.

போது கடந்த கால செலவு முறையே நிலைபெற்று விடும்போல் தோன்றுகிறது. கல்வித் திட்டம், முறை, அமைப்பு ஆகியவற்றில் பெரும் மாற்றங்கள் ஏற்படவிருக்கும் போது நாடுகளின் செலவை ஒப்பிட்டுப் பார்ப்பது பயனளிக்காது.

கல்விக்கான செலவுக்கும் நாட்டின் பிற தேவைகளுக்கான செலவுக்கு முள்ள நெருங்கிய தொடர்பானது கல்வியை நாட்டுத் திட்டத்தின் முக்கிய பகுதிகளாக கருத வேண்டுமெனக் காட்டுகிறது. நாடுகளை ஒப்பிடுவதற்குப் பதிலாக நாட்டு மொத்த ஆக்கத்தில் கல்விக்கும் பிற தேவைகளுக்கும் செலவழிக்கப் படும் பகுதிகளை ஒப்பிடுவது சிறந்ததாகும். இவ்வாறு ஒப்பிடும்போது, நமது மதிப்புத் தரம் மாறி விட்டதென்பதும், பல நாடுகளில் கல்வி நாட்டு ஆக்கத்தில் சிறு பகுதியே பெறுகிறதென்பதும் தெளிவாகின்றது.

இவ்வாக்கியத்தைப் படித்து முடிப்பதற்குள் உலகில் பதினொரு குழந்தைகள் பிறந்திருக்கும். அதே நேரத்தில் 5 பேர் இறந்திருப்பர். உலகில் நிகழும் மக்கள் தொகை பெருக்கம் கல்வி, உணவு, சுகாதாரம் ஆகிய பெரும் பிரச்னைகளை நமக்குக் காட்டுகிறது.

மேலே கூறிய முயற்சிகள் நடைபெற்ற போதிலும், கடந்த பத்து ஆண்டுகளில் எழுத்தறிவற்ற முதியோரின் தொகை 74 கோடியிலிருந்து 80 கோடியாக உயர்ந்துள்ளது. மாபெரும் முயற்சிகள் எடுத்தாலன்றி, இப் பெருக்கத்தைத் தடுக்க முடியாது.

குடும்பக் கட்டுப்பாடு, உணவு உற்பத்திப் பெருக்கம், அடிப்படை சுகாதார முன்னேற்றம் போன்ற பிரச்னைகளைக் கல்வியினால் தீர்க்க முடியுமாதலால், அதை வளர்க்க நாம் முயற்சி செய்யவேண்டும். அணுகுண்டைவிட உலகுக்கு மிகுந்த இடர் தரவல்ல மக்கள் தொகைப் பெருக்கம் எனும் ''குண்டு'' வெடிப்பதை நாம் கல்வியால்தான் தடுக்க முடியும். இதில் நாம் எவ்வாறு தவறி விடுகிறோம் என்பது, உலகம் கல்விக்குச் செலவிடுவதைவிட 40 சதவிகிதம் அதிகமாக போர் முயற்சிகளுக்குச் செலவிடுகிறது என்பதிலிருந்து தெரிகிறது. (அடுத்த பக்கம் பார்க்க).

உலகம் முக்கியமான செலவுகளுக்கு முதலிடம் கொடுப்பதுடன், கல்வியின் நோக்கத்தைப் பற்றிய தனது கருத்தையும் மாற்ற வேண்டும். தொடக்கப் பள்ளியில் எழுத்தறிவை வழங்குவது போலவே சுகாதாரம், உணவு உண்ணுதல் போன்றவற்றையும் கற்றுக் கொடுக்க வேண்டும். வளர்ச்சியுறும் நாடுகளில் அவற்றின் வளர்ச்சி நிலையின் தேவைக்கேற்ற துறைகளில் பல்கலைக் கழகங்கள் கல்வி அளிக்க வேண்டும். சிறுபான்மையினருக்கு மிகுதியான பண்

(தொடர்ச்சி 32-ஆம் பக்கம் பார்க்க)

படைக்கலச் செலவுகள் பற்றிய ஆய்வு தரும் திடுக்கிடும் செய்திகள்

உலகம் கல்வியைவிட 40 சதவிகிதம் அதிகமாக படைக்கலங்களுக்கெனச் செலவிடுகின்றது; போருக்கு 15,900 கோடி டாலரும் கல்விக்கு 11,100 கோடி டாலரும் செலவிடுகிறது.

■

உலகில் ஒவ்வொரு போர் வீரனுக்கும் ஆண்டுக்குச் சராசரி 7,800 டாலரும், பள்ளிக்குச் செல்லும் (5 முதல் 19) வயதுள்ளவரில் 100 கோடி மாணவர் ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்குச் சராசரி 100 டாலரும் செலவாகின்றது.

■

பொருளாதார வளர்ச்சியுற்ற நாடுகள் கல்விக்கெனத் தமது மொத்த ஆக்கத்தில் 5 சதவிகிதமும் வளர்ச்சி குன்றிய நாடுகள் 3 சதவிகிதமும் செலவிடுகின்றன.

■

வளர்ச்சி குன்றிய நாடுகளில் உலக மக்களில் 72 சதவிகிதம் பேர் வாழ்கின்றனர். ஆயினும் அவை கல்விக்கென உலகம் செலவிடுவதில் 11 சதவிகிதமே செலவிடுகின்றன.

■

வளர்ச்சி குன்றிய நாடுகள் ஆண்டுதோறும் கல்விக்கெனத் தலைக்கு 5 டாலரும் வளர்ச்சியுற்ற நாடுகள் தலைக்கு 100 டாலரும் செலவிடுகின்றன.

■

1965க்கும் 1967க்கு மிடையே உலகப் படைக்கலச் செலவு 4,400 கோடி டாலர் உயர்ந்தது. இதில் ¾ பகுதியை அமெரிக்காவும் ரஷ்யாவும் செலவிட்டன.

■

ஜப்பான் கல்விக்கெனப் படைத் துறையை விட 4 மடங்கும் கனடா இரு மடங்கும் அதிகமாகச் செலவிடுகின்றன. பெல்ஜியம், டென்மார்க், இத்தாலி, நெதர்லாந்து, நார்வே, சுவீடன், சுவிட்ஸர்லாந்து போன்ற வளர்ச்சியுற்ற நாடுகளும் கல்விக்கெனப் படைத் திட்டங்களைவிட மிகுதியாகச் செலவிடுகின்றன.

■

பல நாடுகளில் அரசாங்கத்தைப்போல் தனியார் துறையும் கல்விக்கெனப் பெருந் தொகை செலவிடுகின்றது. அமெரிக்காவில் கல்விக்காக அரசாங்கம் 3,400 கோடி டாலரும் தனியார் துறை 700 கோடியும் செலவிடுகின்றன. ஆயினும் இவ்விரண்டின் மொத்தத் தொகை அமெரிக்காவின் படைச் செலவில் [illegible] பகுதிக்கும் குறைவாக இருக்கின்றது.

■

1964 - 1967இல், வளர்ச்சியுறும் நாடுகள் தொழில் வளர்ச்சியுற்ற நாடுகளைப்போல் படைச் செலவைப் பெருக்கவில்லை. அவற்றின் சராசரி படைச் செலவு தலைக்கு 8 டாலர் (வளர்ச்சியுற்ற நாடுகளில் 170 டாலர்) ஆயினும் தலைக்கு 186 டாலர் நாட்டின் மொத்த ஆக்கமுடைய தாழ்ந்த வாழ்க்கைத் தரமுள்ள இந்நாடுகளில் படைக்கெனத் தலைக்கு 8 டாலர் செலவிடுவது பெரும் பளுவாகவே இருக்கும்.

■

வளர்ச்சியுறும் நாடுகளுக்கு உதவியாக அளிக்கப்படும் மொத்தத் தொகையாகிய 800 கோடி டாலர், உதவியளிக்கும் நாடுகளின் மொத்த ஆக்கத்தில் ஒரு சதவிகிதத்தில் பாதிக்கும் குறைவாகும்.

■

வளர்ச்சியுற்ற நாடுகளில் வளர்ச்சியுறும் நாடுகளுக்கு அளிக்கப்படும் உதவி தலைக்கு 8 டாலரும் படைச் செலவு தலைக்கு 170 டாலரும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

■

வளர்ச்சி குன்றிய நாடுகளின் படைச் செலவு, அவை அயல் நாடுகளிடமிருந்து பெறும் உதவியைவிட இரு மடங்குக்கும் அதிகமாக இருக்கின்றது.

திகைப்பூட்டும் இவ்வெண்களின் முழுப் பொருளையும் நம்மால் சாதாரண மனிதனுக்கு விளக்க முடியாது. ஆயினும் எதிர் பக்கத்திலுள்ள படம் இதை விளக்க ஓரளவு முயல்கிறது. ஒவ்வொரு விஞடியும் ஒரு டாலர் கீழே விழுமானல், 1967இல் படைக் கலத்திற்கெனச் செலவிடப்பட்ட தொகையாகிய 18,200 கோடி டாலரை அடைய 5,750 ஆண்டுகளாகுமெனவும், அடுத்த 10 ஆண்டுகளில் செலவிடப்படும் தொகையாகிய 4,000,000,000,000 டாலரை அடைய 1,26,000 ஆண்டுகளாகுமெனவும் அது காட்டுகிறது.

வேறு வகையில் சொல்ல வேண்டுமானல், 2½ மி.மீ. கனமுள்ள நாணயங்களை ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கினல், 1967இல் படைத்துறைச் செலவை அடைவதற்குள் அவ்வடுக்கு நிலாவைக் கடந்து 71,000 கி.மீ. சென்றுவிடும். இதே நிலையில் அடுத்த 10 ஆண்டுகளில் செலவிடப்படும் தொகையை அடைய நாணய அடுக்கு விண்வெளியில் 1 கோடி கி.மீ. அல்லது பூமிக்கும் நிலாவுக்கும் இடையேயுள்ள தூரத்தைப்போல் 30 மடங்கு சென்றுவிடும்.

இரண்டாம் உலகப் போரின் உச்ச கட்டத்தைத் தவிர வேறு எக்காலத்திலும் உலகம் இப்போது செலவிடுவது போல் படைத்துறைக் கெனச் செலவிட்டதில்லை. இஃது உலகின் மொத்த ஆக்கத்தில் 7 சதவீதமாகும். இது தென் ஆசியா, இலத்தின் அமெரிக்கா, அண்மைக் கிழக்கு நாடுகளில் வாழும் 100 கோடி மக்களின் மொத்த ஆண்டு வருமானத்திற்கு சமம்.

1964-1967இல் படைத்துறைச் செலவு உலக மக்கள் தொகையைவிட விரைவாகவும் (7 சதவீதம்) உலகின் மொத்த ஆக்கத்தை விட மிக விரைவாகவும் (16 சதவீதம்) உயர்ந்தது.

1966இல் உலகின் படைத் துறை, பிற அரசாங்கச் செலவுகள்





ஒவ்வொரு வினாடியும்
ஒரு டாலர் நாணயமாக விழுந்தால்

1967இல் உலகம் படைக்கலத்திற்கென
செலவிட்ட 182,00 கோடி டாலரை
அடைய

5,750 ஆண்டுகள்

Photo Unesco · Dominique Roger

*(பிரமிடுகளின்
வயதைவிட
1,000 ஆண்டுகள்
அதிகம்)*

ஆகும்.

அடுத்த 10 ஆண்டுகளில்
படைக்கலத்திற்கென செலவிடப்படும்
4,000,000,000,000 டாலரை அடைய

126,000 ஆண்டுகள்

*(நியாண்டர்தல் மனிதன்
காலமுதல் இன்று
வரையுள்ள காலம்)*

ஆகும்.

புதிய

"ஒரு நாள் நாம் அனைவரும் உலகமாகிய பள்ளியில் வாழ்வைக் கழிப்போம். கல்வி என்பது — அன்பு காட்டி, வளர்ந்து, மாறக் கற்றுக் கொள்ளல் எனும் பொருளில் — ஒரு தொழிலுக்குப் பயிற்சியளித்து நமது வளர்ச்சியைக் குறைக்கும் துன்ப முறையாக இல்லாமல் இன்பமான முழு வாழ்வாகவே அமையும்."

(மார்ஷல் மக்லிஹான்)



Photo © Doisneau-Rapho, Paris

நமது உலகம் சீர்குலைந்து வருகின்றது. ஆனுல் ஏன், எவ்வாறு, எங்கே என்பதைப் பற்றிப் பலரிடையே கருத்து ஒற்றுமை இல்லை. சிலர் தொழில் வளர்ச்சியடைந்த மேல் நாடுகளை இன்றைய சமூகத்தின் ''நோயாளி'' எனக் கருதுகின்றனர். கிழக்கு ஐரோப்பிய சமதர்ம நாடுகள் அத்தகைய நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக நினைப்பதேயில்லை. மூன்ருவது உலகின் நிலை முற்றிலும் வேருக இருக்கின்றது. ஆயினும் நாம் அதை எவ்வாறு குறிப்பிடினும், ஒரே வகையான சீர்குலைவையே எங்கும் காண்கிருேம்.

மேல்நாடுகளில் இளைஞரிடையே கிளர்ச்சி ஏற்பட்டிருப்பது வெள்ளிடைமலை. பல்கலைக் கழகங்களில் நிகழும் கிளர்ச்சிகள், அரசியல் ஈடுபாடு அல்லது அரசியலில் முற்றிலும் அக்கறையின்மை, 'ஹிப்பி' இயக்கங்கள், கட்டுப்பாடின்மை, இன்ப நாட்டம் இவையெல்லாம் தற்கால சமூகத்தில் ஆழ வேரூன்றியுள்ள சீர்குலைவையும், புதியதொரு நாகரிகத்தின் மேலுள்ள வேட்கையையும் காட்டுகின்றன.

இத்தகைய எழுச்சி என்ருவது ஒரு நாள் கல்வி உலகிலே நிகழ வேண்டியிருந்தது. இன்றைய இந்நிலைமையினைப் பற்றி முதலில் சிலரால் ஆயப்பெற்று, பிறகு மனம் புழுங்கிய இளைஞர் கூட்டங்களினுல் ஆதரிக்கப்பட்டு, இறுதியில் ஜப்பானிய (டோக்கியோ), அமெரிக்க (பெர்க்லி, கொலம்பியா), ஐரோப்பிய (ரோம், பாரிஸ்) பல்கலைக் கழகங்களில் வன்முறை கிளர்ச்சிகளாக வெடித்தன.

சமதர்ம நாடுகளில் இத்தகைய பிரச்னை இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் வெளிப்படையாக ஒன்றும் தெரியவில்லையெனினும், மறைவிலே ஒன்றும் நடைபெறவில்லை என்று எவ்வாறு சொல்ல முடியும்? இதற்கு விடையளிப்பது அரிது. உண்மையில் சமதர்ம கொள்கைகளே இருபதாம் நூற்ருண்டின் அறைகூவலை ஏற்க முதலில் முன்வந்தன என்பதை எவரும் மறுக்க முடியாது. அவை பன்னுட்டு ஒற்றுமையையும் தனி மனிதன் சமுதாயத்தில் ஈடுபட

லெபனுனைச் சேர்ந்த ரெனே ஹபாஹி யுனெஸ்கோவின் தத்துவத் துறை உறுப்பினர்; பீரட்டிலுள்ள லெபனுன், பிரெஞ்சு, அமெரிக்க பல்கலைக் கழகங்களின் முன்னுள் தத்துவப் பேராசிரியர்; பல தத்துவ நூல்களை இயற்றியவர்.

உலக எல்லையை எதிர்நோக்கும் வருங்கால மாணவன்

ரெனே ஹபாஹி

வேண்டிய தேவையையும் வலியுறுத்துகின்றன. இவை இரண்டும் தாம் பிற நாடுகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் கூறுகளாகும்.

ஆனால் அரசியல் நடவடிக்கைகள் எப்போதும் கொள்கைகளுக்கேற்ப இருப்பதில்லையாதலால், வல்லரசுகளின் சூழ்ச்சிக்கு முன்னால் ஒற்றுமை எனும் கருத்து மறைந்து விடுகிறது. அப்போது நல்ல நோக்கங்கள்கூட பறந்து விடுகின்றன. ஆகவே இதன் விளைவாகத் தோன்றும் தோல்வி மனப்பான்மை மேல் நாடுகளில் நிலவுவது போலவே இருக்கின்றது.

வளர்ச்சியுறும் நாடுகளில் தோன்றியுள்ள நெருக்கடிகள் வெளித் தோற்றத்திற்கு ஒன்றுபோலிருப்பினும் வெவ்வேறு காரணங்களினால் தோன்றியவை. அங்கு சமூக, பொருளாதார நிலைமை ஒரு வகையில் நிலைகுலைந்துள்ளது எனலாம். மரபான போக்குகளுக்குப் பதிலாக தற்கால முறைகளைப் பயன்படுத்துவதை மக்கள் பெரிதும் விரும்புவதுடன் மனவெழுச்சியும் அடைகின்றனர்.

வளர்ச்சியுறும் நாடுகளில் பழமையான மரபார்ந்த முறைகள் இன்னும் உலவி வருகின்றன. தற்கால முறைகளைத் திடீரெனப் புகுத்தியதால் பிற நாட்டு மன அலைவுகள் அங்கும் தோன்றலாயின. இதை சமூகவியல் அறிஞர்கள் பலர் பெரிதாகக் கருதுவதில்லை. இதன் பயனாக பொருளாதார உதவியின் விளைவுகள் குறைகின்றன. தற்கால முறைகளினால் ஆப்பிரிக்கர்களது உள்ளத்தில் ஏற்படும் விளைவுகள் ஐரோப்பிய இளைஞரிடம் ஏற்படுவதைப் போல் இல்லை. அவை வேறுவகை மனவெழுச்சியை உண்டு பண்ணுகின்றன.

நம் அனைவருக்கும் நம்மை சூழ்ந்துள்ள உலகம் சிதைவுறுவதுபோல் தோன்றுகிறது. சூழ்நிலை எதுவாக இருப்பினும், உலக முழுவதையும் நோக்கும்போது நிலைமை நகைத்தற்குரியதாகவும் புரியாததாகவும் இருக்கின்றது. உலக முழுவதுமுள்ள இளைஞர்கள், பழைய தொடர்பெல்லாம் துணிக்கப் பெற்றதாகவும், மூலைகளில் எல்லாம் வெடிப்புகள் தோன்றி, அவை ஒழுக்கச் சிதைவு எனும் பெரும் பெரும் பிளவாக மாறும் குழப்பம் மலிந்த உலகில் வாழ்வதாகவும் உணர்கின்றனர்.

''டென்மார்க் அரசில் எங்கோ சீர்கேடு ஏற்பட்டுள்ளது'' என்றான் ஹாம்லெட். பிறகு அவன் உலகின் மடமையைக் கண்டதும்,

''காலம் சீர்குலைந்து விட்டது. அதை சீர்படுத்த நானும் பிறந்திருக்கிறேனே என வெறுப்படைகிறேன்'' என்றான்.

வெறுப்பாக இருக்கலாம். ஆயினும் எவ்வளவோ கிளர்ச்சி யூட்டுவதாக இருக்கின்றது! இதுவல்லவா உயிர் வாழ சிறந்த காலம்!

ஆம், காலம் சீர்குலைந்து விட்டது. முதியோர் மூடி அடைத்து வைத்த கதவுகளை இளைஞர் சூறாவளிபோல் தாக்கி வருகின்றனர். ஆனால் இன்றைய இளைஞர்'' இருப்பதா இறப்பதா'' என்பதைப் பற்றி எண்ணி காலத்தைக் கழிப்பதில்லை. அவர்கள் தமது பாதையை வகுத்துக் கொண்டு, முதியோர் எதிர்பாராத வகையில் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு உலகின் மக்கள் தொகையைப் பற்றி குறிப்பிடவேண்டும். மனித வரலாற்றில் ஒரு புதிய ஊழி தொடங்கியுள்ளது. வரலாற்றின் முக்கிய காலங்களில் நிகழ்ந்தது போன்ற மாபெரும் மாற்றம் தோன்ற இருப்பதுமல்லாமல், மனித இனம் உடல், உள்ள இளமையையும் பெற்றுள்ளது.

உலக மக்களில் பாதிக்குமேல் இன்று 25 வயதுக்குட்பட்டவராவர். மீதியுள்ள பாதியில் தற்கால மருத்துவ முறையினால் நீண்ட வாழ்வு பெற்று கடந்த காலத்தைப் பிரதிபலிக்கும் முதியோரைத் தள்ளி விடுவோமானால், இன்றைய உலகில் ஒரு முதியவருக்கு மூன்று இளைஞர்கள் இருப்பதைக் காணலாம். உலகில் இத்தனை இளைஞர்கள் இருப்பது வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

பண்டை நாளிலிருந்தே தந்தைக்கும் மகனுக்கும் பிணக்கு ஏற்படுவது வழக்கம்தான். ஆயினும் கடந்த காலத்தில் இப்பிணக்குகள் கடுமையாக இருந்தபோதிலும், முதியவர்கள் புதிய வழிகளை ஏற்றுக் கொண்டு தமது கருத்துக்களை மாற்றி பிணக்குகளைத் தீர்த்துக் கொண்டனர். ஆனால் இன்று நிலைமை மோசமாகி பிளவு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது. பிளவு ஏற்கெனவே ஏற்பட்டு விட்டதென்றும், அற்புதம் நிகழ்ந்தாலன்றி அஃது இன்னும் வளர்ந்து செல்லும் என்று எண்ணுவாரும் உளர்.

இவ்வாறு ஏற்படுவதற்கு என்ன நிகழ்ந்துவிட்டது? உண்மையில் நாம் ''புதிய'' அல்லது ''புரட்சி'' உலகில் வாழ்கிறோம். அதில் நாகரிகத்தை மாற்றியமைக்கும் புதிய சமூகத்தைப் பழைய தலைமுறையே உருவாக்கியது. ஆனால் நடைமுறையொழுங்கினாலும் அச்சத்தினாலும் செயலிழந்திருக்கும் முதியோர் தமது அதிகாரத்தைத் துறக்க மறுக்கின்றனர். அவர்கள் தாமே உருவாக்கிய சமூகத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தாம் வகுத்த புதிய பாதையில் வீறுநடையுடன் செல்வதற்குப் பதிலாக, நடு வழியில் நின்று விட்டனர்.

புதிய சமூகத்தின் முக்கிய இயல்புகள் யாவை? இடத் தொலைவில் ஏற்பட்டுள்ள சுருக்கம், செய்தித் தொடர்பின் விரைவு, பன்னாட்டு ஒற்றுமை யுணர்வு ஆகிய மூன்றையும் குறிப்பிடலாம்.

முதல் இரண்டையும் பற்றி விளக்கத் தேவையில்லை. ஏனெனில் ஏற்கெனவே அவைபற்றிப் பலர் எழுதியுள்ளனர். இப்போது உலகின் எல்லை விண்ணின் புறவெளியை அண்டிவிட்டது. அங்கு நாட்டு எல்லைகளுக்கு இடமில்லை. நிலாவிலிருந்து பார்க்கும்போது நமது உலகு ஒளி ஆண்டுகளெனும் கடலில் மூழ்கியுள்ள சிறு தீவாக மாறுகிறது.

இடத் தொலைவில் ஏற்பட்டுள்ள மாற்றம்போலவே, தொலைவிடங்களை உடனே இணைக்கும் மின்ம செய்தித் தொடர்பு முறையும் வியத்தற்குரியதாக விளங்குகிறது. தொலைச் செய்தி அறிவிக்கும் துணைக்கோள் மிகத் தொலைவிலுள்ள கண்டத்தை தொலைக் காட்சித் திரையில் அண்டை வீட்டை விட அண்மையில் காட்டுகிறது. இங்கு நாம் காட்சிகளை வெறும் எழுத்தில் மட்டும் காணாமல், நேரில் அவற்றின் முழு வண்ணத்துடனும் ஒலியுடனும் காண்கிறோம். மார்ஷல் மக்லிஹான் குறிப்பிடும் ''அச்சுத் துறை அறிஞர்''களுக்குப் பதிலாக ''தொலைக்காட்சி சாதனம்'' பயன்படுகிறது. இப்போது நாம் அனைத்துலகங்களையும் அவற்றின் பலவகை எழிலுடன் காண்கிறோம். இதன் பயனாக நாம் அனைவரும் உலகெனும் ஒரே நாட்டுக் கோளின் குடிகள் என்ற உணர்வைப் பெறுகின்றோம்.

ஆகவேதான் மூன்றாம் இயல்பாகிய பன்னாட்டு ஒற்றுமை இன்று உயர்விடம் பெறுகின்றது. மனிதன் தான் ஒரு கோளில் வாழ்பவன் என்பதை அறிந்தும், ஓர் அனைத்துலக நோக்கை, அல்லது ஜேக்விஸ் பெர்க்கும் பிற சமூகவியல் அறிஞர்களும் கூறுவது

வருங்கால மாணவன் செய்திகளையும் விவரங்களையும்
பதிலாக கணக்கிடும் பொறியில் சேர்த்து வைப்பான்.
தாய்ந்து, ஒப்பிட்டு, தக்க முடிவுகளுக்கு வர இயலும்.



Original lithograph by the French artist, Roland Topor, © Topor - Olivetti

ம் மனத்தில் திணித்து வைப்பதற்குப்
ன். ஆகவே அவன் அவற்றைப் பகுத்

சரியும் சமூகத்தின் நிழலுருவம்

போல் ''உலக உணர்வை''ப் பெற றிருக்கிறான். நாடுகளுக்கிடையே நிகழும் பிணக்குகள் இப்போது எவ்வளவு அற்பமாகத் தோன்றுகின்றன. நாட்டு எல்லைத் தகராறுகள் எவ்வளவு பயனற்றவையாகவும் தீங்கு விளைப்பனவாகவும் தெரிகின்றன. மனித இனத்திற்கு சொந்தமான செல்வ வளங்களை, விளையாட்டுப் பொருள்களுக்காகப் போரிடும் குழந்தைகளைப்போல் பிறருக்கு வழங்காமல் பிடுங்கும் மனப்பான்மை தற்காலத்திற்கு ஒவ்வாததாக இருக்கின்றதல்லவா? இப் பூசல்களுக்கிடையேயும் உலக ஒற்றுமையை நாடும் உணர்ச்சி வெள்ளம் உலகெங்கும் பெருக்கெடுத்து ஓடுகிறது.

தற்காலத் தொழில் நுட்பம் விண்வெளியை வென்று வருவதுபோல், தொழில் துறையின் வளர்ச்சியும் இயற்கையைப் பின்வாங்கச் செய்கிறது. தற்காலத் தொழில் நுட்பம் பற்பல சமூகங்களை இணைத்துப் பிணைத்தபோதிலும், தனி மனிதனின் தனித் தன்மையை அழித்து விடுகிறது. இதற்கு நேர்மாறாக இளைஞர்கள் தமது தனித் தன்மையைத் தெளிவாக வலியுறுத்தி தமது எதிர்கால வாழ்வை வகுக்கும் உரிமை கொண்டாடுகின்றனர்.

தன்னையே ஆளும் தகைமை பெற்ற சமூகம் தனது அதிகாரத்தைப் பொதுவாகப் பயன்படுத்தி ஒவ்வொருவரின் எதிர்கால வாழ்வையும் கட்டுப்படுத்துவதை தாம் ஏற்றுக் கொள்ள முடியாதென்று கொலம்பிய பல்கலைக் கழக மாணவர் சிலர் என்னிடம் அண்மையில் கூறினர்.

ஆகவே நாம் கல்வி முறைக்கெதிராகத் தோன்றியுள்ள எதிர்ப்பின் காரணங்களை நன்கு கண்டுணரலாம். சில சீர்திருத்தங்களும் புதிய முறைகளும் புகுத்தப்பட்டிருப்பது உண்மைதான் ஆயினும் இவை காலத்திற்கு ஒவ்வாத பழைய முறைகளாகத் தெரிகின்றன. கல்வி, மாறி வரும் நமது உலகின் போக்கிற்கேற்ப மாறத் தவறிவிட்டது. மக்லிஹான் கூறுவதுபோல், ''அது பின்புறக் கண்ணாடியில் கடந்த காலத்தைப் பார்த்துக் கொண்டே எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறது.'

கல்வியின் நோக்கத்தை வரையறுப்பதைவிட கல்வியைப் பயனுறுதியுள்ளதாக்க புதிய முறைகளைக் காண்பதே இன்றைய தேவையாகும் நோக்கங்களும் முறைகளும் எவ்வளவு நெருங்கிய தொடர்புடையனவென்றால், முறைகள் போதுமானவையாக இல்லையெனில் நோக்கங்கள் நிறைவேறா. உலகப் பொது நோக்கை வளர்க்க முழு மனிதனை உருவாக்கும் கல்வி தேவை தனி மனிதன் உலகிலுள்ள பிற மனிதரின் வாழ்வில் அக்கறை கொள்ளும்போது, தனது ஆளுமையையோ தனித்தன்மையையோ இழப்பதில்லை.

உலக முழுவதையும் தழுவும் உளப்பாங்கை வளர்க்கும் கல்வி வாழ்க்கை முழுவதையும் சார்ந்ததாக இருக்க வேண்டும். கல்வி வாழ்க்கையின் தொடக்க காலத்தில் மட்டுமல்லாமல் இறுதிவரை நீடித்திருக்க வேண்டும். ''வாழ்நாள் முழுவதும் நீடித்திருக்கும் கல்வி''யில் மரபான கல்வி முறைகள் குறைந்து, உள்ளத் திறன் இருக்கும் வரை திரும்பத் திரும்ப கற்கும் பயிற்சி வளரும்.

இப்புதிய சூழ்நிலையில் உண்மையான கல்வியைக் கற்பித்தலும் அறிவை சேகரித்தலும் வெவ்வேறு வகையான முக்கியத்துவம் பெறும். பாடம் சார்ந்த அறிவு பள்ளியறையில் வழங்கப்பெறும். உண்மையான கல்வியறிவு பள்ளியறைக்குள் அடைபட்டுக் கிடக்காது. வாழ்நாள் முழுவதும் கல்வி கற்கும் காலமெனக் கருதும் போது இளம் மாணவனும் வயதுவந்த தொழிலாளியும் தனித்தனியே பிரிந்து நிற்க முடியாது.

இவ்வாறு கல்வி பற்றிய விரிவான கருத்து உலவினால் உலகச் சிந்தனையும் உலகப் பொது நோக்கும் தோன்றி நிலைபெறுதல் எளிது. அப்போது பள்ளிக்கூட முறையும் அதன் கட்டிடங்களும் பிற வசதிகளும், ''பள்ளி எல்லைக்குப் புறம்பான கல்வி'' அல்லது 'புறக் கல்வி' கற்கும் வாழ்நாளில் சில ''தங்குமிடங்களாகவே'' கருதப்படும். இது தவறன்று. இன்று பண்பாட்டுச் சுற்றுலா எனப் படுவது ஆண்டுதோறும் பல நாடுகளுக்குச் சென்று, ஒருவர் ஒருவரைச் சந்தித்து ஆய்வுகள் நடத்தும் பல்கலைக் கழக அறிஞர் குழாத்தின் சுற்றுப் பயணங்கள் ஒருவகை வடிவமேயாகும். பல நாடுகளுக்குச் செல்லும்போது அவர்கள் உலகைப் பற்றி பாட நூலிலிருந்தோ, ஆசிரியரின் குறுகிய நோக்கின் வாயிலாகவோ அறியாமல் நேரில்கண்டு அறிந்து கொள்கின்றனர்.

ஆனால் கல்வியில் ஒரு புதிய முறையைப் புகுத்துவதால் மட்டும் உலக முழுவதையும் நாம் அறிந்து கொள்ள முடியுமா? முடியாது. உலக முழுவதையும் நம் ஒவ்வொருவரின் உள்ளத்தில் புகுத்தவேண்டும். அதற்கு நாம் தற்கால விஞ்ஞானத்தை அதன் துணைக்கோள்களுடனும் மின்ம தொழில் நுணுக்கங்களுடனும் பயன்படுத்த வேண்டும். பள்ளி அறைகளில் (பல பள்ளிகளில் ஆசிரியருக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பெறும்) தொலைக்காட்சிகளில் அறிவியல் ஆய்வுகளையும்பல்வேறுபண்பாடுகளைப்பற்றிய ஒப்பீட்டு ஆய்வுகளின் எடுத்துக் காட்டுகளையும் தெளிவாகக் காட்டவேண்டும்.

விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி வெவ்வேறான விவரங்களை ஒன்றாக இணைத்துக் காட்டுவதால், இன்று பெருவாரியான விவரங்களையும் செய்திகளையும் பாடத் திட்டத்தில் திணித்து வரும நிலையை மாற்றிவிட முடியும். இவ்வாறு செய்யும்போது விவரங்களைக் குறுக்கித் தனித்துச் சிதைப்பதற்குப் பதிலாக அவற்றை ஒன்றுதிரட்டி இணைக்கிறோம்.

இதில் கணக்கியல் பெரிதும் பயன்படுத்தப்பெறும்; சிறப்பாக நுட்பத் தெளிவு தேவையான துறைகளில் பயன்படுத்தப்பெறும். அது தேவையில்லாத துறைகளில் நேரில் காட்டப்பெறும் காட்சிகள் நல்ல பயன்தரும். உண்மையில் தொலைக்காட்சி கணக்கியலின் அருவமான தன்மையைக் குறைத்து மனிதனுக்குப் புலனாகும் தன்மையை அதற்கு அளிப்பதுடன் அதை வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியதாகவும் செய்கிறது.

ஆகவே கல்வி முறையில் பெரும் மாறுதல் ஏற்பட்டு வருவதைக் காண்கிறோம். வருங்காலப் பள்ளிகளில் இனிமேல் பாடங்களைப் பயில்வதிலும் வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுப்பதிலும் ஒவ்வொருவரும் தாமே முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். வருங்கால மாணவன் செய்திகளையும் விவரங்களையும் மூளையில் திணித்து வைப்பதற்குப் பதிலாக கணக்கிடும் பொறியில் சேர்த்து வைத்து, அவற்றைப் பகுத்தாய்ந்து, ஒப்பிட்டு, தக்க முடிவுகளுக்கு வரப் போதிய காலமும் உரிமையும் பெறுவான்.

வருங்காலத்தில் ஒவ்வொரு மாணவனும் தனது வேலையைத் தானே ஆய்ந்து பார்க்கும் திட்டத்துடன் கல்வி கற்பிக்கப்படுமாதலால், மாணவர்கள் பல்வேறு திட்டங்களுள் தாம் விரும்பியவற்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வர்; அல்லது புது நோக்குடைய ஆசிரியர் பரிந்துரைக்கும் துறைகளுள், மாணவர்கள் தாமே முன்னால் ஆய்ந்து சிறந்ததெனத் தெரிந்து கொண்ட பாடங்களின் அளவையும் வகையையும் தேர்ந்தெடுத்துக் கொள்வர்.

வாழ்க்கைத் தொழிலைத் தெரிந்து கொள்வதில் மாணவர்கள் தமது வாய்ப்புகளைத் தெளிவாக அறிந்து கொள்கின்றனர். எதிர்காலத் தேவைகளுக்கேற்ப அமையும் வருங்கால வாய்ப்புகளைக் காட்டும் படங்களும், குறிப்பிட்ட வாழ்க்கைத் தொழிலின் நன்மை தீமைகளையும் வெற்றி வாய்ப்புகளையும் காட்டும் திரைப்படங்களும்இதற்குப் பயன்படுகின்றன.

வருங்கால இளைஞர்கள் தமது சமுதாய முன்னேற்றத்தையும் அதன் பொருளாதார, அரசியல் போக்குகளையும் நன்கறிவதுமல்லாமல், உலக சமூகத்தைப் பாதிக்கும் ஆய்வுகளிலும் முடிவுகளிலும் பங்கு பெற்று தமது தகுதியை எண்பிக்கும் வாய்ப்பையும் பெறுவர்.

அப்போது ஆசிரியரும் மாணவரும் இணைந்து செயலாற்றும் நிலை ஏற்படும் என்று சொல்லத் தேவையில்லை. ஆசிரியர் பேராசிரியராக இல்லாமல் வழிகாட்டியாகவும், பண்பாட்டுக் காவலராக இராமல் அதைப் பரப்பும் கருவியாகவும் விளங்குவார். ஆசிரியர் பொது ஆய்வுக் குழுவின் உறுப்பினர் போல் தமது மாணவருடன் சேர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபடுவார்.

மேலே கூறியவற்றுள் சில விஞ்ஞானப் புனைகதைபோல் தோன்றலாம். தொழில் நுணுக்கம் வளர்ச்சி

(தொடர்ச்சி 32-ஆம் பக்கம் பார்க்க)

Photo © Unesco/MTI, Ady Endre

தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகள் பலவற்றில் நூற்றுக்கு ஒருவர் ஆசிரியர். மேலே, ஸெகெட் (ஹங்கேரி) பல்கலைக் கழகத்தின் அறிவியல் கூடம்.

தேவைக்கு மிகுதியான ஆசிரியர்களா?

ஜான் செஸ்வாஸ்

பல துறைகள் தமது உற்பத்தித் திறனை மேலும் மேலும் வளர்க்க விழையும் இந்நாளில், கல்வியானது ''உழைப்பவர் பலரைப் பயன்படுத்தும் தன்மையும்'' தற்கால முறைகளுக் களுக்கேற்ப எளிதில் மாறாத, பிற்போக்கான தன்மையுமுடையது எனப் பொருளாதார வல்லுநர் கருதுகின்றனர். உழைப்பவர் பலரை, குறிப்பாக கல்வியறிவும், பயிற்சியும் பெற்ற பலரைக் கல்வி பயன்படுத்துகிறதென்பது உண்மையா?

செய்தி விவரங்கள் கிடைக்கக்கூடிய சில நாடுகளில் கிடைத்த குறிப்புகளிலிருந்து 1965இல், 23ஆம் பக்க அட்டவணை காட்டுவதுபோல், மக்கள் தொகைக்கும், ஆசிரியர்களுக்கும், எல்லா தொழிலாளருக்கும் ஆசிரியருக்கும் உள்ள விகிதத்தைக் கணக்கிடலாம்.

எடுத்துக் காட்டாக கீன்யாவில் 278 பேருக்கு ஒருவர் அல்லது 18 தொழிலாளருக்கு ஒருவர் ஆசிரியராக இருக்கின்றார். புள்ளி விவரங்கள் எப்போதும் முற்றிலும் சரியாக இருப்பதில்லை. ''தொழிலாளர்'' என்ற சொல்லை விளக்குவதில் கருத்து வேறுபாடு ஏற்படலாம். ஆனால் அட்டவணையிலுள்ள எண்கள் தொகையை ஓரளவுதான் காட்டுமெனினும், அவை நமது சிந்தனையைத் தூண்டுகின்றன.

பொருளாதார வளர்ச்சியுறும் நாடுகளில் கல்வி முயற்சி இன்றும் பெருகவில்லை. அங்கு வாழும் மக்களுள் ஆசிரியர் சிறு தொகையினராகவே இருக்கின்றனர். ஆனால் சில நாடுகளில் தொழிலாளரும் சிறு பகுதியினராகவே இருக்கின்றனர். இதை அட்டவணையில் (பக்கம் 23) முதல் மூன்று நாடுகளில் காணலாம். அங்கு ஆசிரியர்கள் தொழிலாளரின் தொகையில் குறிப்பிடத்தக்க விகிதத்தில் இருக்கின்றனர்.

கட்டாய ஆரம்பக் கல்வியும், வளர்ச்சியடைந்த நடுநிலை, உயர் நிலைக் கல்வியும், வளர்ந்து அதே நேரத்தில் மிகுதியான தொழிலாளரும் உள்ள பொருளாதார வளர்ச்சியுற்ற நாடுகளின் நிலை குறிப்பிடத்தக்கது.

இரு ''விண்வெளி'' நாடுகளாகிய அமெரிக்காவும், ரஷ்யாவும் ஏறக்குறைய ஒன்றுபோல் இருப்பதையும், கனடா, அல்பேனியா, பிரான்ஸ், நார்வே, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகியவை அவை போலிருப்பதை

கல்வித் திட்டமிட்டு நிதி வழங்கும் யுனெஸ்கோவின் துறையைச் சேர்ந்த ஜான் செஸ்வாஸ் முன்னாள் உகண்டாவின் கல்வி அமைச்சில் கல்வித் திட்டத் தலைவராகவும், பாரிசில் கல்வித்திட்ட பன்னாட்டு நிலைய ஆசிரியராகவும் இருந்தார். கல்வித் திட்டம் பற்றியும், குறிப்பாக வளர்ச்சியுறும் நாடுகளின் திட்டம் பற்றியும் பல நூல்கள் எழுதியுள்ளார்.

Photos USIS

கற்பது ஒரு விளையாட்டு

முதல் வகுப்பு அறையில் குழந்தைகள் தம்மை மறந்து வாசிக்கக் கற்றுக் கொள்கின்றனர். (இடப்புறம்) ஆசிரியையின் ஒலிப்பதிவுக் குரலைக் காதில் கேட்டுக் கொண்டே கதைப் படங்களைத் திரையில் காண்கின்றனர். அல்லது சொற்களைப் புத்தகத்தில் பார்க்கின்றனர். முதல் வகுப்பு மாணவர்கள் ஒலிப்பட மின்னியக்கக் கருவிகளின் துணையினால் எட்டு மாதங்களில் மூன்றாவது வகுப்பினர் பெற்றுள்ள வாசிக்கும் திறமையைப் பெறுகின்றனர். வலப்புறம்: இச்சிறுமி கற்பிக்கும் பொறியின் கேள்விக்கு இப்போது தான் விடையளித்துள்ளாள். அவளது விடை சரியென்றால், அடுத்த கேள்வி இடப்புற திரையில் தோன்றும். தனது கேள்வி சரியா, பொறி அடுத்த கேள்வியைக் கேட்குமா என அறிய கண்ணை மூடிக் காத்திருக்கிறாள்.

கடை நிலை, ஏறக்குறைய கடை நிலை

யும் அட்டவணையில், இவ்வுயர் தொகுதிக்குப் பின்னால் இத்தாலியும் அயர்லாந்தும் உள்ளன. அவற்றின் கல்வி முறை வளர்ச்சியுறாமலிருப்பது இதற்கு காரணமாக இருக்கலாம். இச்சிறு தொகுதிக்குள், மக்கள் தொகையையும் தொழிலாளரின் தொகையையும் பொறுத்த வரையில் பிரிட்டனில் ஆசிரியரின் தொகை மிகக் குறைந்திருப்பது, ஓரளவு வியப்பைத் தருகின்றது.

இந்நாடுகளில் நூற்றுக்கு ஒருவரும் 35 தொழிலாளருள் ஒருவரும் ஆசிரியர் எனப் பொதுவாகக் கூறலாம். ஆனால் இங்கு காணப்படும் பலவகைத் தொழில்களைப் பார்க்கும் போது இது மிகக் குறைந்த தொகையெனத் தெரிகின்றது.

இளைஞர் பலர் ஆசிரியராவதுடன், அத்துறையில் நீண்ட காலம் பணி புரியவும் செய்கின்றனர். மேலும், கற்பிக்கும் தரமும் திறமையும் வளர வேண்டும் என்பதற்காக ஆசிரியர்கள் சிறிய வகுப்புகளையே விரும்புகின்றனர். இதன் விளைவாக பல ஆசிரியர் தேவைப்படுகின்றனர். இவற்றின் காரணமாக மக்கள் தொகையிலும் தொழிலாளரின் தொகையிலும் பெரும் விகிதம் ஆசிரியர் பணிக்குத் தேவைப்படுகின்றது.

உலக முழுவதும், குறிப்பாக 2ஆம் உலகப் போருக்குப் பிறகு கல்விச் செலவு நாட்டு வருமானத்தைவிட விரைவாக வளர்ந்து வருகின்றது. சில நாடுகள் தமது மொத்த ஆக்கத்தில் 6 முதல் 7 சதவிகிதம் கல்விக்கென செலவிடுகின்றன.

வரம்பை அடைந்து விட்டோம் எனப் பலர் கருதுகின்றனர். கல்வி என்பது நாட்டு வருமானத்தில் பங்கு பெறும் பல முயற்சிகளில் ஒன்றாகையால் இவ்வரம்பு என்றாவது ஏற்படத்தான் வேண்டும். ஆனால் மேலே குறிப்பிட்ட போக்கானது ஏற்கெனவே வளர்ந்து வரும் கல்விச் செலவை இன்னும் அதிகரிக்கும்.

மிகுதியான குழந்தைகளுக்கு நீண்ட கால கல்வி அளிக்க வேண்டுமானால் (எவ்வளவு காலம் கல்வி நீடிக்க வேண்டுமென்பது கேள்விக்குரியது), இப்போதுள்ள கல்விமுறையைப் பொதுவாகத் திரும்ப ஆய்ந்து பார்க்க வேண்டும். ''கல்வி'' என்பது மனிதனின் உரிமை எனும் கருத்தே ஐயத்துக்குரியது எனத் தருக்க முறையாகக் கூறலாம்.

ஆனால் அதை ஆய்வது இக் கட்டுரையின் நோக்கமன்று. கல்வி முறைகளுக்கும் பயன்படுத்தும் ஆசிரியரின் அலுவலுக்குமுள்ள தொடர்பை ஆய்வதே இதன் நோக்கம்.

இன்றைய முறைகள் தொடர்ந்து பயன்படுத்தப் பெறுமானால் ஒரு முக்கிய விளைவு ஏற்படும் என எதிர்பார்க்கலாம். வருங்காலத்தில் தொழிலாளருக்கும் ஆசிரியருக்குமுள்ள விகிதம் இன்றிருப்பது போலவோ மிகுதியாகவோ இருக்குமானால், அத்தனை நடுநிலை, உயர்நிலை ஆசிரியருக்கும் பிறருக்கு வழங்குவது போன்று கல்விக்கும் பயிற்சிக்குமேற்ப ஊதியமளிக்க இயலாது.

இதன் விளைவாகப் பல நாடுகளில், படித்தவர்களுள் ஒரு சிலரே ஆசிரியர் பணியில் ஈடுபட முன்வருவர். இது நமது குழந்தைகளின் நலத்திற்கேற்றதா?

வகுப்பில் மாணவரின் எண்ணிக்கையைக் குறைப்பதைவிட, கற்பிக்கும் திறமையையும் தரத்தையும் தாழ்த்தாத வகையில் ஆசிரியர்—மாணவர் விகிதத்தை ஏன் உயர்த்தக் கூடாது?. இதில்தான் நாம் தொலைக்காட்சி, வானொலி, அண்மையில் வந்துள்ள கணக்கிடும் பொறி போன்ற புதிய கல்விச் சாதனங்களைப் பயன்படுத்துவது பற்றி சிந்திக்க வேண்டும்.

இவை ஒவ்வொன்றைப் பற்றியோ, எல்லாவற்றையும் சேர்த்தோ, இவற்றையும் பழைய முறைகளையும்இணைப்பதைப்பற்றியோ இங்கு ஆய இடமில்லை. ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, ஆசிரியரது அலுவல் பயன்தரத்தக்க சாதனங்களை அமைத்து, அவரது நிலையையும் உயர்த்துவதற்காக இப்போதுள்ள கல்வி முறையை ஆய்ந்து அதை மாற்ற வேண்டுமெனக் குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சில நாடுகள் இதைப் பல துறைகளில் செய்துள்ளன. 20 ஆண்டுகளுக்கு முன் பொருளாதார வல்லுநர் தடுத்த போதிலும் அவை இதைப் பயிர்த்தொழில் தவிர் பிற தொழில் துறைகளிலும் செய்தன.

எம்முறைகளைப் பயன்படுத்திய போதிலும் அவற்றைப் பொருளா



தாரக் கோணத்திலிருந்து ஆய வேண்டும். ஆசிரியர்களுக்குச் செலவிடும் தொகையைக் குறைக்கும் போது, அதே தொகையை அல்லது அதிக தொகையைப் பிற சாதனங்களுக்குச் செலவிட்டால், அதனால் பயனில்லை, சிலவேளை, அதே எண்ணிக்கையுள்ள ஆசிரியர்கள் தேவைப் படும்போது, பிற சாதனங்களை அமைப்பதனால் இன்னும் அதிக செலவாகின்றது. ஆசிரியர்களுக்குச் செலவிடும் தொகையைக் குறைப்பதனால் விளையும் பயன், மின் சாதனங்களை இயக்கும் பொறியாளர் போன்றவர்களை வேலைக்கமர்த்துவதால் குறைந்துவிடும்.

இவ்வாறாக விலையுயர்ந்த சாதனங்களை அமைத்து, பேணி, பழுதுபார்க்கும் செலவு இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் அவற்றை மாணவர் சேதப் படுத்தாதவாறும் காக்க வேண்டும். மாணவரின் முதிர்ச்சி, நோக்கம், பொறுப்பு பற்றிய கேள்வியும் இங்கு எழுகின்றது.

9வயதுக் குழந்தைகளுள்ள வகுப்பில் விலையுயர்ந்த கற்பிக்கும் இயந்திரம் ஒன்றை விட்டுச் சென்றால், அதனால் தொல்லை ஏற்படுவதுடன் கல்வியும் விரைவில் முடிந்துவிடும். ஆனால் அதே இடத்தில் பல்கலைக் கழகம் நுழையவிருக்கும் உயர்நிலைப் பள்ளி மாணவர்களிருந்தால், நிலை வேறாக இருக்கும்.

இவர்கள் இயந்திரத்தைச் சேதப் படுத்தாமலிருக்கலாம். ஆகவே ஆசிரியருக்கும் மாணவருக்கு மிடையே தொடர்பைக் குறைக்க முடியும். வழக்கமான பயிற்சி முறைகளுக்குப் பதிலாக புதிய கருவிகளைப் பயன் படுத்தும்போது இந்த முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

சிறுவர்களைப் பொறுத்த வரையில் ஆசிரியர் அவர்களுடன் இருக்க வேண்டும். மாணவர்கள் வகுப்புக்கு வரக் ‘கட்டாயப்படுத்தப்படும்’ கீழ் வகுப்புகளில் ஆசிரியரின் எண்ணிக்கையைக் குறைப்பது அரிது. விலையுயர்ந்த கருவிகளைக் காக்க வேண்டுமென உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்ளும் மாணவர்கள் பயன் கருதி விரும்பி வரும் உயர் வகுப்புகளில் ஆசிரியரின் எண்ணிக்கையைக் குறைக்க இயலும்.

(தொடர்ச்சி 32ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர், மக்கள் தொகை, தொழிலாளர் விகிதம் (1965)

நாடு	மக்கள் தொகை / ஆசிரியர்		தொழிலாளர் / ஆசிரியர்	
	உயர்கல்வி ஆசிரியரைத் தவிர்த்து	உயர்தர ஆசிரியர் உட்பட	உயர்கல்வி ஆசிரியரைத் தவிர்த்து	உயர்கல்வி ஆசிரியர் உட்பட
கென்யா ...	278:1	...	18:1	...
அராபிய ஐக்கிய குடியரசு ...	222:1	206:1	15:1	14:1
பிரிட்டிஸ் ஹொண்டுராஸ் ...	86:1	85:1	11:1	11:1
கனடா ...	91:1	80:1	32:1	28:1
யு. எஸ். ஏ. ...	99:1	81:1	36:1	30:1
ஜப்பான் ...	111:1	99:1	54:1	48:1
அல்பேனியா ...	115:1	111:1	36:1	35:1
செக்கோஸ்லாவாக்கியா ...	94:1	84:1	43:1	38:1
பிரான்ஸ் ...	117:1	112:1	34:1	32:1
ஜெர்மனி (கூட்டாட்சி குடியரசு) ...	184:1	...	83:1	...
ஹங்கேரி ...	117:1	107:1	5 5:1	50:1
அயர்லாந்து ...	107:1	102:1	39:1	37:1
இத்தாலி ...	105	100:1	39:1	37:1
நெதர்லாந்து ...	135:1	...	48:1	...
நார்வே ...	84:1	80:1	33:1	32:1
பிரிட்டன் ...				
ஆஸ்திரேலியா ...	113:1	107:1	36:1	34:1
நியூஸிலாந்து ...	101:1	92:1	38:1	34:1
ரஷ்யா ...	101:1	93:1	34:1	31:1

இவ்வட்டவணை 19 நாடுகளில் மக்கள் தொகைக்கும் ஆசிரியருக்கும், தொழிலாளருக்கும் ஆசிரியருக்குமுள்ள விகிதத்தைக் காட்டுகிறது. இவ்விவரங்கள் யுனெஸ்கோ புள்ளி விவர வெளியீடு (1967), தொழிலாளர் புள்ளி விவர வெளியீடு (1968, ILO, ஜெனீவா), மக்கள் தொகை விவர வெளியீடு (1967, ஐ. நா.) ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பெற்றவை. பிரெஞ்சு தொழிலாளர் பற்றிய புள்ளி விவரங்கள் OECD தொழிலாளர் புள்ளி விவர ஏட்டில் (1954—1964) உள்ளவை.

சோவியத் பள்ளிகளின் புதிய நோக்கு

இயோசிஃப் நெக்காம்கின்



Photo © A. Garanin "Soviet Union" magazine

உலகம் விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றமெனும் கொடியேந்தி 1970ஆம் ஆண்டைத் தொடங்கும் இந்நாளில், இப்புதிய அறிவைப் பயன்படுத்துவது பொருளாதார் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகி விட்டது.

பொதுக் கல்வியின் குறிக்கோள்களைப் பற்றிய நமது எண்ணங்களை மாற்றக் கூடிய பெரும் மாற்றங்கள் இப்போது நிகழ்ந்துள்ளன. எதைக் கற்பிக்கவேண்டும்? எவ்வாறு கற்பிக்க வேண்டும்? கல்வி எதை உணர்த்த வேண்டும்? நமது பள்ளிக்கூடங்கள் எவ்வாறு இருக்கவேண்டும்? இக் கேள்விகளை எல்லா நாடுகளிலும் கல்வி கற்பிப்போர் கேட்டு வருகின்றனர்.

சமூகவியல் வல்லுநர், பொருளாதார அறிஞர், விஞ்ஞானிகள், அரசியல் வல்லுநர் அனைவரும் வருங்கால குடிகளின் தேவைகளை எண்ணி இப்பிரச்னைகளை ஆய்ந்து வருகின்றனர். இன்று குழந்தையாக அல்லது பள்ளியில் நுழையும் பருவத்திலுள்ள இக்குடிகள் 21ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் வாழ்க்கையின் உச்ச நிலையிலிருப்பர்.

ஆனுல் அப்போது அவர்கள் வாழும் உலகை நாம் இன்று எண்ணிப்பார்க்க முடியாது. எனினும் 1970லுள்ள குழந்தையை இன்னும் '30 ஆண்டுகளில் பொறுப்புள்ள குடியாக மாற்ற எத்தகைய கல்வி தேவை என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

ரஷ்யாவில் கல்வி கற்பிப்போரும், தொடக்கத்திலிருந்தே கல்விக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்துவந்த அரசும் இப்பிரச்னையை ஆய்ந்தனர். உள்நாட்டுப் போரும் அந்நிய படையெடுப்பும் புதிதாக நிறுவப்பட்ட அரசை அழிக்க முயன்றும், பொருளாதாரம் சீர்குலைந்தும் பஞ்சம் பரவியும் வந்த அந்நாளிலே லெனின் ''பொது மக்களுக்கு கல்வி வழங்குதல் நமது போராட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாகும்'' என்று முதல் ரஷ்ய கல்வி மாநாட்டில் கூறினர்.

முன்போலவே இன்றும் ரஷ்யா கல்விக்கு உயரிடம் வழங்குகிறது.

ரஷ்யாவில் கல்வி என்றும் முன்னேறி வருகிறதென நாம் சொல்லத் தேவையில்லை. பிற நாடுகளைப் போலவே ரஷ்யாவும் காலத்திற்கேற்ப இடையருது பல மாற்றங்களைச் செய்வதற்காக சிக்கலான பிரச்னைகள் பலவற்றைத் தீர்க்க வேண்டியிருந்தது.

முன்னுல் பாடங்களை அதிகரித்து பயிலும் காலத்தை நீடித்து இப்பிரச்னைகளைத் தீர்த்துவிட முடியும். இவ்வெளிய முறை இப்போது பயன்படுவதில்லை. இப்போது அடிப்படைக் கல்வி எனப்படும் கல்விக்குத் தேவையான அறிவு எவ்வளவு பெருகி விட்டதென்றுல், இன்று விரிவடைந்துள்ள பள்ளித் திட்டங்களில் அதைத் திணிக்க முடியாது.

இத்திட்டங்களின்படி செய்திகள், ஆண்டுகள், தேற்றங்கள், பெயர்கள், செயலாய்வுகள், எண்கள், விதிகள் ஆகியவற்றை எல்லாம் குழந்தைகள் உள்ளத்தில் நிறைத்து வைக்கின்றன. அப்படியிருப்பினும் (சிலவேளை அப்படியிருப்பதால்) பள்ளிகள் குழந்தைகளுக்கு 20ஆம் நூற்றுண்டின் கருத்துகளையும் தேவைகளையும் உணர்த்துவதில்லை. எல்லாத் துறைகளிலும் தொன்மைக் கல்வியின் அடிப்படைகளையே மிகுதியாகக் கற்பதால் குழந்தைகள் ஐன்ஸ்டீன், குர்சாடாவ், வீனர் போன்றவர்களைவிட நியூட்டன், லொமானுசாவ், லாவாய்சியர் போன்றவர்களையே நன்கறிவர்.

கல்வி முறையை எவ்வாறு சீர்திருத்தி விஞ்ஞான, தொழில் நுட்ப, பண்பாட்டு வளர்ச்சிக்கேற்ப மாற்றியமைப்பது என்ற பிரச்னையை ரஷ்யாவும் தொழில் வளர்ச்சி பெற்ற பிற நாடுகளும் தீர்க்க வேண்டியிருந்தது. அப்பிரச்னையைப் பள்ளிகளால் தீர்க்க முடியவில்லை. ஏனெனில் அதற்கு ஆசிரியர், உளவியல் வல்லுநர், மருத்துவர், கல்வித்துறையின் ஒவ்வொரு பிரிவிலும் தேர்ச்சி பெற்றேர், பெற்றேர், பொது மக்கள், விஞ்ஞான, அரசாங்க நிறுவனங்கள் அனைவரின் முயற்சியும் தேவைப்பட்டது.

இதற்கென சில ஆண்டுகளுக்கு முன்னுல் ஆசிரியரியல் கழகம், ரஷ்ய அறிவியல் கழகம் ஆகியவற்றின் கூட்டுக் குழு ஒன்று அமைக்கப் பெற்றது. தினத்தாள்களும் தனி வெளியீடுகளும் இப்பிரச்னையைஅலசி ஆய்ந்தன. பள்ளிகளில் ஆராய்ச்சித் திட்டங்களும் செயலாய்வுத் திட்டங்களும் தொடங்கின. மருத்துவம், உளவியல், ஆசிரியரியல், கற்பிக்கும் கலை, ஆராய்ச்சி முறை ஆகியவை பற்றி வல்லுநர்களின் கருத்துக்கள் திரட்டப்பெற்றன.

''கற்பிக்கும் முறை'', ''கற்பிக்கும் பாடங்களும் கல்வியின் நோக்கமும்'' ஆகிய இவ்விரு பிரச்னைகள் பற்றியே ஆய்வுகளும் வாதங்களும் நிகழ்ந்தன. அதாவது ஒவ்வொரு குழந்தையின் ஆளுமையையும் முழுவதும் வளர்த்து, அதன் ஆக்கத் திறனை வெளிப்படுத்தி ஊக்குவிக்கும் வழிகளைப் பற்றி ஆய்வுகள் நிகழ்ந்தன.

இத்தகைய ஆய்வுகள் எப்போதும் முடிவடையா. ஆயினும், தொடக்க திட்டங்களின் விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட சில திட்டங்கள் நூற்றுக்கணக்கான சோவியத் பள்ளிகளில் நடைபெறுவதிலிருந்தும், பல்லாயிரம் மாணவர்கள் அவற்றின் பயனைப் பெற்று வருவதிலிருந்தும், இதுவரை நடைபெற்ற வேலையின்

சோவியத் எழுத்தாளரும் இதழாசிரியருமான இயோசிஃப் நெக்காம்கின் கல்வி, அறிவியல் தொழில் நுணுக்கம் சார்ந்த பிரச்னைகளைப் பற்றி எளிய முறையில் எழுதும் திறமை பெற்றவர். இவர் மாஸ்கோவில் வெளியாகும் "சோவியத் யூனியன்" எனும் மாத இதழின் அறிவியல் பகுதி ஆசிரியர்.

பல சோவியத் உயர்நிலைப் பள்ளிகள் பொதுக் கல்வியுடன், மாணவர் பல்கலைக் கழகு நுழைவுத் தேர்வில் தேருவிடில் பயன்படக்கூடிய தொழில் கல்வியையும் வழங்குகின்றன. இங்கு மாஸ்கோ உயர்நிலைப் பள்ளி ஒன்றில் மாணவர் உலகின் புதிய தொழிலாகிய கணக்கிடும் பொறித் திட்டத்தில் பயிற்சி பெற பெரிய கணக்கிடும் பொறியைப் பயன்படுத்துகின்றனர்.

சிறப்பியல்புகளைச் சுருக்கமாகக் கூற முடியும்.

சோவியத் பள்ளிகளுக்குச் சென்று அங்குள்ள ஆசிரியர்களின் முயற்சிகளை நேரில், கண்டு ஆய்ந்த அமெரிக்க ஆசிரியர் டாக்டர் ஆர். ஹாலுக்கும் எனக்கும் சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த உரையாடல் இங்கு எனது நினைவுக்கு வருகின்றது. கல்வி சார்ந்த ஆய்வுகள் எல்லாம் பொதுவாகத் தூசி படிந்து கிடக்கும் என்றும், ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்துவதில்லை என்றும், கல்வித் திட்டங்களில் அறிவியல் ஆராய்ச்சிகள் பயனளிப்பதில்லை என்றும் புகழ்மிகு அமெரிக்க ஆசிரியரும் உளவியல் வல்லுநருமான டாக்டர் எட்வார்டு எல். தார்ன்டைக் 60 ஆண்டுகளுக்கு முன்னுல் கூறியதை டாக்டர் ஹால் நினைப்பூட்டினர்.

''கல்வித்துறை ஆய்வாளருக்கும் ஆசிரியருக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி நீங்கள்செய்து வருவது போன்ற முயற்சியை ரஷ்யாவில் கண்டேன். அவர்கள் கொள்கையளவில் ஆராயாமல் நடைமுறையளவில் ஒன்று சேர்ந்து ஆய்கின்றனர். இதனுல் ஆராய்ச்சியின் விளைவுகள் பள்ளியறைக்குப் பயன்படுகின்றன,'' என்று டாக்டர் ஹால் கூறினர்.

இதுதான் ரஷ்யாவில் இன்று நடைபெற்றுவருகின்றது. ''கல்வித் துறையைச் சேர்ந்த நால்வரும் பல விஞ்ஞானிகளும் சேர்ந்து பௌதிக பாடத் திட்டங்களை பாட நூல்களையும் இயற்றினர் என்பதைக் கேட்ட பத்திரிகையாளர் ஒருவர், எங்கள் விஞ்ஞான அலுவலை விட்டு விட்டு இதற்கென நாங்கள் செலவழித்த நேரத்தை எண்ணி இதை ஒரு பெரிய தியாகம் என வருணித்தார்'' என்று கல்வித் துறையாளரும் தலைசிறந்த சோவியத் பௌதிக அறிஞரான ஐசக் கிக்காய்ன் என்னிடம் ஒருமுறை கூறினர்.

''அப்பத்திரிகையாளர் எங்களை அவ்வளவு புகழத் தேவையில்லை. எங்களது நோக்கம் தியாக ஆர்வமன்று, தன்னலமே என நீங்கள் சொல்லலாம். திறமையுள்ள விஞ்ஞானிகளை உருவாக்குவதே ஒவ்வொரு விஞ்ஞானியின் ஆர்வம். பள்ளிகளை சீர்திருத்துவது இதை நிறைவேற்றும் வழிகளில் ஒன்ருகும்'' என்று கிக்காய்ன் கூறினர்

மேலே குறிப்பிட்டது போன்ற விஞ்ஞானக் குழுக்கள் பல ரஷ்யாவில் நோவாசிபிர்ஸ்க், மாஸ்கோ, கார்கால்காஸன், லெனின்கிராடு, கீவ் போன்ற

இடங்களில் பணியாற்றுகின்றன. புகழ் பெற்ற விஞ்ஞானிகள் உயர்நிலைப் பள்ளிகளில் விரிவுரை ஆற்றுவதோடல்லாமல், பாடமும் கற்பிக்கின்றனர். புதிய பள்ளித் திட்டங்களை வகுப்பதில் அவர்களுடைய அறிவும் அனுபவமும் பயன்படுத்தப்படுவதால் ரஷ்யாவில் கல்வித் தரம் உயர்ந்துள்ளது.

இப் புதிய திட்டங்கள் யாவை? அவை எவ்வாறு கல்வியை சீர்திருத்தின? முதன்முதலில், பல நூற்றாண்டுகளில் சேர்ந்து விட்ட பாடப் பொருள் குவிந்த கல்வி முறையை முற்றிலும் மாற்றியமைத்தனர். இம்முறை ''வெட்டிக் குறைக்கும்'' முறையன்று: பொது அறிவுத்திறனை வளர்க்கும் முறையாகும். இவ்வுலகை அறிவியல் முறைப்படி (தனிச் சான்றுகளிலிருந்து பொதுவான முடிவுகளுக்கு வரும் முறைப்படி) அறிதல் அதைப்பற்றி பள்ளியில் படிப்பதினின்று வேறுபட்டிருப்பதால், விஞ்ஞான உண்மைகளை முதலில் க்ண்டு பிடித்தவர்கள் பயன் படுத்திய முறைகளை அப்படியே கல்வி கற்பதில் பயன்படுத்தத் தேவையில்லை.

''மனப்பயிற்சி''யின்றி நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய குறிப்புகளும் விவரங்களும் மிகவும் குறைக்கப்பட்டன. இதனுல் பள்ளித் திட்டம் முதிர்ச்சி பெற்றது. குழந்தைகள் தாம் கற்பதை நினைவில் வைத்து திரும்பக் கூறுவதற்குப் பதிலாக, அறிவுக்குப் பொருத்தமான முடிவு காணவும், உண்மைக்கும் புறநிலைத் தோற்றத்திற்கு முள்ள தொடர்பை அறியவும் கற்றுக் கொள்கின்றனர்.

இவ் ''வளர்ச்சி''யில் பள்ளிகள் அதிக மணி நேரம் செலவழிக்கத் தேவையில்லை. சோவியத் பள்ளி நேரம் (ஆரம்ப, உயர்நிலை இரண்டும் சேர்ந்து) முன்போலவே 11,000 மணியாகவே இருக்கின்றது. இஃது ஒரு குழந்தை பொதுக் கல்வி பெறப் போதுமானதெனக் கல்வி அறிஞர்கள் கருதுகின்றனர்.

முறைகளும் திட்ட அமைப்புகளும் திருத்தப் பெற்றுள்ளன. முன்னுல் 7ஆம் படிவத்தில் 25 மணி நேரமும் 9ஆம் படிவத்தில் 30 மணி நேரமும் கற்றுக் கொடுக்கப் பெற்ற 19ஆம் நூற்றுண்டின் ரஷ்ய வரலாறு இப்போது எட்டாம் படிவத்தில் 50மணி நேரம் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. இதன் விளைவாக மாணவர்கள் குறைந்த காலத்தில் பாடத்தை ஆழ்ந்து படிக்கின்றனர்.

ஆரம்பக் கல்வியின் காலத்தை நான்கு ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக்கி குறைத்தது ஒரு பெரிய மாற்றமாகும். பல ஆண்டுகளாகத் தீட்டப் பெற்ற இப் புதிய திட்டம் குறிப்பிடத்தக்கது.

ஏழு வயது குழந்தை இயற்கணித சமன்பாடுகளைக் கரும்பலகையில் துணிந்து எழுதுவது அரிய காட்சியாக இருக்கலாம். ஆனுல் இதை இன்று சோவியத் ரஷ்யாவில் காணலாம். இது திறமைமிக்க குழந்தைகளின் அறிவாற்றலைக் காட்டவில்லை. ஏனெனில் இதைப் பல ஆய்வுப் பள்ளிகளில் தினமும் காணலாம்.

குழந்தைகளின் கற்கும் ஆற்றலைப் பற்றிய ஆய்வுகள் பல வியத்தகு உண்மைகளை விளக்கியுள்ளன. வயதான குழந்தைகள் தாம் கற்க முடியுமென்று முன்னுல் நாம் கருதிய, எளிதில் புலனுகாத கருத்துகளை தொடக்கப் பள்ளியில் முதலாண்டிலே கற்றுவிட முடியுமென இப்போது தெரிகின்றது. இயற்கணிதப் பாடங்களைக் கற்றறிதல் இதற்கோர் அரிய எடுத்துக் காட்டாகும்.


Photo © A. Garanin "Soviet Union" magazine

முன்னைவிட இப்போது முதல் படிவ மாணவர்களின் கற்கும் ஆற்றல் வளர்ந்துள்ளதென மாஸ்கோவிலும், களினின், டுலா ஆகிய பகுதிகளிலுமுள்ள பள்ளிகளில் நிகழ்ந்த ஆய்வுகள் காட்டுகின்றன.

இவ்வுண்மையை எண்பித்து அதைப் பலர் உணரச் செய்யவும், தொடக்க ஆய்வுகளின் பயனைத் தெரிந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் திட்டமாகச் செயல் படுத்தவும் நீண்ட காலமும் பெரும் முயற்சியும் தேவைப்பட்டன. நான்கு ஆண்டு ஆரம்பக் கல்வியை மூன்றாண்டாகக் குறைத்து அதனுல் எஞ்சும் 500 மணி நேரத்தில் அறிவியல் போன்றவற்றைக் கற்றுக் கொடுக்கவும், நடுநிலைக் கல்வியில் பாடங்களைக் குறைக்கவும் முடியுமென இந்த ஆய்வுகள் எண்பித்தன.

உலக முழுவதிலுமுள்ள பள்ளிகளின் கேடாகிய பாடப் பளுவைக் குறைக்கவே இப்புதிய திட்டங்கள் புகுத்தப் பெற்றன என்று ரஷ்ய கல்வி அமைச்சர் மிக்காய்ஸ் ப்ரோக்கோஃபிவ் குறிப்பிட்டுள்ளார். குறைவான பாடப் பளு தனிப்பட்ட முறையில் பயிலும் வாய்ப்புகளைக் குழந்தைகளுக்கு அளிப்பதுடன், அவர்கள் தமது விருப்பத்திற்கும் திறமைக்கும் ஏற்ற கல்வி பயிலவும் வழி வகுக்கின்றதென அறிஞரும் ஆசிரியருமான அவருக்கு நன்கு தெரியும்.

இந்த இலக்கை அடைய சோவியத் பள்ளித் திட்டம் முயன்று வருகின்றது. உயர் வகுப்புகளுக்கு வரைபடம் வரைதல், திட்ட அமைப்பு, மின்சார, வானெலி பொறியமைப்பு, இரசாயன, இயந்திரத் தொழில் நுட்பம், பயிர்த் தொழில், கால்நடை வளர்ப்பு போன்ற துறைகளில் நடைமுறைப் பயிற்சியும் ஆய்வுக்கூட வசதியும் அளிக்கும் தனிக் கல்வி அளிக்கப்படும்.

1967–68இல் நாடு முழுவதும் பத்தாம் படிவங்களில் சேர்ந்த மாணவருள் 40 முதல் 60 சதவிகிதம் இத்தகைய தனிக் கல்வியினுல் பயனடைந்தனர். 516 பள்ளிகளில் ஏறக்குறைய 2000 வகுப்புகள் கணக்கியல், பௌதிகம், வேதியியல் ஆகியவற்றில் தனிப் பயிற்சி அளித்தன.

ரஷ்யாவில் 2,06,000 பள்ளிகளுள் பலவற்றில் புதிய திட்டம் ஏற்றுக் கொள்ளப் பெற்று விட்டது. அங்குள்ள 25 இலட்சம் ஆசிரியர்களுக்கு ஓர் அறைகூவலாக இருக்

(தொடர்ச்சி 33ஆம் பக்கம் பார்க்க)

கல்வி பற்றிய கேள்வி

பால் லென்கிராண்டு

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் மக்களுக்கு வழங்கப்பட்ட கல்வியைப் பற்றி தம்மால் ஒன்றுமே புரிந்து கொள்ள முடியவில்லை என்று 'எமிலி' என்ற தம்முடைய நூலில் 'ரூஸோ' எழுதி இரு நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. நடைமுறையில் இருக்கும் கல்வித் திட்டத்திற்கு மக்கள் தம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்பது தேவையா? மக்களின் தேவைகட்கு ஏற்பக் கல்வித் திட்டம் மாறுதலடைவது சிறப்பல்லவா? இந்த அடிப்படையான கேள்வி மிகத் தெளிவாகக் கேட்கப்பட்டுள்ளது.

அன்றிலிருந்து இன்றுவரை ஒவ்வொரு தலைமுறையிலும், கல்விக்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு ஆராய்ச்சிக்கும் பரிசோதனைக்கும் இலக்காகி இருந்து வருகிறது. மறுப்புகள், திட்டங்கள் ஆகியவற்றின் பட்டியல் மிக நீண்டு செல்வதாகும். 'ரூஸோ'வை அடுத்து ஸ்விட்சர்லாந்தில் ஜீன்—ஹென்ரி பெஸ்டொலாஸியும் ஜெர்மனியில் ஃப்ரடரிக் ஃப்ரோபெலும், இங்கிலாந்தில் பெர்ட்ராண்ட் ரஸ்ஸலும், அமெரிக்காவில் ஜான் ட்யூயியும், பிரான்ஸில் ஸ்லெஸ்டின் ஃப்ரென்ட்டும், சோவியத் யூனியனில் ஆன்டன் மார்க்கரென்கோவும், இத்தாலியில் மாரியோ மாண்டிஸோரியும் மற்றும் டஜன் கணக்கானவர்களும் கல்விச் சீர்திருத்தத்தின் முன்னோடிகளாவர்.

கல்வி, மனிதனுடைய முன்னேற்றம் என்பவற்றையே தம்முடைய முதற் கவலையாகக் கொண்டிருந்த தத்துவாசிரியர் பலரையும் நாம் மறந்துவிடக் கூடாது. ஃப்ரட்ரிக் ஹேகல், அகஸ்ட்டே காமட் அல்லது ஃப்ரட்ரிக் நிட்சி ஆகியோரின் எழுத்துக்களை மறுபடியும் படித்தால் இந்தப் பிரச்னைப் பற்றியே ஒவ்வொரு பக்கத்திலும் பேசப்பட்டிருப்பதைக் காணலாம். தன் அனுபவத்தாலும், எண்ண வளர்ச்சியாலும் பிறருடன் கொள்ளும் உறவாலும் மனிதன் எவ்வாறு தன்னுடைய ஆளுமையை வளர்த்துக் கொள்ள முடியும்? எவ்வாறு ஓயாமல் தன்னை மேலும் மேலும் சீர்திருத்திக் கொண்டு உண்மையான, தடையற்ற சுய விடுதலையைப் பெற முடியும் என்பதே அந்தப் பிரச்னை.

அளவு மீறிய குறிக்கோள் கருத்துக்கள் நம்மிடம் உள்ளன என்பது உண்மையே. தனி மனிதன் சமுதாயம் என்ற இரண்டின் நன்மையையும் கருதிக் கல்வி வளர்ச்சித் திட்டத்தில் மாறுதல் ஏற்படும்பொழுது மரபு பற்றிவருகின்ற நிறுவனங்கள் அமைதியாகவோ ஒரே வழித் தீவிரமாகவோ தடையைப் போட்டுவிடுகின்றன.

பால் லென்கிராண்டு யுனெஸ்கோவின் கல்வி முன்னேற்றத் துறையில் கல்வியைத் தொடர்ந்து வழங்கும் பிரிவின் தலைவர். முதியோர் கல்வி, நிலைத்த கல்வி பற்றி பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ள இவர் பியூப்பின் எத் கல்ச்சர் (பாரிஸ் 1966) வெளியிட்ட 'எஜுகேஷன் பெர்மனென்டே' எனும் நூலின் ஆசிரியருமாவார்.

19ஆம் நூற்றாண்டின் ஓவியரும் கேலிச் சித்திரக்காரருமான ஹொனுரே டாமியர் சமூக, அரசியல் செய்திகளைப் பற்றி கேலிப் படங்கள் வரைவதில் புகழ் பெற்றவர். அவை தொழில் வளர்ச்சியுற்ற சமூகத்தில் நிகழும் பிணக்குகளைக் காட்டின. கல்வி முறையின் குறைகளையும் தனிச் சலுகைகளையும் அவர் இடித்துக் காட்டினார். "உயர் நலத்திற்கு முதல் பரிசு" என்ற இப்படம் 1850இல் நிகழும் பரிசு வழங்கும் விழாவைச் சித்தரிக்கிறது.

" Teachers and Small Fry "
by HonoreDaumier,
Edition Vilo c Andre Sauret, Edition du Livre,
Monte- Carlo

பழமைக்கும் புதுமைக்கும் போர்

மனித முயற்சிகள் பலவற்றுள்ளும், வளர்ச்சிப் பாதையில் அதிக முட்டுக்கட்டைகளைச் சந்திப்பது கல்வியே போலும்! பழமைக்குப் பேர் போன மதக் கோயில்கள், படைகள் போன்ற நிறுவனங்கள்கூட இப்பொழுது ஒரு பரிணாம வளர்ச்சியில் அகப்பட்டுள்ளன. தேசப் பாதுகாப்பு என்பது முன்போல் படை முகாம்களில் இப்பொழுது இல்லாமல் அதற்குப் பதிலாக விஞ்ஞானிகளின் சோதனைசாலையிலேயே இருக்கிறது. ரோமாபுரியில் எல்லா பிஷப்புகளும் கூடிப் போப்பாண்டவருடன் கலந்து சமய நிறுவனங்களின் அதிகாரம் எந்த அளவில் இருக்கலாம் என்று ஆய்கின்ற அதே நேரத்தில் சாதாரண மத குருமார்கள்கூட சமய சம்பந்தமாக முடிவெடுக்கும் அதிகாரத்தில் தமக்கும் பங்குவேண்டும் என்று மறுப்புப் பேசுவோருடன் கலந்துள்ளனர்.

மிகச் சமீப காலம் வரை இளஞ்சிறார்கட்கும், மாணவர்கட்கும் அளிக்கப்படும் கல்விபற்றிய பரிணாம, வளர்ச்சி எதுவும் தோன்றவில்லை. மிகவும் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் இன்று வழங்கப்பெறும் போதனா முறை, சார்லஸ் டிக்கன்சும் ஜூல்வேலாசும் குத்திக் காட்டிய பழைய முறையிலிருந்து ஓரளவு வளர்ச்சி அடைந்திருக்கிறதென்பது உண்மைதான்; குழந்தைகளை இப்பொழுது சவுக்கால் அடிப்பதில்லை; அவர்கள் அறிவை மழுங்க வைப்பதில்லை; ரைன் நதி அல்லது தேம்ஸ் நதியின் உப நதிகள் யாவை என்பதை மனப்பாடம் செய்ய வேண்டுமென்று யாரும் கோருவதில்லை. பொதுவான ஒழுக்க நியதிகள் வளர்ந்திருப்பதுடன் நம் நாகரிகத்தின் சில முன்னேற்றங்களால் ஏற்பட்டுள்ள அதிர்ச்சி அலைகள் கல்வித் துறையிலும் தம் இருப்பைக் காட்டியுள்ளன. பொதுவாகக் கூறினால் குழந்தையின் முழுத் தன்மைக்கு, இன்றைய நிலையில், உடலளவிலாவது மதிப்புத் தருகின்றனர். பாடத் திட்டங்களும், பயிற்று முறைகளும் ஓரளவுக்கு முன்னேறியுளது; எனினும்பெரும்பகுதி அப்படியே தான் இருக்கின்றது.

எதிர்காலப் பிரஜைகளுக்குப் போதிக்கவும் பயிற்சி தரவும் தேவையான ஆதாரங்களாகிய பள்ளிகளும் கல்லூரிகளும் தலைமுறை தலைமுறையாக அதே தன்மைகளுடன்தான் இருந்துவருகின்றன. சாதாரண வாழ்வுடன் எப்போதாவது கொள்கின்ற தொடர்புமட்டுமே இருக்கிறது. வாழ்க்கையோடு அதிகம் தொடர்பில்லாமல் இன்பகரமான போதனையோ ஒருவரோடொருவர் கலந்து உரையாடுகின்ற நிலையோ இல்லாமல் இருந்துவருகிறது.

கட்டாயக் கல்வி முறை என்பது எவ்வளவு சிறப்புடையதாக இருப்பினும் புதியன புகுத்துவதில் ஒரு தடையை உண்டாக்குகிறது. ஏன் மாறுதல் செய்யவேண்டும்? ஏன் வளர்ச்சி வேண்டும்? ஆண்டுதோறும் நம்முடைய பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான மாணவர்களின் எண்ணிக்கை குறையாமல் கிடைக்கின்றபொழுது, கல்வி முறையை வளர்ச்சிக்கேற்ப மாற்றியமைக்க வேண்டுமென்று ஏன் சிந்திக்கவேண்டும்? தேவையும் வழங்குதலும் என்ற சட்டம் வளர்ச்சிக்கு எவ்வளவு அடிகோலுவதாக இருப்பினும் இந்த இடத்தைப் பொறுத்தமட்டில் பொருத்தமாக அமையவில்லை.

இன்றைய நிலையில் ஆசிரியர் பணிக்காகவே தேர்ந்தெடுத்துத் தயார் ஆக்கப்படும் ஆசிரியர் கூட்டமும் கற்பனைக்கும் புதுமைக்கும் இடம்கொடுக்கும் உணர்ச்சியைப் பெறவில்லை. ஆசிரியராக இருக்கின்ற காரணத்தினாலேயே எந்த நிலையிலும் ஒருவர் உரையாடல் முறையில் பங்குகொள்ள விரும்பவில்லை. அவரையொத்த கருத்து உடையவர்களிடையே தனக்கும் ஓர் இடம் உண்டு என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை. இன்றுள்ள பரிட்சை முறையில் அவர் மாணவ நிலையிலிருந்து அதிகாரி நிலைக்கு இயல்பாகவே மாற்றப்பட்டு விடுகிறார். உலகம் முழுவதையும், எடுத்துப் பார்த்தாலும் ஓர் ஆசிரியர் கையில் அதிகாரம் குவிந்துக் கிடப்பதைப் போல் வேறு எந்தத் துறையிலும் அதிகாரம் குவியவில்லை. அவர் பயிற்றுவிக்கிறார்; பண்பாட்டிற்கு வடிவு கொடுக்கிறார். அவரைப் பொறுத்தமட்டில் வயதும் அறிவும் துணை நிற்கின்றன. இதன் பயனாக அவர் எப்பொழுதும் நேர்வழியிலேயே இருப்பார் என்று எண்ணப்படுகிறது. அவரே நீதிபதியாகவும் ஜூரியாகவும் இருக்கின்ற காரணத்தால் அவருக்கு மேல் முறையீடு செய்ய யாருமில்லை. அவரே குற்றம் யாருடையது என்று கண்டு தண்டனை விதிக்கவோ அல்லது பரிசுகள் வழங்கவோ உரிமை உடையவர் ஆகிறார். ஒரு மனிதன் முழு வளர்ச்சி அடைவதற்கும் அவனுடைய குறிக்கோளை நிறைவேற்றவும் இது சிறந்த வழி அன்று என்பதை நாம் அறிவோம். சுற்றிலும் மூடப்பட்டுள்ள இந்தச் சிறிய உலகத்தைப் பிளந்து கொண்டு ஒரு சிலரிடத்திலாவது உலகியல் அறிவும் நிஜ வாழ்க்கையில் காணப்பெறும் பிரச்னைகளும் உள்ளே செல்கிறது என்றால் ஒரு சில ஆசிரியர்கள் நல்ல அதிருஷ்டமாக இந்தச் சிறிய உலகை கிழித்துக்கொண்டு வெளியே வந்துபோட்டிகள் நிறைந்த வெளி உலகத்தை, அதாவது அரசியல், கலை, சமுதாய வாழ்க்கை, முதியோர் கல்வி ஆகிய உலகங்களைப் பார்க்க முடிகின்றது.

சட்டப்பூர்வமாக அமைந்துள்ள பழைய நிறுவன வடிவங்களில் உள்ளவர்கட்கு, மாற்றம் என்பது, அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்யாத காரணத்தால், விரும்பத்தகுந்ததாக இல்லை. குடும்பம் அல்லது அரசாங்கம் என்று சொல்லக்கூடிய எந்த நிறுவனமாக இருப்பினும் அவர்கள் கல்வியின் மூலம் எதனை விரும்புகிறார்கள் என்றால் கட்டுப்பட்டு நடக்கும் மனிதர்களை உற்பத்தி செய்யும் கல்வியையே விரும்புகிறார்கள். இந்த நிலைபெற்றுள்ள பள்ளிகள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் நடைமுறையைப் பார்த்தால், சமுதாயம் சொல்லுகின்ற கட்டுக்கதைகளையும், கொள்கைகளையும் வேத வாக்காக நம்புகின்ற மக்களை உற்பத்தி செய்வதே இவற்றின் நோக்கமாக இருந்து வருகிறது. இந்த நிறுவனங்கள் எதிர்த்து கேள்வி கேட்பவர்களைக் கண்டு அஞ்சுகிறது. இங்ஙனம் கேள்வி கேட்பவர்கள்தாம் சுதந்திர புருஷர்களாய், ஜனநாயகப் பற்றுடைய மக்களாய் எளிதில் எதற்கும் பணியாதவர்களாய், பிறருடைய, கொள்கைக்கு தலையாட்டாதவர்களாய், சிறந்த முடிவு எடுக்க வேண்டிய இடத்தில் தங்களைத் தாங்களே நம்புகிறவர்களாய் இருக்கின்றார்கள்.

இந்த நிலையில், இதுவரை யார் கல்வித் துறைக்கு பொறுப்பாக இருந்தார்களோ அவர்களுடைய அதிகாரத்தை, புதிய கிளர்ச்சி பெற்ற மக்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் சேர்ந்து முன்னைப் போல பணிவான முறையில் அல்லாமல் புரட்சி மூலமாகவும் இப் பழைய திட்டத்தை எதிர்க்கும்பொழுது இப் பழைய பொறுப்பாளிகள் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைவதில் வியப்பு ஒன்றுமில்லை. சமீப காலங்களில் நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளை மறுபடியும் விளக்க வேண்டியதில்லை. நவீன நாகரிகத்தில் உள்ள எதிர்த்துப் போராடுகின்ற சக்தி, வரலாற்றில் ஒவ்வொரு காலத்தில் மிக வலுவு அடைகிறது என்பதுபற்றியும் தொழிலாளர்கள், பெண்கள், கறுப்பர்கள், காலனிகள் ஆகிய பகுதிகளில் புகுந்து புரட்சி கிளப்பியதுபோல இதுவரையில் பாதுகாவலோடு இருந்து வந்த கல்வித் துறையிலும் புகுந்துவிட்டது. கல்வித் துறையிலிருந்து பழைய கட்டுக்கோப்புகளை மாணவர் கிளர்ச்சி உடைத்துவிட்டது. இந்த உடைப்பின் வழியாகப் பன்னெடு நாட்களாக இருந்துவந்த கேள்விகளும், சமீபக் காலத்தில் தோன்றிய புதிய எண்ணங்களும், பொறுமை இன்மையும், புதிய எதிர்பார்த்தல்களும் புகுந்துவிட்டன. கொடுங்கோலின்கீழ் அராஜகத்தையும் கொடுமையையும் பொறுத்துக் கொண்டிருந்த அப்பாவிகளைப் போல் இப்பொழுது உள்ளவர்கள் ‘தலைவிதி’ என்று நினைத்துக் கொண்டிருக்கத் தயாராயில்லை. கல்வித் துறையிலுள்ள குறைபாடுகளையும் தவறுகளையும் அத்துறையில் இயல்பாகவே அமைந்தவை என்று நினைத்துக்கொண்டு இருப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. எல்லாப் புதிய துறைகளிலும் இருப்பதுபோல் எதிர்ப்புச் சக்திகளின் இடையே ஒற்றுமையைக் காணக் கூடியதாகவும், இவற்றிலுள்ள மேன்மைத் தன்மையையும் தாற்காலிகத் தன்மையையும் அறிந்து அதற்கேற்ற முறையில் வழி வகுக்கக் கூடிய புதியதோர் கல்வித் திட்டத்தை உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. அடிப்

வேதியியல் பகுப்பு

புகழ்மிகு பிரெஞ்சு ஏளன ஓவியரான செம்பேயின் ஓவியம். இஃது எடிஷன்ஸ் டி நோயல், பாரிஸ் (1864), வெளியிட்ட "சாவுவ் குய் பேயுட்" (ஒவ்வொருவனும் தனக்காக) எனும் அவரது நூலில் உள்ளது.



© Sempe—Editions Denoel

படையான முக்கியத்துவம் பெற்றுள்ள அல்லது விஸ்தாரமான முறையில் ஒரு நீண்ட கேள்விப் பட்டியலைத் தயாரிப்பது என்பது இயலாத காரியம். என்றாலும் அவற்றுள் சில தள்ள முடியாதவையாகவும், முக்கியத்துவம் வாய்ந்தாகவும் இருக்கக் காண்கிறோம்.

கல்வி வளர்ச்சியின் நோக்கம் எதுவாக இருத்தல் வேண்டும்? மனித ஆளுமையின் எந்தப் பகுதிக்கு அது பொருத்தமுடையதாக அமைய வேண்டும்? இதுவரையில் அவ்வளர்ச்சிக்கு நாம் கொடுத்து வந்த இலக்கணம் மிகவும் தடைப்படுத்துவதாக அமைந்திருக்கவில்லையா? அறிவு, ஞானம் என்பவற்றைப் பற்றி நாம் கொண்டுள்ள குறுகிய கருத்துக் காரணமாக உடல் இயல், சமுதாய இயல், உணர்வு இயல், அழகு இயல் ஆகியவற்றைப் பற்றிய மதிப்புகளை தியாகம் செய்துவிட இல்லையா?

தனி மனிதனுடைய வளர்ச்சியைப் பற்றி ஆராயும் பொழுது பிற பொருளின் இடையேயுள்ள (பால் வேற்றுமை, எண்ண வேற்றுமை, உடல் இயல் அடிப்படைகள், சமுதாய, பொருளாதார நிலை) உறவு முறை, மனிதனின் செயல்களுக்கு இடையே உள்ள (பொருள்கள், மனித்தர்கள்) வேறுபாடுகள் இவற்றோடு பல்வேறு வகைப்பட்ட கல்வி முறையின் தொடர்புகள் யாவை?

எந்தளவுக்கு கல்வி என்பது அதாவது அறியும் அறிவை ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் போதிக்கும் முறை புறத்தே இருந்து திணிக்கப்படுகிறது.

உலகில் வாழும் வழியை எந்தளவுக்கு கல்வி என்பது வகுத்துத் தருகிறது. அதாவது, மனிதன் பெறும் அனுபவத்திலிருந்து ஒரு முழுத்தன்மை பெற்ற ஆளுமையோடு கூடிய மனிதனை உருவாக்குவதற்கு கல்வி எந்தளவுக்குப் பயன்படுகிறது? கற்று அறிந்தவன் என்பதற்கும் கல்வியை உடையவன் என்பதற்கும் உள்ள தொடர்பு யாது?

கல்வி புகட்டும் சாதனையை எங்கே தொடங்க வேண்டும்? பள்ளியிலா, கல்லூரியிலா, வீட்டிலா, தொழிற்சாலையிலா, விளையாடுமிடத்திலா, தொழிற் சங்கங்களிலா, நாடக அரங்கத்திலா, வானொலி நிகழ்ச்சிகளிலா? தனி மனிதனுடைய கல்வி வளர்ச்சிக்கு ஒவ்வொரு நிறுவனமும்

வாழ்க்கைக் கல்வி

ஓவியரின் கருத்து

ஸ்ட்ராஸ்பர்க்கில் ஐரோப்பிய, ஐரோப்பியர் பண்பாட்டு நிறுவன அவையின் பண்பாட்டுக் கூட்டுறவுக் குழு வெளியிட்ட "எஜுகேஷன் அண்ட் கல்ச்சர்" எனும் மதிப்பாய்விதழில் இவ் ஓவியங்கள் முதலில் வெளிவந்தன.



மாற்றமில்லாமையின்

இந்தளவுக்கு வழங்க வேண்டுமென்று சொல்லக் கூடிய முறையில் அனைத்தையும் உட்படுத்திய உலகத் திட்டம் ஏதாவது இருக்கிறதா? பல்வேறு நிறுவனங்களும் வழங்கும் அவ்வவற்றின் பகுதிகளை ஒற்றுமைப்படுத்தி முழுவதாக ஆக்கும் வழி என்ன?

கல்விக்கேற்ற சிறந்த வயது ஏதேனும் உண்டா? இல்லாவிட்டால் ஒவ்வொரு வயதிலும் குறிப்பிட்ட சில பிரச்னைகள் தோன்றுகின்றன என்றும் அந்தந்த வயதில் ஏற்படுகின்ற பிரச்னைகளைச் சமாளிப்பதற்குப் புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்த முயற்சிகளுக்கு இந்த நிறுவனங்கள் தம்மால் ஆன உதவியை செய்ய வேண்டுமென்றும் வாழ்க்கையின் புதிய தத்துவங்களை அந்தந்த வயதில் அவன் காண முற்பட வேண்டும் என்றும், தன்னைத்தான் அறிவதோடு இந்த உலகத்தில் தனக்குரிய இடம் என்ன என்பதையும் ஒரு மனிதன் அறிந்து, அறிவாலும் உணர்வாலும் அதற்கு தன்னை தயார் செய்துகொண்டு, வருகின்ற புதிய சவால்களை ஏ.ற்றுத் தன்னுடைய பொறுப்பைச் சிறந்த முறையில் கழிப்பதற்குரிய வாய்ப்புக்களை அவன் பெறவேண்டுமென்றும் சொல்லலாமா? பொதுவாகக் கல்வி என்று சொல்லப்படும் கருதுகோளையும் மனித வாழ்க்கையில் கல்விக்குரிய கடமை என்ன என்பதையும் மிக நீண்ட அளவு நீட்டிக்கொண்டு சென்ருலொழிய மேலே கூறியவற்றை சமாளிக்க முடியாது.

சிறந்த முறையில் தேர்வு செய்ய வேண்டுமென்பதற்கும் சிறந்த பயிற்சி அளிக்க வேண்டுமென்பதற்கும் இடையில் உள்ள முரண்பாட்டை எப்படி நிவர்த்திப்பது?

இன்று வழங்கப்படும் முறையில் கல்வி போதனை என்பது பிள்ளைகளிடத்திலுள்ள இயற்கைக் குணம், மனோ நிலை, முதிர்ச்சி வீதம் அவர்கள் மேற்கொள்ளப் போகின்ற அலுவல்களின் பல்வேறு இயல்புகள் என்பவற்றிலுள்ள பெருத்த மாறுபாடுகளை இக் கல்வி போதனை சிந்திக்கிறதா?

இன்றுள்ள நிலைமையில் கல்வி என்பது வளர்ச்சிக்கு உண்மையிலேயே உதவும் கருவியாக இருக்கிறதா? எந்த நிலையில் கல்வி என்பது இந்தக் கடமையை நிறைவேற்ற முடியும்?

நவீன மனிதனுடைய வரலாற்று அறிவு, விஞ்ஞான மனப்பான்மை என்பவை இன்றுள்ள கல்வி பயிற்றும் முறையில் எந்தளவுக்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன? பள்ளிகளிலும் அல்லது புல்கலைக் கழகங்களிலும் இன்றுள்ள கல்வி முறை ஒரு குழந்தை இயல்பான வளர்ச்சியைப் பெறுவதற்கு பெருந் தடையாக அமையவில்லையா?

பள்ளி நிர்வாகத்திலும், பள்ளிப் புறச் செயல்களிலும் உள்ள நிகழ்ச்சிகளை எங்ஙனம் வேறுபடுத்திப்பார்க்க முடியும்? சமுதாயம் முழுவதற்குமான பண்பாட்டுக் கழகமாகக் கல்வி நிறுவனங்களை ஆக்க முடியாதா? கல்வியின் இப் புதிய பணிகளுக்குத்

விளைவு

தேவையான அளவுக்கு எத்தகைய பயிற்சியை எல்லா ஆசிரியர்களும் பெறவேண்டும்? குறிப்பாக ஓர் ஆசிரியர், அதிகம் இல்லாவிட்டாலும் தான் பேசுகின்ற அளவுக்காகவாவது வாயை மூடிக்கொண்டு கவனிக்கவும், குழந்தைகள் சொல்லுவதைக் கேட்கவும் கற்றுக் கொள்ள வேண்டாமா? ஓர் ஆசிரியர், குழந்தைகள் பணிபுரிவதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் தேவையான கருவிகளைக் குழந்தைகளின் முன்னே வைப்பதை விட்டு விட்டுத் தான் கற்று இருக்கின்ற கல்வியைக் கடைபரப்ப வேண்டிய சூழ்நிலை இன்றியமையாததுதானா?

ஆசிரியப் பணியில் போட்டி மனப்பான்மையின் இடமும் தேவையும் எந்தளவிற்கு வேண்டும்? ஒன்று சேர்தல், கூட்டுப் பொறுப்பு என்பவை தனி மனிதனுடைய வாழ்க்கையிலும் சமுதாய வாழ்க்கையிலும் மிகவும் தேவை என்றாலும் அவை வகுப்புப் பிரிவினையாக மாறிவிடாமல் இருக்க யாது செய்யவேண்டும்?

பொதுமக்களைக் கவர்ந்திழுக்கும், எந்த ஒரு கருவியையும் தகவல் அறிவிப்பதற்கும் மகிழ்ச்சி ஊட்டுவதற்கும் மட்டுமே பயன்படாமல் மனிதனுடைய ஆராய்ச்சி அறிவையும், மனத்தையும் பயிற்றுவிப்பதற்குரிய கருவியாக எப்படிப் பயன்படுத்தவேண்டும்?

குறைந்த அளவேயுள்ள தேசிய ஆதாரங்களை வீண் ஆக்குதல் என்பது தேவைதானா? உதாரணமாக, ஓர் ஆண்டு முழுவதும் ஒரு குழந்தை படித்ததையே ஒப்பித்துக் கொண்டிருப்பதும், பள்ளிக்கூடத்தை விட்டு நின்றுவிடுமாறு செய்வதும், மேல் முறையீடே இல்லாமல் பரீட்சை என்ற பெயரில் அவர்களை வடிகட்டுவதும் தேவைதானா?

பல்வேறு உட்பகுதிகளையுடைய பல்வேறு வினாக்களிலிருந்து ஏதோ ஒரு சிலவற்றைப் பொறுக்கியெடுத்தவை தாம் மேலே தரப் பெற்றவை. இப் பிரச்னைகள் சமுதாயத்தின் அமைப்பு, சமுதாயத்தில் கல்வியின் இடம், சமுதாயத் தேவைகளைக் கல்வி எங்ஙனம் பூர்த்தி செய்கின்றது; தனி மனிதர்கள், இனங்கள் ஆகியவற்றின் எதிர்பார்ப்புகளைக் கல்வி எங்ஙனம், பூர்த்தி செய்கின்றது என்பவை போன்ற பல பிரச்னைகளும் இவற்றுள் அடங்கியிருக்கக் காணலாம்.

ஒவ்வொரு மனிதனும் இன்னும் பல்வேறு வினாக்களை எழுப்ப முடியும் என்றாலும், எந்த ஒரு மனிதனும் முற்றிலும் அடங்கக்கூடிய ஒரு வினாப் பட்டியலைத் தயாரிக்க முடியும் என்று நான் நம்பவில்லை. என்றாலும் இதில் முக்கியமானது என்னவென்றால், கல்வி என்ற பிரச்னை முழுவதும் இப்பொழுது கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை அறியவேண்டும் என்பதேயாகும்.

ஒருவேளை பெரிய மாறுபாடுகள் ஒன்றையும் செய்யாமல் சுவரிலுள்ள வெடிப்புகளைச் சுண்ணாம்பு வைத்து பூசுவதுபோல மேலாகப் பூசிவிடலாமென்றும் நினைக்கலாம். ஒன்றும் செய்யாமல் சோர்ந்து இருப்பதற்குரிய காரணங்களை எளிதில் அறிந்து கொள்ள முடியும். புதிய ஒரு திட்டத்தை வகுப்பது என்பது மிகப் பெரிய காரியமாகும். இதுவரையில் பழகிவந்த பல்வேறு பொருள்களைத் துறந்து, பல்வேறு தியாகங்களைச் செய்து தைரியத்தை அடிப்படையாகக்கொண்டு, மனித ஆற்றலில் எல்லையில்லாத நம்பிக்கை வைத்துப் பெருமளவில் முயற்சி செய்தால்தான் இப் புதிய மாற்றத்தைக் கொண்டுவர முடியும். பல காலத்திற்கு முற்பட்டதும் துயரம் நிறைந்ததுமான நம்பிக்கைகள் பலவற்றை உதறி எறிந்துவிட்டுப் புரட்சிகரமான புதிய திட்டங்களை வகுப்பதாகும் இது. இவ்வாறு செய்ய வேண்டுமானால் அதற்குரிய விலையை செலுத்தியே ஆக வேண்டும். அவ் விலை பல சமயங்களில் மிகக் கடினமானதாக இருக்கவும் கூடும்.

பல்வேறு வகைப்பட்ட மக்கள், பல்வேறு திட்டங்களை வைத்துள்ளார்கள். என்றாலும் மாற்றத்தின் காற்று வீசத் தொடங்கிவிட்டது. ஆசிரியர், அமர்ந்திருக்கும் மேசையை விட்டு விட்டதுடன் வகுப்பு மாணவர்களுக்கு அப்பால் நிற்கின்ற இயல்பைத் துறந்துவிட்டார். அவ்வாறு செய்வதிலேயே பழைய காலவகுப்பு முறை மாறிவிட்டது எனலாம். ஒரு சில நாடுகளில் பள்ளிக்கூடங்களுக்குப் பதிலாகக் 'கல்வி ஒருமங்கள்' கட்டப்படுகின்றன. இந்த 'ஒருமங்களில்' குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோர் பெறுகின்ற கல்வியின் அடிப்படை ஒரு முழுத்தன்மை பெற்றதாக அமையப் பெற்றுள்ளது. போதனை, உத்தியோக முன் போதனை, ஓய்வு நாளைக் கழிக்கும் முறை, செய்திகள் வழங்கல் ஆகியவைபற்றிய கல்வி முறையும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கூடம் நிலைத்துள்ள பகுதியைச் சுற்றியுள்ள சமுதாய மக்கள் எந்தளவுக்கு மாணவர்கள் போதனையிலும் பயிற்சியிலும் பங்குகொள்ள முடியுமோ அந்தளவுக்கு அவர்களும் தம் ஒத்துழைப்பைத் தருமாறு அழைக்கப்படுகிறார்கள்.

எல்லாவற்றையும்விட மேலாக 'இளைஞர் கல்வி'த் திட்டத்தில் குறிப்பிட்ட முன்னேற்றம் காணப்படுகிறது. கல்வியைப்பற்றிய புதிய சிந்தனையில் உருவான பல்வேறு கொள்கைகள் அதாவது வற்புறுத்தாமை, குறிப்பிட்ட சில பகுதிகள் தவிர மற்றப் பகுதிகளில் தேர்வுச் சான்று இதழ்கள் வழங்காமை, அவரவர்களுடைய விருப்பம், கருத்துக்கு ஏற்றபடி நிகழ்ச்சிகளை அமைத்தல், உரையாடல், கருத்துப் பரிமாறல் என்பவற்றைப் புகுத்தல், பலரும் சேர்ந்து பணிபுரிதல், ஆசிரிய—மாணவரிடையே வேறுபாடு இல்லாமல் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளும் வழியை மேற்கொள்ளல், அன்றாட அனுபவத்திலிருந்து வேண்டுமான அளவு பயன்படுத்திக்கொள்



(தொடர்ச்சி 33-ஆம் பக்கம் பார்க்க)

தேவைக்கு மிகுதியான ஆசிரியர்களா?

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய முறைகளின் செலவுகளைப் பார்க்கும்போது, ஒன்று மிகக் குறைந்த செலவுள்ளதாகத் தோன்றுகிறது. புதிய முறை என்றால் கற்கும் பாடங்களை வரிசையாகத் தரும் இயந்திரத்தைப் பயன்படுத்துதல் எனப் பலர் நினைக்கின்றனர். ஆனால் இயந்திரத்தை விட கற்பிக்கும் முறையே முக்கியமானது. சில பள்ளிகள் பாடங்களை எளிய '' நூல் வடிவிலே தந்து ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளன.

மாணவன் குறிப்பிட்ட கட்டங்களில் விடைகளை நிரப்பி, விலையுயர்ந்த கருவியின் துணையின்றி தானே கட்டங்களை நிரப்பிச் செல்கிறான். இஃது அவனை உண்மையிலே பொறுப்புள்ளவனாகச் செய்கிறது. இதன் பயனை உணர்ந்து, அவன் ''ஏமாற்றவில்லை''யெனில் இம்முறையின் நோக்கம் நிறைவேறுகிறதெனலாம்.

இத்தகைய திட்டங்களைத் தீட்ட திறமையும் கவனமும் தேவை. இதற்கு வழக்கமான பாடநூல்களை விட அதிக செலவாகுமெனினும் சிக்கலான கருவிகளைவிடக் குறைந்த செலவே ஏற்படும். மாணவர்கள் விதிகளுக்கேற்ப நடந்து கொள்வார்களானால், இப்போது ஆசிரியர் மாணவருக்கு நேரில் வழங்கும் வழக்கமான பாடங்களை ஆசிரியரின் துணையின்றியே மாணவர் பயிலக்கூடும் என்பதும் புலனாகின்றது.

ஆயினும் ஒரு முக்கியமான கேள்விக்கு இங்கு விடையளிக்க வேண்டும். கல்வி முறையில் ஆசிரியர் நேரில் கற்பிப்பதால் விளையும் பயன் எத்தகையது ?

இயந்திரம் ஒரு சிறந்த ஆசிரியரை விட நல்ல முறையில் கல்வி கற்பிக்க முடியாது எனச் சிலர் கருதுகின்றனர். கற்பிக்கப்படும் அறிவை மாணவன் நன்கறிந்து, அதை அறிவாற்றலுடன் ஆக்க முறையில் பயன்படுத்த ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு தேவையென அவர்கள் கூறுகின்றனர். கற்பனைத் திறனும் தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மையுமுடைய மாணவனுக்கு கற்பிக்கும் சிறந்த ஆசிரியரின் பணியை இயந்திரம் செய்ய முடியாதெனவும் அஃது அவருக்குத் துணையாக இருக்கலாமேயன்றி, அவருக்குப் பதிலாக அலுவலாற்ற முடியாதெனவும் அவர்கள் நம்புகின்றனர்.

ஆசிரியர் நேரில் கற்பிப்பதைப் பற்றி வேறொரு கருத்தும் உண்டு. அது மேலே குறிப்பிட்டதைப்போன்று தெளிவானதன்று, ஆயினும் அறிவைப் புகட்டுவது போன்றும் அதைப் பயன்படுத்துவது போன்றும் கல்வித் தத்துவங்களில் இடம் பெறுகின்றது. அதுதான் மாணவனின் ஒழுக்கப் பண்புகளை வளர்த்தல், குணவியல்புகளை உருவாக்குதல்.

இப்போதுள்ள கல்வி நிறுவன அமைப்புகள் தோன்றுவதற்கு முன்னே இது குடும்பத்தினுடையவும் சமுதாயத்தினுடையவும் பொறுப்பாக இருந்து வந்தது. பெருமளவு இன்னும் அவ்வாறே இருக்கின்றது. ஆயினும் சில நாடுகளில் அஃது ஓரளவு பள்ளிக்கூடத்தின் பொறுப்பாகவும் கருதப்படுகின்றது. உண்மையில் ஒரு குழந்தை பள்ளியில் பிற குழந்தைகளுடனும் வயது வந்தோருடனும் தொடர்பு கொள்ளும்போது, அதன் விளைவு தானாகவே அவனிடம் ஏற்படுகிறது. அதனால் எப்போதும் நல்விளைவே ஏற்படுகிறதெனச் சொல்ல முடியாது.

ஆகவே இப்பொறுப்பில் ஒரு பகுதியைப் பள்ளிக்கூடம் ஏற்க வேண்டுமென எதிர்பார்க்கலாமல்லவா? சீர்குலைந்த குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளைச் சீர்படுத்த தற்கால அரசு முயல வேண்டும். அதற்கேற்ற சூழ்நிலையைப் பள்ளிக்கூடங்கள் அமைக்கின்றன.

இத்தகைய இழப்பீட்டுப் பணிகளைப் பள்ளிக்கு வெளியே செல்ல வேண்டுமென சிலர் கூறலாம். ஆனால் இது பிரச்னையைத் தீர்ப்பதாகாது. ''கல்வி'' என்ற பதத்தின் முழுப் பொருளில் பார்த்தால், இஃது ஒரு கல்வி நடவடிக்கையாகும். இதற்கென சமூகப் பணியாளரை அமர்த்தினால், அவர்கள் எந்த நிறுவன வாயிலாக செயலாற்றினாலும், அவர்களது செயல் கல்வி சார்ந்த செயலாகவே இருக்கும்.

அறிவையும் திறமையையும் வழங்கவோ, மாணவரைக் கண்காணித்து வழிகாட்டவோ, அறவழிப் படுத்தவோ ஆசிரியருக்கும் மாணவருக்கும் தொடர்பு தேவையா?

இது வெவ்வேறு நிலைகளில் மாணவருக்கு வெவ்வேறு வகைகளில் தேவைப்படும். தொடக்கப் பள்ளி மாணவனையும், சட்டப்படி வயது வந்தவனாகக் கருதப்பட்டு, வாக்குரிமையும் சொத்துரிமையும் பெற்று, பெற்றோரின் இசைவின்றித் திருமணம் செய்து கொள்ளக் கூடியவனையும் வெவ்வேறு விதமாகக் கருத வேண்டும்.

ஆசிரியருடன் தொடர்பு கொள்ளுதல் கல்வி முறைக்கு இன்றியமையாததென சமூகம் முடிவு செய்யுமானால், எந்தச் சாதனங்களையும் இயந்திரங்களையும் பயன்படுத்திய போதிலும், ஆசிரியர் பணியின் தன்மையைக் கருதி, ஓரளவு மிகுதியான ஆசிரியர்களை வேலைக்கமர்த்த வேண்டும்.

மேலும், இம் முக்கிய பணியை பயிற்சி பெற்ற தகுதியான ஆசிரியர்கள் செய்யவேண்டுமானால், அவர்களது நிலைக்கேற்ற ஊதியத்தை சமூகம் வழங்க முன்வரவேண்டும். மக்கள் தொகையில் 20 முதல் 25 சதவிகிதம் பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பயிலும்போது, கல்விக்கென நாட்டின் மொத்த ஆக்கத்தில் செலவிடப்படும் 6 அல்லது 7 சதவிகித வரம்பை கட்டாயம் உயர்த்த வேண்டும்.

—தமிழில் : வள்ளுவன் கிளாரன்சு

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற வளமான நாடுகள் இம்முயற்சியில் ஈடுபடவில்லையெனில் வளர்ச்சியுறு நாடுகள் 1980க்குள் தமது வறுமையினின்று விடுபட முடியாது என்பது தெளிவு. வளர்ச்சியுற்ற நாடுகளுக்கும் வளர்ச்சியுறும் நாடுகளுக்கும் உள்ள இடைவெளியை நிரப்ப கல்வித் தரத்தை உயர்த்துவதே முதல் வழியாகும்.

1967இல், அப்போது அமெரிக்க பாதுகாப்புச் செயலாளராகவும் இப்போது உலக வங்கியின் தலைவருமான ராபர்ட் மெக்நமாரா பொருளாதாரம், தொழில் நுட்பம், கல்வி ஆகிய மூன்று பிளவுகளைப் பற்றிய சிக்கலைக் கீழ்கண்டவாறு எடுத்துரைத்தார்.

''உலகின் வளநாடுகள் உலகைப் பிளவுபடுத்தும் இப்பொருளாதாரப் பிளவை நிரப்பவில்லையெனில், இறுதியில் நமக்குப் பாதுகாப்பு இராது. நிலநடுக்கம் போன்ற சமூக அதிர்ச்சிகள் நம் அனைவரையும் தாக்கும். அப்போது வன்முறை அலைஅலையாக எழுந்து வரும். வளநாடுகளுக்கும் வறுமை நாடுகளுக்குமிடையே வளர்ந்து வரும் பொருளாதாரப் பிளவு அணுகுண்டுகளைப்போல் நமது பாதுகாப்பை அரிக்கவல்லது. இது மிகத் தெளிவாக விளங்குவதுடன் நமக்கு நல்லறிவையும் புகட்டுகிறது.''

—தமிழில் : வள்ளுவன் கிளாரன்சு

(13-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டை வழங்குவதை விட பெரும்பான்மையினருக்கு மிகக் குறைந்த அறிவை வழங்குவது மேலாகும்.

''இன்னும் கொஞ்சம் தேநீர் பருகு' என்று அலீஸிடம் பித்துப் பிடித்த மார்ச் முயல் கூறியது.

''இன்னும் நான் தேநீரே பருகவில்லையே. எவ்வாறு இன்னும் கொஞ்சம் அதிகம் பருக முடியும்?'' என்றது அலீஸ்.

''இன்னும் குறைய குடிக்க முடியாதென கூறுகிறாய் அல்லவா? ஒன்றும் பருகாமலிருப்பதை விட அதிகமாகப் பருகுவது எளிது'' என்று மற்றொரு முயல் சொன்னது.

ஏற்கெனவே கிடைத்த பயன்களைப் பற்றி மன நிறைவடைந்து விடக் கூடாது. உலகம் ''விந்தை உலகிலுள்ள அலீஸி''ன் நிலையிலிருந்து விடுபட வேண்டுமானால், கல்வி யறிவற்ற மக்களுக்கு அவர்கள் இதுவரை பெற்று வந்த வெறுமையான கல்வியை விட உயர்ந்ததை வழங்க வேண்டும். பளுவான செலவுக் கஞ்சாத கல்வி முயற்சியை உடனே தொடங்க வேண்டும். இல்லையெனில் அடுத்த தலைமுறைக்குள் நிலை சீர்திருத்த முடியாததாகிவிடும்.

(20-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற சமூகங்களில் மனிதனின் தனித்தன்மை குறைவதற்கு வாய்ப்பிருப்பினும், விஞ்ஞானத்தை மிகுதியாகப் பயன்படுத்தும்போது மனிதனின் தனி

யுரிமைகள் வளர்ந்து வேலை வாய்ப்புகள் பெருக வழியேற்படும்.

இவ்வாறு கல்வி நமது நாகரிக நெருக்கடியைத் தீர்த்துவிடுமா? அது கல்வியின் நோக்கமன்று; கல்வி அதைத் தீர்ப்பதற்கு வழிதேடத் துணை செய்கிறது. அதைத் தீர்க்க ஒரே யொரு வழி இருக்க முடியாது. கல்வி சீர்குலையும் சமூகத்தின் நிழலுரு; அதைச் சீர்படுத்தும் கருவியாகவும் அமையக்கூடும். இவ்வாறு அது மனித நலம் வளர்க்கும் புதிய உலகை உருவாக்கத் துணை செய்யலாம்.

இதுதானே நமது முடிவான நோக்கம்? தனிச் சமூகத்தின் உறுப்பினராகவும் அதே நேரத்தில் உலகப் பொது நோக்குமுள்ளவர்களாகவும் இருக்கும் புதிய மனித சமுதாயத்தை, பொது நோக்கும் தனித் தன்மையும் ஒருங்கே போற்றப்படும் உலகை அமைக்க நாம் விழைகிறோம்.

இதுவரை இவ்விரு கருத்துகளும் எப்பொழுதும் முற்றிலும் முரண்பட்டே தோன்றின. நீர்மட்ட வேறுபாடு மின்னாற்றலைத் தோற்றுவிப்பதுபோல் இம்முரண்பாடும் முன்னேற்றத்தை உண்டு பண்ணக்கூடும். இவ்வாற்றல் உலகின் ஒரு சிறு பகுதிக்கெனப் பயன்படாமல் உலகின் ஆற்றல் அனைத்தையும் வெளிப்படுத்தும் வகையில் உலக முழுவதிலும் அது பயன்படுத்தப்பெற வேண்டும்.

''உலகெனும் பெரும் நூலைப் படிக்க'' விழையும் டேக் கார்ட்டின் கனவு உலகிலிருந்து நாம் தொலைவில் இருக்கிறோமா? அனைத்துலகங்களின் பிறப்பைத் தமது பேராலயங்களின் சுவர்களில் செதுக்கிய இடைக்கால மக்களின் ஆர்வம் நம்மிடம் எழவில்லையா? இப்பெரு நூல் எழுதப்பெற வேண்டும். இதை எங்கும் எல்லாரும், எல்லா மதத்தினரும் இனத்தவரும் படிக்க வேண்டும். உலக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே வரலாற்றை உருவாக்க வேண்டும் என நமது உலகம் எதிர்பார்க்கின்றது.

மாற்றத்தை ஏற்கும் அளவுக்குத் தான் நாம் மரபோடு இயைந்திருக்கிறோம் எனலாம். மாற்றத்தின் மீதுள்ள பற்றுதான் காலத்தின் அறைகூவலுக்கு மனித இனம் தரும் வீரப் பதில். அதுவே மனிதனையும் அனைத்துலகங்களையும், ஒற்றுமையின் அழைப்பை ஏற்கும் அனைவரையும் ஒன்றாக இணைக்கும்.

தமிழில் ; வள்ளுவன் கிளாரன்சு

(26ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. பள்ளிகள் புதிய சாதனங்களைப் பெற்று விட்டன. ஆசிரியர்களும் பயிற்சி பெற்று விட்டனர். கற்பிக்கும் முறைகளில் புதுமை புகுத்தப்பட்டுள்ளது. தொலைக் காட்சி, நாடாப் பதிவுக் கருவிகள், திரைப்படம், கணக்கிடும் பொறி போன்ற தற்கால சாதனங்கள் பயன்படுகின்றன. கல்வி கற்பிக்கும் வல்லுநர் புதிய திட்டத்திற்கேற்ப பாடநூல்களையும் கற்பிக்கும் சாதனங்களையும் அமைத்துள்ளனர்.

நீண்ட கால ஆய்வின் பயனாக நாடு முழுவதும் புதுப்பிக்கப்படும் கல்வித் திட்டங்கள் சோவியத் பள்ளிகளில் சேர்ந்துள்ள 5 கோடி மாணவரின் தேவைக்கென அரசாங்கம் பண உதவி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கின்றன. ரஷ்யாவில் வழங்கப்படும் எல்லா வகை கல்வியையும் சேர்த்துக் கொண்டால், ஏறக்குறைய 8 கோடி மாணவர் ஏதாவதொருவகை கல்வியில் ஈடுபட்டுள்ளனர் எனலாம். இவ்வாறெனில், ஒவ்வோராண்டும் 47 மொழிகளில் 30 கோடி பாடநூல்கள் வெளியிடப் பெறவேண்டும்.

இந்த விஞ்ஞான, தொழில் நுட்ப காலத்தில் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளை எடுத்துக் காட்டி இக்கட்டுரையைத் தொடங்கினேன். இறுதியில், இக்காலப் பள்ளிகள் இப்பிரச்னைகளைத் தீர்க்க உதவக் கூடும் என முடிக்கிறேன்.

—தமிழில் : வள்ளுவன் கிளாரன்சு

(31ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளல் ஆகிய கொள்கைகள் புகுத்தப் பட்டுள்ளன.

இத்தகைய முன்னேற்றங்கள் எவ்வளவு இன்றியமையாமையும் சிறப்பும் உடையனவாயினும், கல்வித் துறையின் எல்லாப் பகுதிகளிலும் இவற்றை நிகழ்ச்சி முறையில்,, கொண்டு வரமுடியாது. ஒரு குழந்தையைப் பயிற்றும்பொழுது மிகப் பெரும் பகுதி நேரம், ஆசிரியர் சொல்வதை அவன் ஏற்றுக் கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்படும். இம் முறையிலுங்கூடக் குழந்தை தானே அறிந்து கொள்வதற்குரிய வழிதுறைகள் காட்டப்படும். இளைஞர் கல்வித் திட்டத்தைப் பொறுத்தமட்டில் கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் வழங்கப்பட்டால் அதிலிருந்து எல்லாக் கல்வி முறையும் புதிய ஊக்கத்தைப் பெற முடியும்.

கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஒரு புதிய சகாப்தத்தில் இப்பொழுது நிற்கின்றோம். மனித வளர்ச்சிக்குரிய வளர்ச்சியில் பொருளாக அமையாமல் கல்வி என்பது மனிதனின் கைக் கருவியாக இருந்த பழைய சகாப்தம் மாறத் தொடங்கி விட்டது. கல்வி உலகத்திலேயே இத் திட்டத்திற்குரிய அடிப்படை வளர்ந்து விட்டதை அறிகிறோம். என்றாலும் பிரச்னைக்கு இது பாதி விடை ஆகுமே தவிர முழு விடை ஆகாது. அந்த முயற்சி மிகமிக விரிந்துள்ளதால் ஒரு குறிப்பிட்ட கூட்டம் எவ்வளவு தகுதி படைத்ததாய் இருந்தாலும் முற்றிலுமாக இதனைக் கொண்டு செலுத்திவிட முடியாது. இந்தப் பிரச்னைகளுக்கு விடை காண, கல்விப் பகுதி சிறந்த நிலையில் இல்லை என்பது மேலே காட்டிய காரணங்களால் புலனாகும். மேலும் வழக்காளன் ஆகவும் நீதிபதியாகவும் ஒருவனே இருத்தல் அவ்வளவு சரிப்படாது.

கல்வித் திட்டத்தின் கொள்கை, நடைமுறை என்பவற்றிலுள்ள குறைபாடுகளை அறிந்த கல்வியாளர்கள், கல்வி தொடர்ந்து செல்வதாக இருத்தல் வேண்டுமென்பதை நன்கு அறிந்து கொண்டுள்ளார்கள். கல்வி தொடர்ந்து செல்வதாக இருக்க வேண்டுமென்பதை அறிந்து கொண்டுள்ள இந்த அறிவு, இந்தப் பிரச்னை எவ்வளவு விரிந்து கிடக்கிறது என்பதையும் காட்டுகிறது. கல்வித் திட்டத்தை நன்கு விளக்குவதோடு மட்டுமேயல்லாமல் மேற்கொண்டு, என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவதற்கு இன்னும் பரந்துபட்ட ஆராய்ச்சியும் சோதனைகளும் செயல்படுகின்றன. ஒரு தனி மனிதனுடைய வளர்ச்சி எந்தக் கதியில் மாறுதல் அடைய வேண்டுமென்பதைப்பற்றியும் அதற்குத் தேவையான சூழ்நிலை என்ன என்பதைப் பற்றியும் யார் நமக்கு எடுத்துசொல்ல முடியும்? மனோ தத்துவவாதி அல்லது குணங்களை ஆராய்ச்சி செய்கின்ற தனி ஆற்றல் படைத்தவர்களுடைய பொறுப்பாகும் இது. ஒரு குறிப்பிட்ட கல்வி முறையில் ஏற்படும் பயன் யாது என்பதை யார் கணக்கிட்டு கூற முடியும்? பொருளாதார வல்லுநன் பணியாகும் இது. சமுதாயவாதியும், அரசியல்வாதியும் சமுதாயத்தின் வளர்ச்சியில் எந்தளவுக்கு காரண காரியமாக இவை அமைந்துள்ளன என்பதை சொல்ல வேண்டும். ஒரு கலைப் பொருளைப் படைப்பதற்கும் மனித வளர்ச்சிக்கும் இடையேயுள்ள உறவை எடுத்துக் கூறக்கூடியவன் கலைஞனாகவே இருக்கமுடியும்.

இந்தப் புதிய சகாப்தத்தை ஒரு வடிவு கொடுத்து வேரூன்றச் செய்ய வேண்டுமேயானால் உலகத்தில் இருக்கின்ற அத்தனை அறிஞர்கள், ஆன்மீக வாதிகள், சுருங்கக் கூறுமிடத்து, சமுதாயத்தை தாங்கி நிற்கின்ற எல்லா ஆதாரங்களும் ஒன்று சேர்க்கப்பட வேண்டும். இந்தப் புதிய கல்வித் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமேயானால் தத்துவ ஞானியின் ஞானம், கவிஞனின் கற்பனை, கல்வியாளர்களுடைய கொள்கைகள் என்பவை எவ்வளவு முக்கியமானவையோ அவ்வளவு முக்கியமாகப் பட்டறையிலும் வயல்களிலும், அலுவலகங்களிலும் பெறப்படுகின்ற அனுபவங்களும் தேவைப்படும்.

இந்தப் புதிய கல்வி முறையினால் ஆன்மீக முன்னேற்றத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் தன்னைத் தயார் செய்துகொள்கின்ற ஒரு புதிய மனிதன் கொஞ்சம் கொஞ்சமாக உருவாவான். இத்தகைய மனிதன் தன்னுடைய கல்வியின் ஆழத்தை அளந்து அறிவதற்கு திடீர் திடீரென்று விடையளித்தலும் கேள்வித் தாள்களில் தான் எழுதுகின்ற சரியான விடைகளும் அடிப்படையாக அமைந்துள்ளன எனக் கொள்ளமாட்டான். இதன் எதிராக எதனையும் கேள்வி கேட்பவனாக அவன் அமைவான். மேலும் மேலும் தொடர்ந்து செய்யப்படும் கல்வி முயற்சிகளால் மிக அடிப்படையான கவிதை, விஞ்ஞான, அரசியல் பற்றிய வினாக்களுக்கு எளிமையாகவும் நல்ல முறையிலும் விடை பகரக் கூடியவனாக அவன் அமைவான்.

—தமிழில் : அ. ச. ஞா.

யுனெஸ்கோ செய்தியறை

உலகின் கல்லாமையும் மக்கட் தொகை பெருக்கமும்

உலகில் மக்கட் தொகை பெருக்க மானது, கல்விக்கான முயற்சிகள் அத்தனையையும் பற்றாதபடி செய்து விடுகின்றது. கடந்த பத்து ஆண்டு களில் உலகில் கல்லாதோர் எண் ணிக்கை 6 கோடிக்கும் மேலாக உயர்ந்து இருந்தது. அவ்வெண் ணிக்கை, இவ்வாண்டில் 80 கோடிக்குமேல் சென்றுவிடும். 92 நாடுகளில் கிடைத்த தகவல்களைக் கொண்டு, உலகின் கல்லாதவர் பற்றி, யுனெஸ்கோ வெளியிட்ட சிறப்பு அறிக்கையிலிருந்து எடுக்கப் பட்ட தகவல்களே இவை. விரைவில் இது நூலாகவும் வெளிவரவிருக் கிறது. சில நாடுகளில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள கல்வி இயக் கங்களை முடக்கும் அளவுக்கு மக்கள் பெருக்கம் உயர்ந்து சென்று, கல்லா மையைப் பெருக்கி வருகின்றது. 1960க்கும் 1980க்கும் இடையில் ஆசிய மக்கட் தொகை 60 சத விதமும், ஆப்பிரிக்க மக்கட்தொகை 65 சதவிகிதமும் உயரும் என்று கணக்கிட்டுள்ளனர்.

பிரிட்டிஷ் அறிவியலாளருக்கு 1969இன் கலிங்கப் பரிசு

அறிவியலைப் பிரபலப்படுத்துவதற் கான 1969ஆம் ஆண்டின் கலிங்கப் பரிசானது, யுனெஸ்கோ தேர்ந்தெடுக் கும் பன்னாட்டு நடுவனர் குழுவின ரால், பிரிட்டனைச் சேர்ந்த சர் கேவின் டி பீர் என்பாருக்கு அளிக்கப் பட்டுள்ளது. இவ்வறிவியலாளர் விலங் கியல், உயிரியல் மற்றும் அறிவியல் துறைகளைப் பிரபலப்படுத்துதலில் வல் லவர் என்று பெயர் பெற்றவராவர். அவரது நூல்கள் அறிவியல், வர லாறு, இலக்கியம், தத்துவம், ஆகிய துறைகளைப் பற்றியன. அவர், 1950 முதல் 1960 வரை பிரிட்டிஷ் இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி (லண் டன்)யின் நெறியாளராகப் பணி புரிந்தவர்.

கல்வியில் ஏற்றத் தாழ்வு கற்பிக்கும் முறையை எதிர்த்துப் போராடுதல்

கல்வியில் ஏற்றத்தாழ்வு நீக்க யுனெஸ்கோ ஏற்படுத்திய மரபைச் செயல்படுத்தும் நாடுகளுக்கிடையே உண்டாகும் சிறு பூசல்களை நீக்க 'சம ரசப்படுத்தும் நல்லெண்ணக் குழு' ஒன்றினை யுனெஸ்கோ அமைக்கவிருக் கின்றது. இம்மரபுகள் 52 நாடு களில் ஏற்கப்பட்டு, 1962 முதல் நடைமுறையிலிருந்து வருகின்றன. எல்லோருக்கும் சம கல்வி வாய்ப்புக் களை வழங்கி, யாவரையும் ஒரே மாதிரி நடத்தவும் இம்மரபுகள் வழி கோலுகின்றன. மனித உரிமைகளை உயர்த்த ஐ. நா. நிறுவிய வகையில், இந்த 'சமரசப்படுத்தும் நல்லெண் ணத்துக் குழு' இரண்டாவதாகும்.

முதலாவது குழு, தொழிற்சங்கங் களுக்கிடையே உரிமைபற்றிய கருத்து மாறுபாடுகளைச் செம்மைப்படுத்த பன்னாட்டுத் தொழிற் கழகம் அமைத் ததாகும்.

வட அட்லாண்டிக்கில் ஆய்வு

இதுவரை எவரும் நிலைநாட்டாத அளவில், சோவியத் நிபுணர்கள் கடலில் மிகப் பெரும் ஆய்வு மிதப்பு வரிசைகளை 1970 பிப்ரவரியில் நிறுவ விருக்கின்றனர். கடலுக்கடியில் பத்து முதல் 3000 மீட்டர்வரை, ஆழத்தில் கடல் நீரோட்டங்களை அளக்க, 17 மிதவைகள் கனரி தீவுகளுக்கருகில் வட அட்லாண்டிக்கில் ஆறுமாத காலத்திற்கு அமைக்கப்படும். வட அட்லாண்டிக்கில் உண்டாகும் ஏற்றத் தாழ்வுகள் பற்றிய பிரச்னைகளை அறியவும், வானிலையை இவை பாதிக்கும் வகை பற்றி அறியவும், கண்காணிப்புக்கள் உதவும். இரண்டு ஆண்டுகளுக்கு முன் அரபிக்கடலில் இதே அளவில் சோதனை செய்த போது, கடலின் அரிப்புத்தன்மை இடத்துக்கு இடம் வேறுபடுவதாக சோவியத் அமைப்பு காட்டிற்று.

"யுனெஸ்கோ - ஆசியா"

புதிய இருமொழி, முத்திங்கள் இதழ் (ஆங்கிலம்—பிரெஞ்சு) ஒன்று "யுனெஸ் கோ—ஆசியா" என்ற பெயரில் டோக் கியோ (ஜப்பான்)வில் வெளிவரத் தொடங்கிவிட்டது. யுனெஸ்கோவிற் காக, ஜப்பானிய தேசியக் குழு வால் வெளியாகும் இவ்விதழ், ஆசி யாவில் யுனெஸ்கோவின் தேசியக் குழுக்களின் நடவடிக்கைகள் பற்றி அறிவிப்பதுடன், ஆசிய வாசகர் களுக்கு ஆர்வமூட்டும் சிறப்புப் பொருள்கள் பற்றிய கட்டுரைகளை யும் அளிக்கின்றது. மேற்கொண்டு தகவல்கள் பெற, ஜெனரல் அஃபேர்ஸ் டிவிஷன், ஜப்பானீஸ் நேஷனல் கமிஷன் ஃபார் யுனெஸ்கோ, 2—2 சுகனீகாசேகி 3—க்ரோம், சியோ டா—கூ, டோக்கியோ என்ற முகவரி யோடு தொடர்பு கொள்க.

புதிய நூல்கள்

- **'கிரீக் ஸ்கல்ப்ச்சர்'** — ஃபிராங்காயிஸ் சாமோவின் முகவுரையுடன்
- **'ஓஷியானிக் ஆர்ட்'**— (நியூகினியா வின் செபிக் பகுதி)
- **'வான் டைக்'** — டேவின் பைப்பரின் முகவுரையுடன்
- **'காகின்'**—ஜான் ரஸ்ஸலின் முகவு ரையுடன்
- **'மாடிஸ்சே அண்ட் தி நூட்'** — ஆலன் பௌனெஸின் முகவுரையுடன்
- **'கால்டர் மொபைல்ஸ் அண்ட் ஸ்டே பில்ஸ்'** — கியோவன்னி கரண்டென் டீயின் முகவுரையுடன்
- **'சையன்ஸ் இயர்'**
  தி வேர்ல்ட் புக் சையன்ஸ் ஆண்டுப் பதிப்பு 1969,
  பீல்ட் என்டர் பிரைசங் எஜுகேஷனல் கார்ப்பரேஷன்,
  சிகாகோ, லண்டன், ரோம், சிட்னி, டொராண்டோ, 1969.
- **'லாங்குவேஜ் - அன் இண்ட்ரொ டொக்டரி ரீடர்'**
  எழுதியவர்கள்—ஜே. பர்ல் ஹாகின்ஸ் ராபர்ட் இ. யார்பர்,
  ஹார்பர் அண்ட் ரோ, நியூயார்க், இவான்ஸ்டன் அண்ட் லண்டன், 1969 (டாலர் 4.95)
- **'சையன்ஸ் இன் இண்டியா'**
  எழுதியவர்—ஏ. கே. பிஸ்வாஸ்,
  பிர்மா கே. எல். முகோபாத்தியாயா,
  கல்கத்தா, 1969 (ரூபாய் 16 –)

செய்திக் கதிர்கள்

- முன்னேறி வரும் நாடுகளில் 1985க்குள் எதிர்பார்க்கப்படும் அதி கப்படியான 10 ஆயிரம் இலட்சம் பேரின் தேவையைச் சமாளிக்கக் கூடிய வேளாண்மைப் பெருக்க படையை, உணவு வேளாண்மைக் கழகம் 4 ஆண்டு ஆய்வுக்குப் பின்பு பரிந்துரைத்துள்ளது.
- 1446இல் அறிமுகப்படுத்தப்பட்டு, கொரிய 'ஹங்குவ்' எழுத்துக்களு டன் பயன்படுத்தப்பட்டு வந்த சீனப் தன்மைகளை கொரியக் குடியரசு, 1973க்குள் தீர்த்துக் கட்டிவிடப் போகிறது.
- பன்னாட்டு உணர்தலுக்கான யுனெஸ்கோ இணைப்புக் கல்வித்திட் டம், தற்போது 58 நாடுகளில் 666 உறுப்பினர் பள்ளிகளைக் கொண் டுள்ளது. நேபாளத்தில் நான்கு உயர் நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தில் சேர்ந்துள்ளன.
- அடுத்த ஐந்து ஆண்டுக்காலத்தில் டிரினிடாட் மற்றும் டுபாகோவில் இளைஞர் பயிற்சி முகாம்களுக்கு 304,000 டாலர் மதிப்புள்ள உணவை உலக உணவுத் திட்டம் வழங்கவிருக்கிறது.

அஞ்சல் தலை கலை

ஐ. நா. வின் அஞ்சல் நிர்வாகத் துறை "ஐ.நா. வில் கலை" என்ற வரிசையை அண் மையில் வெளியிட்டது. அதில் ஐ. நா.வுக்கு 1961இல் டுனீஷியாவால் அளிக்கப்பட்ட 3ஆம் நூற்றாண்டின் பல வண்ண ஓவியங் கள் இரண்டு, 6, 13 சதம் மதிப்புள்ள அஞ்சல் தலைகளாக இடம் பெற்றன. 'நான்கு பருவங்கள்,' 'ஆண்டின் அறிவுக்கருவூலம்' ஆகிய சின்னங்களை (நியூயார்க்) ஐ.நா. தலைமையகத்தில் இலட்சக்கணக்கான பேர் பார்வை யிட்டனர். பிரான்சில் உள்ள ஐ.நா. அஞ்சல் தலை நிர்வாகப் பகுதியான யுனெஸ்கோ அஞ்சல் தலை சேகரிப்புப் பிரிவு எல்லா ஐ. நா. அஞ்சல் தலை களையும் விற்பனைக்குள்ள முதல் நாள் உறைகளையும் வைத்துள்ளது. விவ ரங்களுக்கு "யுனெஸ்கோ பிலேடெலிக் சர்வீஸ், யுனெஸ்கோ, பிளேஸ்டி ஃபான்டினாய், பாரிஸ்-7" என்று குறிப்பிட்டு எழுதவும்.

Edited and published by T. P. Meenakshisundaram for the Southern Languages Book Trust, 458, Poonamallee High Road, Madras 10 and

யுனெஸ்கோவின் அண்மை வெளியீடு

உயிரியல் கல்வியில் புதிய முறைகள்

தொகுதி II, 368 பக்கங்கள், $ 5.00, 30/-F20

வேதியியல் கல்வியில் புதிய முறைகள்

தொகுதி II, 407 பக்கங்கள், $ 7.00, 42/-F28

அடிப்படை விஞ்ஞானக் கல்வி எனும் வரிசையில்



இஃது அடிப்படை விஞ்ஞானக் கல்வியின் தற்கால முறை, பாடங்கள், பாடத்திட்டங்கள் பற்றிய செய்திகளை நாடுகளுக்கிடையே பரிமாறத் துணை செய்கிறது. இதில் மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் வாசிக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரைகளும், தொழில் துறை சார்ந்த இதழ்களில் வெளியான கட்டுரைகளும், தனிக் கட்டுரைகளும் உள்ளன.

இவ்வரிசையில் உள்ளவை.

- **உயிரியல் கல்வியில் புதிய முறைகள்**
  தொகுதி I (1966), 2ஆம் பதிப்பு 1968, 298 பக்கங்கள்.
  4-50 டாலர்
- **வேதியியல் கல்வியில் புதிய முறைகள்**
  தொகுதி I (1964 - 1965) 2ஆம் பதிப்பு, 1968, 359 பக்கங்கள்.
  7-00 டாலர்
- **பௌதிகக் கல்வியில் புதிய முறைகள்**
  தொகுதி I (1965 - 1966), 2ஆம் பதிப்பு, 1968, 271 பக்கங்கள்.
  6-50 டாலர்
- **கணக்கியல் கல்வியில் புதிய முறைகள்**
  தொகுதி I (1966), 2ஆம் பதிப்பு 1968, 438 பக்கங்கள்.
  6-00 டாலர்

யுனெஸ்கோ கூரியர் - தமிழ்ப் பதிப்பு

ஐ. நா. வின் அங்கமாக உலக கல்வி, விஞ்ஞான, கலாச்சார மேம்பாட்டுக்கு இடையறாது பாடுபட்டுவரும் யுனெஸ்கோ அமைப்பின் மாத வெளியீடே யுனெஸ்கோ கூரியர்' இதழ்.

பலதுறை அறிவும் அனைவருக்கும் கிடைக்கச் செய்ய பதின்மூன்று உலக மொழிகளில் வெளிவரும் 'யுனெஸ்கோ கூரியர்' இதழ் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழிலும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

உலகைக் காட்டும் பலகணியாக அமைந்துள்ள இவ்விதழ் உலகம் முழுவதற்கும் அக்கறையுள்ள பிரச்னைகளைப்பற்றி உலக அறிஞர்கள் பலரும் எழுதும் சிந்தனை வளமிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்ட அறிவுக் களஞ்சியமாக மாதந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கிறது.

அகில உலகப் பிரச்னைகளை நடு நிலைமையில் அணு அணுவாக அறிந்துகொள்ள உதவும் ஒரே சர்வதேச தமிழ் இதழ் இதுவே யாகும்.

பக்கத்துக்குப் பக்கம் ஏராளமான படங்களையும் கவர்ச்சியான அழகிய அச்சு, அமைப்பும் கொண்ட இவ்விதழை மாணவர்களும் கல்வி நிலையங்களும் நூலகங்களும்—ஏன்—அறிவுத்தாகம் கொண்ட அனைவருமே இதழின் சந்தாதாரராகச் சேருவதன் மூலம் தம் உலக அறிவை வளர்க்க வளப்படுத்திக்கொள்ள அருமையானதோர் வாய்ப்பு.

ஆண்டுச் சந்தா ரூ. 10-50 கல்வி நிலையங்களுக்கு ரூ. 9-50 தனிப்பிரதி ரூ. 1-00.

தொடர்பு கொள்க

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்

458, பூந்தமல்லி நெடுஞ்சாலை

கீழ்ப்பாக்கம் : : சென்னை-10.

REGD. NO. M. 8276

பன்னாட்டுக் கல்வி ஆண்டுக்கென வாசார்லி வரைந்த படம்

பன்னாட்டுக் கல்வி ஆண்டின் இச்சின்னத்தை வரைந்தவர் புகழ்மிகு பிரெஞ்சு ஓவியரான விக்டர் வாசார்லி. ஒரே மையமுள்ள வட்டங்களாலான இப்படம் நெற்றியில் ஓரிடத்தில் உதிக்கும் அறிவினால் ஒளி பெறும் அனைத்துலக மனிதனின் உருவமான தலையைக் காட்டுகிறது.

Photo Unesco